விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 03 புதன்கிழமை (19.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## இலங்கையில் தீவிரவாதம்?

### சர்வதேச அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் தீவிர வாத நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளதாக சர்வதேச தீவிரவாதம் தொடர்பான உலகளாவிய ஆய்வு அறிக்கை ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

நோபல் பரிசு பெற்றவர்கள் மற்றும் உலகத் தலைவர்கள் உள்ளிட்டோரின் ஒப்புதலுடன் பொருளாதார மற்றும் அமைதிக்கான நிறுவனம் வெளியிட்டுள்ள இந்த ஆய்வு அறிக்கையில், இலங்கை உள்ளிட்ட 13 நாடுகளில் இந்த அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டுவந்திருந்தாலும், அங்கு மீண்டும் தீவிரவாதம் தலையெடுக்கும் அபாயம் காணப்படுவதாக


24ஆம் பக்கம் பார்க்க

# அரசாங்கத்திலிருந்து விலகியது ஹெல உறுமய

## அமைச்சர் சம்பிக்க அறிவிப்பு

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் வகித்து வந்த அமைச்சு பதவிகளை இராஜினாமா செய்ய முடிவெடுத்திருப்பதாக ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.**



இதன்படி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க உட்பட மேல் மாகாண விவசாய அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வதற்கு முடிவெடுத்திருப்பதாக அந்தக் கட்சி கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பொன்றின் போது அறிவித்தது.

இங்கு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமய கட்சியின் செயலாளர் பாட்டளி சம்பிக்க ரணவக்க, நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்து செய்து அந்த அதிகாரங்களை நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்குமாறு எமது

24ஆம் பக்கம் பார்க்க

## ரேடர் வலையமைப்பை ஆரம்பிக்கிறது இந்தியா

(டில்லி)

இந்தியாவை சுற்றியுள்ள கடற்பிராந்தியத்தை கண்காணிக்க பாரிய ரேடர் கண்காணிப்பு வலையமைப்பு ஒன்றை இந்திய பாதுகாப்பு அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இந்தக் கண்காணிப்பு வலையமைப்பு நிர்வகிக்கப்படவுள்ளது.

இந்தியக் கடற்படை அதிகாரிகள் முகாமைத்துவம் செய்யவுள்ள இந்தக் கண்காணிப்பு நிலையத்தை, இந்தியப் படைத்துறை அமைச்சர் மனோகர் பரிக்கர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்திய தகவல் முகாமைத்துவம் மற்றும் ஆய்வு நிலையத்தின் கீழ் இலங்கை மற்றும் மாலைதீவில்

24ஆம் பக்கம் பார்க்க

## மேன்முறையீட்டு மனு வாபஸ்

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் ஐவரும் தமக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் செய்த மேன்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் ஐவருக்கு கொழும்பு

24ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை ஆணையாளர் இரட்டை நிலைப்பாடு கொண்டவர்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் இளவரசர் சயிட் அல் ஹுசெய்ன் இரட்டை நிலைப்பாடு கொண்டவர் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆணையாளர் இலங்கையின் மீது அழுத்தங்களை பிரயோகித்து



வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை

24ஆம் பக்கம் பார்க்க

## 2 வருடங்களில் 4 ஆயிரம் பேர் வீதி விபத்துக்களால் பலி!

### யாழ். மருத்துவர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதும் கடந்த இரு வருடங்களில் 4 ஆயிரத்து 806 பேரும் யாழ்.மாவட்டத்தில் இவ்வருடத்தில் மாத்திரம் 17 பேரும் வீதி விபத்துக்களினால் உயிரிழந்துள்ளனர் என யாழ்.பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் விபத்துச் சம்பவங்களும் அதனால் ஏற்படும் இறப்புக்களும் குறைவடைந்து வருகின்ற போதிலும் வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வருகின்றதாக யாழ்.மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாம் எம்மில் கவனமாக இருக்காது பிறரே எம்மை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் வடக்கு மக்கள் இருப்பதனாலேயே விபத்துக்களினால் ஏற்படும் இறப்புக்கள் அதிகரித்து வருகின்றது என மருத்துவர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று பி.ப 2 மணியள

24ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை அகதிகள் தற்கொலை முயற்சி



(சென்னை)

திருச்சியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்த 20 இலங்கைத் தமிழர்கள் தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளனர்.

திருச்சியில் உள்ள சிறப்பு அகதிகள் முகாமில், பல்வேறு குற்றங்களின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு ஏராளமான இலங்கை அகதி

24ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீள ஒருங்கிணைந்ததை ரணில் கண்டு கொள்ளவில்லை

### குற்றஞ்சாட்டுகிறார் முன்னாள் தளபதி

(கொழும்பு)

யுத்தம் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்ட காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைவதனை அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க கண்டுகொள்ளவில்லை என முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட தெரிவித்துள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட எழுதியுள்ள அதிஸ்டான என்னும் நூலில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் மீள ஒருங்கிணைவதில் முனைப்பு காட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டிய உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகளை ரணில் தலைமையிலான அரசாங்கம் கடுமையாக நடத்தியுடன், இந்த விடயத்தை பெரிதாக கண்டுகொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க படையினரை மரியாதையாக நடத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஓர் சந்தர்ப்பத்தில் ஏனைய கனிஷ்ட அதிகாரிகளின் முன்னிலையில் வைத்து தம்மை ரணில் விக்ரமசிங்க, கடுமையாக திட்டியதாக வசந்த கரன்னாகொட

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண நாணய குற்றி



(கொழும்பு)

இலங்கையில் 25 வகையான புதிய 10 ரூபா நாணயக் குற்றிகள் நேற்று முதல் புழக்கத்திற்கு விடப்பட்டுள்ளன.

24ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MEDICINE**
**Academic Programme**

The Academic Programme for the New Batch (2013 A/L) of Medical Students will commence on Monday, 5 th January 2015. An Inauguration Programme will be held on 5 th January 2015 at 9.00 am in Hoover Auditorium, Faculty of Medicine. It is appreciated if the parents of each student attend this Inauguration Programme.

Registrar
University of Jaffna
09.11.2014
(C-9122)

# புலிகள் மீள...

தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் அமைந் துள்ள விடு தலைப் புலி முகாம் பற்றி விபரித்த போதே ரணில தம்மை திட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இராணு வத் தளபதி சரத் பொன்சேகாவுடன் முரண் பாட்டு நிலைமை காணப்பட்டதாகவும் தெரிவி த்துள்ளார்.

இருவருக்கும் இடையில் கடுமையான கருத்து மோதல்கள் உருவானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரபாகரனுடனேயே யுத்தம் செய்கின்றோம், சிறிய பிள்ளைக ளைப் போன்று ஒருவருடன் மோதிக் கொள் ளாமல் யுத்தத்தை வென்றெடுப்பதில் கவ னம் செலுத்துங்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுரை வழங்கியதாக வசந்த கரன்னாகொட நூல் வெளியிட்டு விழாவில் தெரிவித்துள்ளார். (எ-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**


## அமைதியின் சொற்கள்
## Words of peace

உங்கள் உள்ளத்திலே உள்ள அமைதியை அறிந்து கொள்ளு ங்கள். உங்களுக்கு பசி, தாகம் போன்ற தேவைகள் உள்ளது போலவே உள்ளத்திலுள்ள அமைதியை அனுபவிப்பதற்கான தேவை உள்ளது.

-பிறேம் ராவத்

மேலும் அறிந்து கொள்ளவும் இலவச DVD க்களைப் பெற்றுக் கொள்ளவும் அழையுங்கள் 011 725 0001

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்
பி.ப 3.00–10.00 மணி வரை (8361)

## சேவையின் நாயகனே சென்றுவா



### திரு.சி.பாலசுந்தரம்

(ஓய்வு நிலை கிராம சேவையாளர்
ஜே/261 கோப்பாய் மத்தி)

என்றும் எண்ணிட எம்மவர் போற்றிட
நன்று நாளும் நவின்றிருக்கும் சேவையோ
ஒன்றும் மாறிலா ஒற்றுமை பெற்றிட
ஒன்றி யாவருக்கும் ஓடி உழைத்துமே
இன்று ஓயினும் எம் பாலசுந்தரம்
நின்று வாழுவீர் நிச்சயமாயினும்
நன்றி கூறினும் நாளிதில் வாழ்த்தினோம்
சென்று வாரும் நீர் சேவையின் நாயகனே.

வாழ்த்துவோர்:–
இ.மயில்வாகனம் (J.P)
நாயன்மார்கட்டு.

தி.விமலன் (J.P)
சிவன் வீதி,
புத்தூர் மேற்கு.

(சி-9124)

## 31-ம் நாள் நினைவுப் பிரார்த்தனை

### அமரர் செ.டில்காந்தராசா (டிஸ் வாத்தியார்)



கடந்த 21.10.2014 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் 31-ம் நாள் நினைவுப் பிரார்த்தனை நாளை 20.11.2014 (வியாழக்கிழமை) அன்று காலை எமது வீட்டில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறவுள்ளது. இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தாங்களும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-9121) குடும்பத்தினர்:-7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## அறிவியல்நகர், கிளிநொச்சி
## மாணவர்களுக்கான தங்குமிட வசதி வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய மற்றும் பொறியியல் பீட மாணவர்கள் தங்குவதற்காக அறைகள் (Rooms) மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்க ஆர்வமுள்ள வீட்டு உரிமையாளர்கள் பிரதிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அறிவியல்நகர், கிளிநொச்சி அவர்களுடன் தொடர்பு கொண்டு தமது விபரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு மேற்படி அலுவலகத்திலோ அல்லது 021 206 0180 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
19.11.2014
(சி-9120)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகிறது
## தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி

வட பகுதியில் உயர்கல்வி வாய்ப்பினை வழங்கும் ஒரேயொரு பல்கலைக்கழகமாக யாழ். பல்கலைக்கழகம் விளங்குகிறது. அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் இப் பல்கலைக்கழகத்தில் முகாமைக் கற்கைகள் வணிக பீடமும் ஒன்றாகும். இப் பீடத்தினால் தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி முதன்முறையாக ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

### பீடத்தின் வளர்ச்சி

ஆரம்பத்தில் வணிக முகாமைக் கற்கைகள் என்ற துறையின் கீழ் வணிகமாணி, முகாமைத் துவமாணி என்ற இரு கற்கைநெறிகள் காணப்பட்டதுடன் இத் துறையானது கலைப் பீடத்தின் கீழ் இயங்கி வந்தது. 1994 இல் வணிக முகாமைக் கற்கைகள் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு வணிகத்துறை, முகாமைக் கற்கைகள் துறை என இரு துறைகள் கலைப் பீடத்தின் கீழ் இயங்கி வந்தன. 1999 இல் முகாமைக் கற்கைகள் வணிக பீடம் என தனியான பீடம் உருவாக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களிலுள்ள முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைநெறிகளின் தரத்துடன் ஒத்துப் போகக் கூடிய வகையில் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அரையாண்டுக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொழில் சந்தையில் போட்டியிடுவதற்கும் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் ஏற்ற வகையில் மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்குடன் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் 1999 இல் ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்களின் விசேட கற்கைநெறிகளுக்கு வசதியளிக்கும் வகையிலும் கூடுதலான மாணவர்களைப் பீடத்திற்கு உள்வாங்கும் நோக்கிலும் 2010 ஆம் ஆண்டு பீடத்தின் இரு துறைகளும் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டு கணக்கியல் துறை, நிதி முகாமைத்துவத்துறை மனித வளமுகாமைத்துவத்துறை, சந்தைப்படுத்தல் துறை என நான்கு துறைகள் உருவாக்கப்பட்டன. தற்போது முகாமைத்துவம், வணிகம் ஆகிய இரு கற்கைநெறிகளுக்கும் சேர்த்து வருடாந்தம் 400 மாணவர்கள் வரையில் அனுமதி பெறுவதுடன் பீடத்தில் ஏறத்தாழ 1200 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்.

### பீடத்தின் கற்கை நெறிகள்

முகாமைக் கற்கைகள் வணிக பீடத்தில் தொழில் நிர்வாகமாணி, வணிகமாணி என்ற இரு பட்டப்படிப்பு கற்கைநெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தொழில் நிர்வாகமாணி கற்கைநெறியைப் பயிலும் மாணவர்கள் கணக்கியல், நிதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் என்ற நான்கு துறைகளில் விசேடத்துவ கல்வியை தொடர முடியும். அவ்வாறே வணிகமாணிக் கற்கை நெறி பயிலும் மாணவர்கள் கணக்கியலும் நிதியும், வியாபார தொழில்நுட்ப முகாமைத்துவம் என்ற இரண்டு துறைகளில் விசேடத்துவ கல்வியை மேற்கொள்ள முடியும்.

வணிகமாணி (வெளிவாரி) கற்கைநெறியும் பீடத்தினால் நடத்தப்பட்டு வருகிறது. பீடத்தின் வளர்ச்சிப் படிகளில் ஒன்றாக 2008 ஆம் ஆண்டு இணைய வழி வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி) கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது. இக் கற்கைநெறியின் முதலாம் அணி மாணவர்கள் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டில் மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா, சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா, நுண்நிதியியல் டிப்ளோமா என மூன்று டிப்ளோமா கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள்

முகாமைத்துவ முது தத்துவமாணி, வணிக முது தத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்ட கற்கை நெறிகளும் இப்பீடத்தினால் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய வளர்ச்சிப் போக்கின் பிரதான ஒரு கட்டத்தில் இன்று முகாமைக் கற்கைகள் வணிக பீடம் காலடி எடுத்து வைக்கின்றது. தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி நவம்பர் 19–ம் திகதி அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. சமூகத்தின் தேவையை கருத்திற் கொண்டு இம் முதுமாணிக் கற்கை நெறியை ஆரம்பிப்பது தொடர்பான நீண்டநாள் கனவு இன்று நனவாகிறது. வட பகுதி மக்களின் ஒரே உயர் கல்வி நிறுவனமான யாழ்.பல்கலைக்கழகம் தனது சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் உன்னத பணியில் தொடர்ந்து புதிய புதிய கற்கை நெறிகளை ஆரம்பித்து வருவது அனைவரும் அறிந்ததே. அதன் வழியில் முகாமைக் கற்கைகள் வணிக பீடம் எதிர்காலத்தில் மேன்மேலும் புதிய கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு அயராது பாடுபடும். பீடத்தின் அபிவிருத்திக்காக பாடுபடும் பீட அங்கத்தவர்கள் அனைவரும் இணைந்து சமூகத்திற்கு பங்காற்ற உறுதிபூண்டுள்ளார்கள்.

திருமதி தனேஸ்வரி ரவீந்திரன்
இணைப்பாளர்
தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி
(சி-9123)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர்களை வழிநடத்த சரியான அரசியல் தலைமை வேண்டும்

## மானிப்பாய் இளைஞரணி அங்குரார்ப்பண நிகழ்வில் குகேந்திரன் தெரிவிப்பு

**வல்லமை உடையவர்களின் திறமைகளை பயன்படுத்தி எமது பகுதி அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கு சரியான ஒரு அரசியல் தலைமை தேவை. இதுவரை தமிழினத்துக்கு சரியான அரசியற் தலைமை கிடைக்காமை தான் நாம் சந்தித்துவரும் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் தெரிவித்துள்ளார்.**

மானிப்பாய் பகுதி இளைஞர் அணி அங்குரார்ப்பணம் நேற்று முன்தினம் மானிப்பாய் பிரதேச எதிர்க்கட்சி தலைவர் ஜீவா தலைமையில் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் புதிதாக கட்டமைக்கப்பட்ட இளைஞர் அணி உறுப்பினர்கள் முன்னிலையில் உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

இன்று உருவாக்கப்பட்டுள்ள இந்த இளைஞர் அணியானது மானிப்பாய் பகுதி அபிவிருத்தியின் சிற்பிகளாக இருக்கவேண்டும். ஒவ்வொரு இளைஞர் மனதிலும் தனது மக்கள் தனது ஊர் என்ற மனப்பாங்கு வளர்க்கப்பட்டால் எமது சமூக வளர்ச்சி தானாக வளர்க்கப்பட்டு விடும். கடந்த காலத்தில் பல இளைஞர் அமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை ஒவ்வொன்றும் தவறானவர்களது வழிநடத் தல்களால் திசைமாறி மிகமோசமான அழிவுகளை சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பது வரலாறு. ஆனால் இன்று உருவான உங்களது அமைப்பு ஒருபோதும் தவறான பாதையில் வழிநடத்தப்படமாட்டாது.

சமூகத்தினது அதிகளவான வளர்ச்சியை தூக்கிவிடும் சக்தியாக இளைஞர்களே விளங்குகின்றனர். தற்போது எமது இளைஞர்களைப் பொறுத்தளவில் அகிம்சைவழி, ஆயுதவழி ஆகியவற்றை எதிர்கொண்டு மோசமான அழிவுகளைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்கள். இருந்தும் தற்போது சில இளைஞர்கள், தேவையற்ற வழிகளில் திட்டமிட்ட வகையில் மாற்றப்பட்டு வருவது வேதனையாக உள்ளது. தற்போது வாள்வெட்டுக் கலாசாரம் எமது பகுதியில் தலைவிரித்தாடுகின்றது.

போதைவஸ்து விநியோகம் தடல்புடலாக நடைபெறுகிறது. இவற்றைத் தடுத்துநிறுத்த வேண்டியது இளைஞர்களது பொறுப்பாகும். ஏற்கனவே அழிந்துபோன எமது இனம் எதற்காக மறுபடியும் இத்தகைய தீய வழிகளை நாடுகின்றனர் என நமக்கு நாமே கேட்க வேண்டிய கேள்வியாக உள்ளது.

'24 மணி நேரமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலக கதவுகள் மக்களது சேவைக்காக திறந்திருக்கின்றது.

ஆனால் தமிழர்களது ஒட்டுமொத்த அரசியல் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுயநல அரசியல் மாயையை மக்களிடம் கட்டவிழ்த்துவிட்டு மக்களது அபிவிருத்தி பற்றி சிறிதளவேனும் சிந்திக்காது இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பங்களாதேஷில் கைது செய்யப்பட்ட 20 இலங்கை மீனவர்கள் விடுதலை

பங்களாதேஷில் கைது செய்யப்பட்ட 20 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் பங்களாதேஷ் கடல் எல்லை மீறலில் ஈடுபட்டமை தொடர்பில் அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினால் இம்மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் நாடு திரும்ப சுமார் ஒருவார காலம் செல்லும். அவர்களுடன் 4 மீனவப் படகுகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளன என்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் இடம் பெற்ற சூறாவளியினால் இம்மீனவர்கள் மியன்மார் நாட்டை நோக்கி இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதன்போதே இம்மீன வர் களை பங்களாதேஷ் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கலாசாரப் பேரவையின் செயற்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட கலை கலாசார பேரவையின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (இ-7)

# மாலக்க உட்பட எழுவரின் விளக்கமறியல் நீடிப்பு

ஸ்கொட்லாந்து நாட்டு பொறியியலாளர் மற்றும் அவரது காதலி மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா உட்பட ஏழு பேரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஏ.எம்.சகாப்தீன் நேற்று உத்தரவிடுள்ளார்.

இதேவேளை, மேற்படி ஸ்கொட்லாந்து பொறியியலாளரின் காதலி, தாக்குதலுக்குஉள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் அவரை அடையாள அணிவகுப்பில் நிறுத்தி சந்தேக நபர்களை அடையாளம் காணச்செய்ய முடியாதுள்ளதாக நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி யுவதியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, சந்தேகநபர்கள் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி கோரிக்கை விடுத்த போதிலும் அந்த கோரிக்கையை நீதவான் நிராகரித்தார்.

எவ்வாறாயினும், அடுத்த தவணை விசாரணையின் போது மேற்படி பொறியியலாளரோ அல்லது அவரது காதலியோ நீதிமன்றத்துக்கு வரத் தவறின், அடையாள அணிவகுப்பை இரத்து செய்வதாகவும் நீதவான் மேலும் தெரிவித்தார். (இ-5)


அகவை 60 இல் ஆறும் அன்னையை
உவகையால் வாழ்த்துகிறாள் மங்கையர்க்கரசி



திருமதி அற்புதராணி புவனேந்திரன்-SLTS-I
ஆசிரியர்- சமூகவிஞ்ஞானம் (பகுதித் தலைவர் இடைநிலைப் பிரிவு)

சேவை விபரம்

03.06.1977-31.12.1979- யா/ உடுத்துறை ம.வி.
01.01.1980- 31.12.1982 - யா/ கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை
01.01.1983- 27.02.1985- நு/லிந்துல சரஸ்வதி த.ம.வி
28.02.1985-31.12.1997- யா/ கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்
01.01.1998-20.07.2010 யா/ புனித சாள்ஸ் ம.வி.
21.07.2010-19.11.2014- யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

அன்புடன் வாழ்த்தும்
யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

(சி-9118)


## இராசி பலன்

19.11.2014
(கார்த்திகை 03, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை-6.02 மணிக்கு
துவாதசி மாலை 5.34 மணிவரை
அத்தம் முற்பகல் 11.06 மணிவரை
இராகுகாலம் 12.09-01.39 மணிவரை
சுபநேரம் 4.39-6.09 மணிவரை

வளவன்

**மீனம்** கனவு பலிதமுண்டு, உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு.

**மேடம்** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

**இடபம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்திதரும்.

**மிதுனம்** சந்தோசமான சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் எடுப்பீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** அனைவரையும் அனுசரித்து செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், தேகநலனில் கவனம் தேவை, வழிபாட்டால் சிறப்பினைக்காண வேண்டிய நாள்.

**கடகம்** சகோதர ஒற்றுமை மேலோங்கும், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், இல்லத்தில் இனிமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பிரயாண சுகமுண்டு.

**மகரம்** எதிர்பார்ப்புக்கள்நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தேக நலனில் தெளிவு பிறக்கும், ஆன்றோர் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு, அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்

**சிம்மம்** பொருளாதார வளர்ச்சி கூடும் நாள், சுற்றத்தார் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் வெற்றிதரும், ஆடம்பரப்பொருட்களில் விருப்பம் காட்டுவீர்கள்.

**தனுசு** நினைத்த காரியத்தை உடனுக்குடன் செய்து முடிக்கும் நிலை உருவாகும், செல் வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களை பெறுவீர்கள், போசனசுகமுண்டு.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், தொலைபேசிவழித் தகவல் மகிழ்ச்சி தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக்கேட்டு நடப்பது நல்லது, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்

**கன்னி** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால் விரும்பிய காரியமொன்று நிறைவேறும், சுப விரயங்கள் கூடும் நாள், குடும்பத்தில் சுகமும் பொறுப்புக்களும் கூடலாம், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும்

**யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரடிவாகு சிற்றம்பலம் நினைவுப் பேருரை**

இயற்கை வளங்களான, மணல்மண் மற்றும் கருங்கற்கள் களவாடப்படுகின்றன. இவை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், ஊடகங்கள் விழிப்புணர்வூட்டிய போதும் மற்றும் அரசியல்வாதிகள், அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டபோதும் இவ் முறையற்ற செயல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவற்றைச் செய்பவர்களின் மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்பட்டாலன்றி இவற்றை நிறுத்த முடியாது. பொதுமக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் இவை தொடர்பான சமுதாயக்கல்வி மூலம் மாற்றங்களைக் காண நாம் முயற்சிக்க வேண்டும்.

இலங்கையில் மனிதர்களிடையிலான முரண்பாட்டுக்கு அடுத்ததாக, பெரிய பிரச்சினையாக இருப்பது, மனிதனுக்கும் யானைகளுக்குமுள்ள முரண்பாடாகும். காட்டு யானைகளின் தாக்குதலில் பலமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சொத்துடமைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பயிர்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. யானைகள் பயணிக்கும் பாதைகளை இடைமறித்து மக்கள் தமது வீடுகளையும், வீதிகளையும் மற்றும் உட்கட்டுமானங்களையும் அமைத்ததாலேயே இந்நிலை ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அண்மைக்காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் விசர்நாய்க்கடி மற்றும் குளவிக்கடிக்கு ஆளாகி வருகின்றனர். வவுனியா புதுக்குளம்மகாவித்தியாலயம் என்றாலே, குளவிப் பாதிப்புதான் ஞாபகத்திற்கு வருகின்றது. கடந்த வடமாகாணசபைத் தேர்தலில், அங்கு பணியாற்றிய வாக்கெடுப்பு உத்தியோகத்தர் ஒருவர் குளவிக்டித்து மரணமடைந்திருந்தார். சிகிரியாவில் அடிக்கடி உல்லாசப் பயணிகள் குளவிக்கடிக்கு உள்ளாகும் செய்திகளை நாம் பத்திரிகைகளில் படிக்கின்றோம். மலைநாட்டிலும் குளவிகளின் தொல்லை அதிகமாகக் காணப்பாடுகின்றது. அண்மையில் சாவகச்சேரியிலுள்ள ஆரம்பப் பாடசாலையொன்று குளவி ஆபத்துக்காரணமாக சிலநாட்கள் மூடப்பட்டது. இந்த ஆபத்தை தடுப்பதற்கான வழிமுறைகளை நாம் இன்னும் கண்டறியவில்லை. இப்படியான பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய கல்வியே இன்று எமக்குத் தேவையாகவுள்ளது. அன்பான மாணவர்களே, உங்களின் ஆராய்ச்சிக்கான பிரச்சினைகள் இவை.

### பிராந்தியத்தின் சமூகம்சார் சவால்கள்

யுத்தத்திற்கு பின்னரான காலப் பகுதியில், வடக்குக்கிழக்கு மாகாணங்கள் பல்வேறு சமூகம்சார் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தற்காலத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு எமது பிரதேசங்களில் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. எமது இளைஞர்கள் மத்தியில், மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக்காணப்படுகின்றது.

இலங்கையில் புகையிலைப் பாவன்னயைக் குறைத்தல் என்ற பொதுநலனை அடிப்படையாகக் கொண்டு, கடந்த வருடங்களில் புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கையை மேற்கொள்வது தொடர்பாக, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரப் பணிமனையால் விவசாயிகள் விழிப்பூட்ப்பட்டனர். இதுபோன்ற நன்முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அண்மைக்காலத்தில், இந்தியாவின் கேரள மாநிலத்தில் பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்துள்ளது. அதனைப் பின்பற்றி எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளும் செயற்படலாம். "தமது வர்த்தக நிலையங்களில் புகைத்தல் பொருட்கள் விற்பதில்லை" என்று முன் மாதிரியாகச் செயற்படும் வர்த்தகர்களைப் பின்பற்றி ஏனைய வர்த்தகர்களும் செயற்பட வேண்டும்.

தற்காலத்தில் எமது சமூகத்தில் கொலை, கொள்ளை மற்றும் குழு மோதல்கள் அதிகரித்துக்காணப்படுகின்றன. தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் இவற்றை ஊக்குவிக்கின்றன. இக்குற்றச் செயல்களின் பின்னால் மறைமுகமான அரசியல் நிகழ்ச்சி நிரலொன்று உள்ளதாகவும் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அது உண்மையாயின் அதன் தோற்றுவாய் கண்டறியப்பட்டு உடனடியாக கக்களையப்பட வேண்டும். மக்கள் நலம் சார்ந்த அரசியல்வாதிகள் இதில் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

பாலியல் துஸ்பிரயோகங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் இளவயதுத் திருமணங்கள் தொடர்பான செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளிவருகின்றன. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்திலும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துச்செல்கின்றன. முகநூல் போன்ற சமூகவலைத் தளங்களின் தவறான பாவனை காரணமாக அவை சார்ந்த குற்றங்களும் அதிகரித்துக்காணப்படுகின்றன. இணையம் சார்ந்த குற்றங்களைத் தடுக்க முறையான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.



திரு.ஆ.நித்திலவர்ணன்
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

யுத்தத்தினால் விதவையாக்கப்பட்ட பெண்களிற்கான மறுவாழ்வு, மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் ஒதுக்கப்படாது, சமூகத்தோடு இணைக்கப்பட்டு வாழ்தல் என்பன சமூகத்தில் ஏற்படும் புரட்சிகரமான மாற்றங்கள் மூலமே சாத்தியப்படக்கூடியதாகும். இதுதொடர்பாக அனைவரது மனங்களிலும், சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும். எமது சமூகமட்டங்களிடையில் புரையோடிக் காணப்படும் சமூகவேறுபாடுகள் களையப்பட வேண்டும். இதற்கு நாம் கற்கும் கல்வி பயன்படவேண்டும்.

## அதிசய உலகம்

### பேசும் தாவரம்




செடி, கொடிகள் போன்ற தாவரங்கள் ஒன்றுடன், ஒன்று பேசிக்கொள்கின்றன என்று இங்கிலாந்து நாட்டில் உள்ள எக்ஸ்டெர் பல்கலைக் கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

முட்டைகோஸ் கெடியானது ஆபத்து வரலாம் என உணர்ந்தால் தனது இலைப்பகுதியில் சிறிய வெடிப்பை ஏற்படுத்துகிறது.

இதன்மூலம் ஒருவித வாயுவை வெளியேற்றி, ஒலியை ஏற்படுத்தி பக்கத்தில் உள்ள செடியை எச்சரிக்கை செய்கிறது.

இதனை நுட்பமான கேமராவின் மூலம் ஆய்வு செய்து முதன் முறையாக விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

### வெண்மை நிற ஆமை



உலகில் ஏராளமான விலங்கினங்கள் அழித்துவிட்டாலும் இன்னும் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகள் இருக்கத்தான் செய்கின்றன.

இவ்வகையில் சீனாவில் அரிய வகை ஆமை இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனாவின் ஹேனான் மாகாணத்தின் மஞ்சள் நதியின் அருகில் இந்த வெண்மை நிறமான ஆமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வகை ஆமைகள் அல்பினோ வெண் ஆமை என அழைக்கப்படுகிறது. இவை 40 செ. மீற்றர் நீளம் வரை வளரக்கூடியவையாகும். மேலும் 6.5 கிலோ எடையுடன் காணப்படும் இந்த ஆமையின உடலில் மெல்லிய சிவப்பு நிறத்திலான புள்ளிகளும் காணப்படுகிறது.

## சமைப்போம் சுவைப்போம்

### உருளைக்கிழங்கு கட்லெட்



**தேவையானவை:**

கார்ன்ஃப்ளார் (சோள மா) ஒரு கப்,
ரஸ்க் தூள் 6 டேபிள்ஸ்பூன்,
உருளைக்கிழங்கு 200 கிராம்,
கரட் துருவல் 6 டேபிள்ஸ்பூன்,
பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் 3 டேபிள்ஸ்பூன்,
பெரிய வெங்காயம் ஒன்று,
மஞ்சள்தூள் ஒரு டீஸ்பூன்.
உப்பு, எண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை:**

உருளைக்கிழங்கை நான்காக நறுக்கி... மஞ்சள்தூள், சிறிதளவு உப்பு சேர்த்து வேகவிடவும்.

ஒரு பாத்திரத்தில் 3 டேபிள்ஸ்பூன் எண்ணெய் விட்டு... நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து வதக்கி, கரட் துருவல் சேர்த்து, வேக வைத்த உருளைக்கிழங்கை தோல் நீக்கி சேர்த்து மேலும் வதக்கி இறக்கவும்.

ஆறியதும் நீளவாக்கில் உருட்டி வைக்கவும். வாணலியில் எண்ணெயை ஊற்றிக் காயவிடவும்.

கான்ஃப்ளார் மாவில் சிறிதளவு உப்பு சேர்த்து, நீர் விட்டு கெட்டியாக கரைத்து, உருட்டி வைத்த கலவையை அதில் தோய்த்து, ரஸ்க் தூளில் புரட்டி, சூடான எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரப்போட்டி முடிபு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட கல்வி கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டு பத்தாண்டு பூர்த்தியாவதை முன்னிட்டு வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரப் (மாணவர்களுக்கானது) போட்டிகளின் முடிபுகள்- 2014

**ஆரம்பப்பிரிவு (1-5)**

**அதிவிசேடம்:**

ஜெயசீலன் ரிமெக்ஷனா (யா/ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), கோ.சர்மிகா (யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்), கோகிலன் துலக்சினி (யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம்)

**விசேடம்**

ஜோ. எல். ஷெமிடா சஞ்ஜீவன் (யா/ இராமநாதன் கல்லூரி), தங்கபூரணன் எயுயின் (மு/ அனிஞ்சியன் குளம் த.க.வித்தியாலயம்), பி.அபிநயா (யா/ புற்றளை மகா வித்தியாலயம், புலோலி), இ.யனுசன் (யா/ மண்டைதீவு மகா வித்தியாலயம்), திவிசாந் (யா/ ஏழாலை மகா வித்தியாலயம்)

**சாதாரணம்**

சி.சைதன்யன், ஸ்ரீ.டினோஷா, செ.மகிந்தன் (யா/ சத்திய சாயி பாடசாலை), ஜீவகரன் தனுஸ்ரன் (யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்), உதயசூரியன் கிஷாந்தன் (யா/ இராமநாதன் கல்லூரி), இ.செந்தூரி (யா/ புற்றளை மகா வித்தியாலயம்),ந. சங்கவி (யா/ சென் தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி), பி.பொன்னுஜன் (யா/ மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை), ஞானப்பிரகாஷ் சஜிக்கா (யா/ இராமநாதன் கல்லூரி), உ.கபின்ஸன் (யா/ மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை), உ.ஷாமினி (யா/குடத்தனை கரையூர் அ.மி.த. கலவன் பாடசாலை)

**கனிஷ்ட இடைநிலை (6-9)**

**அதிவிசேடம்**

கீர்த்திகா பாபு (யா/ இந்து மகளிர் கல்லூரி), இராகவன் குணதீப் (யா/ ஹாட்லிக் கல்லூரி), கருணாகரன் கரிகரன் (யா/ பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்),

**விசேடம்**

அ.அனிஸ்ரா (யா/ சாள்ஸ் மகா வித்தியாலயம்), அ.பதுமிகா (யா/ இந்து மகளிர் கல்லூரி), மு.நிதுஜன் (யா/ இந்துக் கல்லூரி), தர்மராசா ஜனதா (யா/ தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்), சுதர்மன் தர்சிகா (யா/ இந்து மகளிர் கல்லூரி),

**சாதாரணம்**

மு.மதுமிதா, புவனேந்திரன் டக்ஷிகா, றொ.தர்சிகா (யா/ இந்து மகளிர் கல்லூரி), தி.லோஜினி (யா/ இராமநாதன் கல்லூரி)

இராசசிங்கம் தர்சிகன் (யா/ ஏழாலை மகா வித்தியாலயம்); நீரஜா சுரேந்திரன் (யா/ இந்து மகளிர் கல்லூரி), ர.தனராஜ் (யா/ நாகர் கோவில் மகா வித்தியாலயம்), க.நயுத்திரன் (யா/ ஏழாலை மகா வித்தியாசாலை), துரைராசா டஜீவன் (யா/ஏழாலை மகா வித்தியாலயம், இ.துலக்ஷன் (வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்)

**சிரேஷ்ட இடைநிலை**

**பிரிவு-10.-11**

**அதிவிசேடம்**

லவன்சிகா ஸ்ரீதரலிங்கம் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), சச்சிதானந்தன் சிந்துஜன் (யா/ஹாட்லிக் கல்லூரி), வரதலிங்கம் கஜீபன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

**விசேடம்**

சாளினி மகாலிங்கம் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), கஜானி பாலேந்திரா (யா/ இந்து மகளிர் கல்லூரி), தில்லைநாதன் திஜீதரன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), செல்வரத்தினம் துஷாந்தன் (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), தெ.கிளவ்டின் (யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

**சாதாரணம் (10-11)**

சண்முகவடிவேல் சசிவதனன் (யா/இணுவில் மத்திய கல்லூரி, சிறிரஞ்சன் சயந்தன் (யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்), த.தனுஸ்ராஜ் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), குணசேகரன் மோனிசா (வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்) சி.கோகுலராஜ் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), மாணிக்கராஜா டினோஜன் (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), வினிசா அகில்ராஜ் (யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), கருணாநிதி நிரோசனா (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), பவானந்தம் நிஷாந் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), ஜே. றொபேட்ஷன் (யா/ புனித சாள்ஸ் மகளிர் கல்லூரி)

**உயர்தரம் (12-13)**

**அதிவிசேடம்**

உதயகுமார் ராம்கி (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), இராசரத்தினம் கபினயா (யா/ இந்து மகளிர் கல்லூரி), வசீகரகுலம் தனுசியன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**விசேடம்**

யோ.ஹம்சிகா (யா/ கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் மகா வித்தியாலயம்),வினுசன் (யா/சென். பற்றிக்ஸ் கல்லூரி, சோதிநாதன் யுரோனிகா (யா/ இராமநாதன் கல்லூரி), ஜனனி சிவகுமாரன் (யா/ இந்துக் கல்லூரி), சுசிதா பூலோகராசா (யா/ இந்து மகளிர் கல்லூரி)

**சாதாரணம்**

ரவீந்திரன் விதுரா (யா/ இராமநாதன் கல்லூரி), தங்கராசா தவப்புதல்வன் (வ/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்), உ.ரஞ்சிதா (யா/இராமநாதன் கல்லூரி), ஜெ.அன்ரலினா, ச.சயந்தினி (யா/ கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வித்தியாலயம்), பிரபானுஜா சிவகுமாரன் (யா/ இராமநாதன் கல்லூரி), சூ.கனோயின் பிறேக்கா யா/ கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வித்தியாலயம்), கு.டுசாந் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), லக்சிகா ரமேஷ்குமார் (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), தேவராஜன் விதுசன் (யா/ ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் பெயர் விபரம் பீடாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பொது வேட்பாளராவதற்கு கருவே தகுதியானவராம்

அரசாங்கத்தை வீழ்த்தும் பொது எதிரணியின் பொது வேட்பாளராக கரு ஜயசூரியவே தகுதியானவர். பொது எதிரணியின் பேச்சுவார்த்தையின் போதும் அவரையே தெரிவுசெய்துள்ளனர் என தெரிவிக்கும் ஐக்கிய பிக்குகள் முன்னணி தமிழ், சிங்கள, முஸ்லிம் வாக்குகளை முழுமையாகப் பெறவேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சி தற்போது மிகச்சரியான முடிவினை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டது.

ஐக்கிய பிக்குகள் முன்னணியினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போது பிக்குகள் முன்னணியின் செயலாளர் போபிடே தம்மெஸ்கர தேரர் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தை வீழ்த்தவும் இந்த நாட்டில் ஜனநாயகத்தினை ஏற்படுத்தவும் வேண்டுமாயின் மக்கள் தற்போது சரியான முடிவினை எடுக்க வேண்டும். மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமக்கான தலைவரை தெரிந்தெடுக்க வேண்டும். அதேபோல அரசாங்கத்திற்கு எதிரான பொது எதிரணியின் கூட்டணி தயக்கமின்றி தமது தலைவரை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியுடன் சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைவதில் தயாராக இருக்கின்றனர். ஆனால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் சில விட்டுக் கொடுப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 34 1/2 செவ் 4 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/2081

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 21 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L/ சுவிஸ் PR
தொ.இ: B/2082

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 17
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: B/2085

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: 22 1/2 சூரிசெவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC மாவட்டஅதிகாரி
தொ.இ: B/2086

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 21
உயரம்: 156 cm
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தும் ஏற்கப்படும்
தொ.இ: G/3134

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 84 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3138

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 22 3/4 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L/ ஆசிரியஉதவியாளர்
தொ.இ: G/3139

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 64 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, MSc/ வங்கி உத்தியோகத்தர்
தொ.இ: G/3140

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] வியாழக்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



வலிகாமம் தெற்கு பிரதேச சபை
වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
My.No:NP/14/41(15) /1/OS/2014 CHUNNAKAM Date:18.11.2014

**வலிகாமம் தெற்கு பிரதேசசபை**
**சுன்னாகம்**
**வெளிவாரி அடிப்படையிலான ஆளணிக்கான கேள்வி அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கொத்தியாலடி திண்மக்கழிவு முகாமைத்துவ வளாகத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிலிசறு வேலைத்திட்டத்திற்கு பின்வரும் ஆளணியை வெளிவாரி அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதற்குரிய கேள்விகள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன. *

1. காவலாளி -02
2. சுகாதாரத் தொழிலாளி- 05

கேள்வி விண்ணப்பப்படிவம் வழங்கும் திகதி 19.11.2014
விண்ணப்ப முடிவுத்திகதி 26.11.2014

ஆர்வமுள்ள கேள்விதாரர் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி **செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம** எனும் முகவரியில் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கமுடியும். மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**தியாகராசா தியாகச்சந்திரன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(சி-9119)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவப் பயிற்சிகள் பிரச்சினைக்கு தீர்வல்ல

## ஐ.தே.க.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இராணுவப் பயிற்சி வழங்கப்படுவதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது எனவும் நாட்டின் பல்க லைக்கழக கட்டமைப்பு பாரியளவில் அரசியல் மயப்ப டுத்தப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் குற்றம் சுமத்தியுள்ளார்.**

பல்கலைக்கழக விரிவுரையா ளர்கள் மற்றும் மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நட வடிக்கை எடுக்கப்படவில்லை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, ஜனாதிபதியின் பதவிப் பிரமாண நிறைவிற்கு வாழ்த்து கூறி பாரிய பதாகைகளை காட் சிப்படுத்துகின்றது. இதற்காக பாரிய ளவில் பணம் செலவிடப்பட்டுள்ளது.

எனினும், பல்கலைக்கழக மாணவர்கள் சிற்றுண்டிச் சாலை யில் உட்கொள்ள உணவு கிடைப்ப தில்லை.

இராணுவப் பயிற்சி வழங்கபபடு வதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளு க்கு தீர்வு காண முடியாது. பல்கலை க்கழகங்களில் ஆங்கில, கணித பாட கற்கைநெறிகளை ஏற்படுத்தி அதன் மூலம் உருவாகும் பட்டதா ரிகளுக்கு ஏன் ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்பட முடியாது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்க ழகத்தின் துணை வேந்தர் அர சியல் ரீதியாக நியமிக்கப்பட்ட ஒரு வர் என அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த நாடாளு மன்ற விவாதத்தில் நேற்று முன் தினம் பங்கேற்று உரையாற்றிய போது அகிலவிராஜ் இதனை தெரிவித்தார். (இ-5)




## நட்டத்தில் இயங்குகிறது ரயில்வே திணைக்களம்

இலங்கை புகையிரத திணை க்களம் கடந்த சில வருடங்க ளாகவே பெரும் நட்டத்துக்கு முகம் கொடுத்து வருகிறது எனப் போக் குவரத்து அமைச்சர் குமார வெல் கம நாடாளுமன்றில் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் கொழு ம்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ரவி கருணாநாயக்க எழுப் பிய கேள்வி ஒன்றுக்குப் பதில ளிக்கையில் குமார வெல்கம மேற் கண்டவாறு தெரிவித்தார். ரவி எம்.பியின் கேள்விக்குப் பதிலளித்த அவர் தெரிவித்த மேலதிக விவ ரங்கள் வருமாறு,

கடந்த வருடம் இலங்கை புகை யிரத திணைக்களத்துக்கு சுமார் ஐந்து பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. 2012 இல் ஏற்பட்ட நட்டம் சுமார் மூன்று பில்லியன் ரூபா எனவும் கணிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டுக்கான நட்டம் இன்னும் கணிக்கப்படவில்லை. தற்சமயம் புகையிரத திணைக் களத்தில் மொத்தமாக 16 ஆயிரத்து 111 பேர் பணியாற்றுகிறார்கள். எனினும் இன்னும் மேலதிக நிய மனங்களை வழங்க வேண்டி யுள்ளது.

திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனைத் தவிர, புகை யிரத திணைக்களத்துக்கு வேறு இடங்களில் நீண்ட கால, குறுகிய கால, நடுத்தர கால கடன்கள் எதுவும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



வடமாகாண விவசாய அமைச்சினால் நவம்பர் மாதம் மரநடுகை மாதமாக பிரகடனப் படுத்தப்பட்டதை தொடர்ந்து மரநடுகை விழாவும் மாண வர்களுக்கான மரக்கன்றுகளை விநியோகிக்கும் நிகழ்வும் கடந்த 4 ஆம் திகதி ஊர்காவற்றுறைத் தொகுதி சரவணை ப்பகுதி யிலுள்ள திருவள்ளுவர் சன சமூக நிலையத்தில் இடம் பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டினார்.

மேலும்இதன் போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் இளை ஞர் அணியைச் சேர்ந்த ஜெயபாலன், ஆசிரியர்கள் ,மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பல ரும் கொண்டனர். (இ-23)

## தரம் 5 பரீட்சை பெறுபேறுகள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை யில் திருத்தம் செய்யப்பட்ட வெட்டுப் புள்ளிகள் நேற்று முன்தினம் வெளி யிடப்பட்டன. இதன் பிரகாரம்,

யாழ்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

கே.குருவரன்-157,ஏ.சுவேதன்-157,ரி.பிரதீபன்-157,ஆர். கீர்யன பிரியன்-156,பி.பெனிலோ-155, எஸ்.அனோஜன்-155, எஸ்.துர்க் காந்தி-155,கே.தனன்ஜயன்-154, எம்.மதங்கினி-154,கே.பருக்தியா-153,எஸ்.பிருந்துவி-153, ஏ.ஜெறின் இன்பற்றா-153,எஸ்.விதுசாஜினி-153,என்.அனுஜா-153,ரி.தரணிகா-152,ஜி.கெய்னா கெர்லின்-152, எஸ்.சங்கவி-152,ஜெ.சண்முகப் பிரியன்-151, ரி.லஜிதரன்-151,ஏ. சரவணகரன்-151,என்.கம்ஷிகா-151, ஆர்றுக்சிகா-151,எஸ்.சலக்சிகன்-150,ஆர்.சரணா-150, ஜெ.நிறோ ஜன்-150 ,எஸ் அல்பிரட் பிரஜித் 150,ஜெ.அஜன்-150.

அருணோதயக் கல்லூரி

எஸ்.இமெல்டிலின்-157, எம்.சசி ந்தன்-156,ரி.செந்துஜா-156, எஸ். சாரங்கா-155,ஏ.நிலாஞ்சலி-151, எம்.தனுஜா-150. (இ

## யாழில் நேற்று மட்டும் 106.9மி.மீ.மழைபதிவு

யாழ். மாவட்டத்தில் நேற்றைய தினம் 106.9 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகி யிருப்பதாகதிருநெல்வேலிவானிலை அவதானிப்பு நிலைய பொறுப் பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்றுக்காலை 8.30 வரை 77.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் நேற்று முன்தினம் மாலை 5.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரையில் 106.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதி வாகியிருப்பதாகவும் அவர் தெரிவி த்தார்.

நேற்று முன்தினம் ஆரம்பித்த மழை நேற்று முழுவதும் விடாது கொட்டியதனால் யாழில் உள்ள உள் ளூர் வீதிகள் பெரும்பாலானவை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தாழ் நிலப் பிரதேசங்களிற்குள் மழை நீர் தேங்கியுள்ளதனால் குறி ப்பாக பொம்மை வெளிப்பகுதியு ள்ள கிராமங்கள் கரையோரக் கிராமங்கள் என்பன கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் தேங்கி நிற்பதனால் மக்களின் குடிசைகளிற்குள்ளும் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதனை யும் அவதானிக்க முடிந்துள்ளது.

மேலும் இவ்வாறான இடங்க ளில் பெரும் சுகாதார சீர்கேடும் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்த க்கது.

இதே வேளை யாழ் நகரப் பகுதி யிலுள்ள கழிவு நீர் ஓடும் வாய்க் கால் வெள்ள நீரினால் நிரம்பிக்கா ணப்படுவதோடு ஏற்கனவே டெங்கு நுளம்பின் உற்பத்தியிடமாக காண ப்பட்ட இவ்வாய்க்கால்கள் சுகாதார சீர்கேட்டுக்கு ஏதுவான இடமாக அதி தீவிரமாக உருவாகியுள்ளன.

குறித்த வாய்க்காலினை சுகா தார முறைப்படி பேணுமாறு மக்க ளினாலும் பயணிகளினாலும் கோரி க்கை விடப்பட்டிருந்த போதும் அவை உரிய முறையில் பராமரிக்கப்படவி ல்லை இந்நிலையில் பருவ நிலை தீவிரமடைந்துள்ளதால் சுகாதார த்திற்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தி விடும் என்று அச்சப்படுகிறது. (இ-4)

## 90 ஆயிரம் காணித்துண்டுகள் காணியற்ற மக்களுக்கு வழங்கல்

### அமைச்சர் ஜனக தெரிவிப்பு

காணியற்ற மக்களுக்கு ஒரு இலட்சம் காணித்துண்டுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் இது வரை 90ஆயிரம் காணித் துண் டுகள் வழங்கப்பட்டதாக காணி மற் றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக தென்னக்கோன் தெரிவித் தார்.

2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுக கான நிதி ஒதுக்கீடு குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கம ளிக்கும்முகமாக நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத் தின் செய்தியாளர் கூட்டத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்த செய்தியாளர் மாநாட்டில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக தென்னக்கோன் தொடர்ந்து கருத்து தெரிவிக்கை யில்,

30 வருட காலமாக பொத்து வில் பகுதிக்கு எந்த ஒரு அமைச்ச ரும் காலடி வைக்கவில்லை என் றும் தாம் அப்பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் காணிப் பிரச்சினைகளை தீர்த்து வைத்ததாக கூறினார். 12 வருடங் களுக்கு முன்னர் போலியான முறையில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட பல காணி உறுதிப்பத்திரங்கள் கண்டுபிடிக் கப்பட்டு அவை கைப்பற்றப்பட்டன.

யுத்தத்திற்கு முன்னர் வேறொரு விவசாயிக்கு உரித்தான பல வயல் நிலங்கள் யுத்தம் முடிந்த பின்னர் பிறிதொருவரின் பெயருக்கு அவை மாற்றப்பட்டிருந்தன. இது போன்ற மேலும் பல சட்டவிரோத செயல்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வா றான தவறுகளை கண்டு பிடித்து காணி உரித்தானவருக்கே காணி களை ஒப்படைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கற்றுத்தந்த பாடங்கள் நல்லி ணக்க ஆணைக்குழுவின் சிபா ரிசுகளுக்கிணங்க வடக்கு கிழக்கு பகுதிகளின் பல காணிப் பிரச்சினை களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் வடக்கில் 53ஆயிரத்து 107 அரச காணிப்பிரச்சினைகளுக்கு வெற் றிகரமாக தீர்வு காணப்பட்டன. அவ்வாறே கிழக்கு மாகாணத்தில் 3ஆயிரதது 487 காணிப் பிரச்சினை கள் வெற்றிகரமாக தீர்க்கப்பட்டதாக வும் காணி மற்றும் காணி அபி விருத்தி அமைச்சர் ஜனக தென்னக் கோன் மேலும் தெரிவித்தார். (இ-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## 2014 தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்


டா. போல்பரமதயாளன் 182



ரா.சேந்தன் 180


பி.லக்ஷிகன் 177


அ.அஜித்டிலைக்ஷன் 174


ச.கார்த்தீபன் 170



ச.சயந்தன் 169



யோ.சஜிந் 168


இ.அபிஷான் 167


ஸ்ரீ.ஹரிபிரசாந் 166


வி.ஆர்த்திகன் 166


ஸ்ரீ.பிரசாந் 164


ட.டானியல் 161


ச.வருணசர்மா 161



லெ.சந்தோஸ் 159


பீ.கிரேக்ஷன் 159


ரா.யாழவன் 157



அ.திவேதிகன் 157


ந.சுவீகரன் 155


இ.அபிஷாந் 155


அ.அகீபன் 153


கே.அஜந்தன் 152


வி.பிரவீன் 152


பா.சாயிறூபன் 151


அ.டியாக்சன் 150

## 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம்

நா.கரீசன்-147, த.சதுர்சன்-128, பு.றினொஜ்-132 , மொ.அபினாஷ்-108, மி.சஞ்ஜீவன்-138, ம.அபிதன்-148, அ.பிரசாந்-136, ற.தினேஸ்குமார்-106, றொ.அஜய்-115, ந.நிருசன்-149, கே.றிஷான்-102, ந.சிவதர்சன்-148, த.கரீஸ்-119, க.ஆகாஸ்-130, சு.ராகுல்-129, றெ.ஜக்சன்-116, கு.வினிதன்-117, பு.அபிசன்-144, ச.மதனறாஜ்-132, அ.டர்வின்-145, ச.ஜெறிக்ஷன்-132, ஞா.றதீசன்-130, பி.சந்தோஷ்- 127, ச.துசாந்-148, க.கௌதமன்-117, அ.யூட்ஆஹறாஸ்-145, ஜோ.திசான்-142, ஜே.விதுசன்-103, ஞா.கௌதம்-115, ற.விஸ்ணுகன்-142, ஸ்ரீ.ராஜ்குமார்-123, டி.அர்சுன்-123, சு.தரிஸ்-124, ச.டிலக்சன்-138, பி.பிரணவசர்மா-128, வி.டிலக்சன்-105, யூ.நியுசிகன்-104, கு.அபிதன்-125, யூ.வினோத் பிரபாகர்-134, சு.தேனுயன்-113, யோ.வினுயன்-116, க.கம்சிகன்-106, ஜோ.சுயந்தன்-144, ச.றவின்சன்-137, த.ஜனுயன்-117, றெ.பெனாயா-149, இ.சஞ்சய்-108, டொ.டொனால் நிக்ஷன்-132, ர.நிதர்சன்-122, கு.கவிதரன்- 109

**எமது கல்லூரியில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அவர்களை நல்ல முறையில் தயார்படுத்தி வழி நடத்திய ஆசிரியர்கள், ஆரம்பப் பிரிவு உதவி அதிபர், கல்லூரி முதல்வர், பிரதி, உப அதிபர்களையும் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.**

**பெற்றோர்கள்**

**தரம்-5**

(8360)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அடையாளம்' சஞ்சிகை வெளியீடு


(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட ஊடகக் கற்கை மாணவர்களின் அடையாளம் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் ஊடகக்கற்கை மாணவன் க.நிவாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.




இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட மாணவ ஆலோசகர் மற்றும் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணமும் கௌரவ விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவரும் ஊடகக்கற்கைகள் இணைப்பாளருமான பேராசிரியர் கி.விசாகரூபனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சஞ்சிகை ஆய்வுரையினை யாழ். பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் இ.ரட்ணம் வழங்கவுள்ளார். (இ-7)




நன்றி: அததெரண

# நோய் உதவிக் கொடுப்பனவை தபாலகங்களில் பெற முடியும்

யாழ்.வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மார்கழி மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவி மற்றும் நோய் உதவிக் கொடுப்பனவு என்பவற்றை பெற்றுக் கொள்பவர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை தத்தமது தபாலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என கோப்பாய் பிரதேச செயலர் ம.பிர தீபன் அறிவித்துள்ளார்.

இவ் உதவிக் கொடுப்பனவுத் தொகைகளை மேற்குறிப்பிடப்பட்ட திகதி மட்டும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார் . (இ-7-134)

# வருடம் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி

யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய (எமது பாடசாலை) மாணவர் ஒருவருக்கு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அண்மையில் துவிச்சக்கரவண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இது கற்றலில் ஆர்வமுள்ள பெற்றோர் ஆதரவை இழந்த மாணவருக்கு வழங்கப்பட்டது. வருடம் ஒரு. வருக்கு என்ற ரீதியில் இது மூன்றாவது மாணவருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே வழங்கப்பெற்ற துவிச்சக்கரவண்டிகளை 2013, 2012 இல் கல்வி கற்ற மாணவர்களுள் இருவர் பெற்றுக்கொண்டனர். (இ-7)

# நிறைவுநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொதுநூலக தேசிய வாசிப்பு மாத நிறைவுநாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச சபைத்தவிசாளர் எஸ்.துரைராஜா தலைமையில் மிருவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் தி.தர்சினி, உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபர் த. சோதிலிங்கம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம் பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது நூல்கள் அன் பளிப்பு, நூலக இலவச அங்கத்துவம் வழங்கல், தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளதாக மிருசுவில் பொதுநூலக நூலகர் திருமதி எஸ். சிவாஜினி அறிவித்துள்ளார். (இ-7-29)

# ஜனாதிபதியின் பிறந்ததினத்தை முன்னிட்டு ஆளுநர் செயலகத்தில் விசேட நிகழ்வுகள்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 69 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதியவர்களுக்கு விசேட உதவிகள் நேற்று வழங்கப்பட்டன.

சமூகசேவைகள் அமைச்சுடன் இணைந்து ஆளுநர் செயலகத்தினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட மூத்த பிரஜைகள் கழகத்தினரினால் இந்த உதவிகள் முதியவர்களுக்கு வழங்கப்பட்டன.

இதன்படி நோய்வாய்ப்பட்ட முதியவர்களுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் அத்தியாவசிய உதவிப்பொருட்கள், பழமரக்கன்றுகள் ஆகியன வழங்கப்பட்டதுடன் முதியோர் அடையாள அட்டைகளும் 300 முதியவர்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும் முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் ஒன்றும் நேற்றைய தினம் நடைபெற்றது. யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற றும் அமைச்சர் கே.என் டக்ளஸ தேவானந்தா ஆகியோர் பிரதம விருந்தனர்களாக கலந்துகொண்டு உத விகளை வழங்கிவைத்தனர். (இ-5)

# வேகமாக செல்லும் வாகனங்களால் அச்சத்துடன் பயணிக்கும் பயணிகள்

## வடமராட்சியில் தொடர்கிறது அவலம்

(குடத்தனை)

யாழ்.வடமராட்சி பருத்தித்துறை வீதியில் மணல் ஏற்றிக்கொண்டு செல்கின்ற ஹன்ரர் ரக வாகனங்கள் அதிவேகமாக செல்வதனால் பாடசாலை மாணவர்களும் பாதசாரிகளும் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

குறித்த வீதியானது அகலம் குறைந்ததாகவும் மேடு பள்ளங்கள் நிறைந்து காணப்படுவதாலும் இவ்வாறான ஹன்ரர் ரக வாகனங்கள் அதிவேகமாக செல்லும் வேளைகளில் பாதசாரிகள் பல தரப்பட்ட பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இதனால் இவ்வீதியூடாக செல்லும் சிறுவர்கள் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக அவர்களது பெற்றோர்களால் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எமது பிள்ளைகள் பாடசாலை விட்டு வரும் பொழுது நாம் தினமும் சென்று அவர்களை வீடு வரை கூட்டி வருகின்றோம் என பெற்றோர்கள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.

ஏனெனில் பாடசாலை விட்டு வரும் தமதுபிள்ளைகள் தனியாக அவ்வீதியூடாக வந்தால் தமது பிள்ளைகளை உயிருடன் பார்க்க முடியாது என்கிறார்கள்.

அவ்வாறான அதிவேகப் பயணங்களை குறித்த ஹன்ரர் ரக வாகனங்களினது சாரதிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வாகனங்கள் அதிவேகமாக செல்லும் போது வீதியை ஊடறுத்து மறுபக்கம் செல்லும் பாதசாரிகளை கூட கவனிப்பதில்லை.

இதனால் பாரதூரமான விபத்துக்களை அப்பிரதேச மக்கள் எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. அத்துடன் செப்பனிடப்பாத வீதி மூலம் குறித்த கனரக வாகனங்கள் செல்லும் போது புழுதிப் படலங்கள் கிளம்பி பாதசாரிகள் மீது அள்ளிக் கொட்டப்படுகின்றன.


இதனால் பாடசாலை மாணவர்களது சீருடை தினமும் அழுக்காக்கப்படுகின்றன. தற்போது மழைக் காலம் என்பதால் புழுதிப்படலம் இல்லாது வெள்ளநீர் பாதசாரிகள் மீது தெறிப்படைகின்றது.

எனவே இது சம்பந்தமாக உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்

குறித்த வாகனங்களின் வேகம் கட்டுப்படுத்தப்படுவதோடு செப்பனிடப்படாது இருக்கும் வீதியும் செப்பனிடப்படவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7-20)

# யாழ். சாவகச்சேரி இளைஞர் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது

## தலைவராக கிசோர் தெரிவு



(யாழ்ப்பாணம் )

யாழ்.சாவகச்சேரி நகர இளைஞர் கழக அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இளைஞர்களின் சமூகம் சார் சேவைகளை ஊக்குவிக்கும் முகமாகவும், அனைத்து இளைஞர்களும் ஒன்றிணைந்து செயற்படும் முகமாகவும் இந்த இளைஞர் கழகமானது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத்தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை கலந்து கொண்டு இளைஞர் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இலங்கை இளைஞர் கழகத்தின் தேசிய சம்மேளன உப தலைவரும் யாழ். மாவட்ட தலைவருமாகிய எஸ். விஜிதரன் கலந்து கொண்டு இளைஞர் கழகத்தில் அங்கம் வகிப்பதால் கிடைக்கும் வரப் பிரசாதங்கள் மற்றும் இளைஞர்கள் எவ்வாறு ஒன் றிணைந்து செயற்படுவது தொடர்பாகவும் கலந்து கொண்ட இளைஞர்களுக்கு விளக்கமளித்தார்.

சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்தின் தலைவராக சாவகச்சேரி நகராட்சி மன்ற உறுப்பினர் ஞா.கிசோர் , செயலாளராக மு.கோகுல்ராஜ் , பொருளாளராக ப.தயாபரன் உட்பட ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-5)

# வடமராட்சியில் கட்டாக்காலி மாடுகளால் பயிர் நிலங்கள் நாசமாக்கப்படுகின்றன

யாழ். வடமராட்சி கரவெட்டி கரணவாய் கிழக்கு வயல்வெளிகளில் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை நாசம் செய்வதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வயல்களுக்கு அண்மையாக மாடுகளை கட்டிவிட்டு செல்லும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு விவசாயிகள் எடுத்துக்கூறினால் உரிமையாளர்களால் கவனம் செலுத்தப்படுவது இல்லை.

தினமும் மாடுகள் எல்லைமீறி வயல்களுக்குள் வந்து பயிர்களை நாசம் செய்துவிடுகின்றன.

இதனால் வயல்வெளிகளில் காத்துக்கிடக்கும் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

வயல்களுக்கு அருகில் மாடுகளை கட்டாதீர்கள் என விவசாயிகள் மாடுகளினது உரிமையாளர்களிடம் தெரிவித்திருந்தபோது விவசாயிகளுக்கும் அவர்களுக்கிடையிலும் முறுகல் நிலை ஏற்படுகின்றது.

இது தொடர்பாக விவசாயிகள் கமக்கார அமைப்புகளுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

எனவே உரிமையாளர்கள் தமது மாடுகளை கட்டிவளர்க்க வேண்டும். இல்லையெனில் தாம் இது தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறையிடவுள்ளோம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (இ-7-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் வலயக் கல்வித் திணைக்களத்தின் தேசத்தின் நிழல் எனும் மரம் நடுகைத் திட்டம் யாழ். திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை வளாகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், தொழில்நுட்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேளினி மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: மயூரப்பிரியன்)

## சிவில் பாதுகாப்புக் கூட்டம்

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கோப்பாய், அச்சுவேலி பொலிஸ்நிலையங்களின்பொறுப்பதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். எனவே வழமையாக கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் அனைவரும் கூட்டத்திற்கு கலந்து கொள்ளும் படி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7-134)

# சந்திரிகா, ரணில் மட்டுமின்றி மகிந்தவும் வாக்குறுதியளிப்பு

### ஹசன் அலி தெரிவிப்பு

**அம்பாறைக்கு தனி மாவட்டச் செயலகமொன்றை அமைத்துக் கொடுப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் உறுதிமொழி வழங்கியிருந்தார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமன்றி தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்த வாக்குறுதியை அளித்திருந்தார்.**

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது பொது வேட்பாளரா இல்லையா? என்பது பற்றி எமக்குப் பிரச்சினை கிடையாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி போட்டியிடும் தேர்தல் கிடை யாது. அம்பாறைக்கு நிர்வாக மாவட்டமொன்றை கோரியிருந்தோம்.

இவ்வாறு கோரியமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச, நாம் நாட்டை பிளவுபடுத்த முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் கருத்துக்கு பிரதமர் டி.எம். ஜயரட்னவும் ஆதரவளித்திருந்தார்.

நாட்டை பிளவுபடுத்தி தருமாறு நாம் கோரவில்லை. ஓர் நிர்வாக மாவட்டமொன்றை வழங்குமாறே நாம் கோரினோம்.

இந்தக் கோரிக்கையை சில தரப்பினர் திரிபுபடுத்தி நாட்டை பிளவடையச் செய்வதாக பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் ஓர் நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர்.

தனி நிர்வாக மாவட்டம் குறித்த கோரிக்கைக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும், முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் உறுதியளித்திருந்தனர்.

2012 கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைத்த அரசாங்கம் நிர்வாக மாவட்டம் தொடர்பிலான பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக எழுத்து மூலம் உறுதியளித்துள்ளது என ஹசன் அலி சிங்களப் பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் வாக்குகள் தேவையென்றால் அவர்களின் கோரிக்கைக்கும் அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார் (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 160 |
| தக்காளி | 150 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 200 | 140 | 200 |
| பூசணி | 60 | 40 | 50 |
| புடோல் | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 140 | 120 |
| லீக்ஸ் | 250 | 160 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | - | 350 | 160 |
| போஞ்சி | 160 | 180 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 50 | 35-40 |
| இராசவள்ளி | 250 | 140 | - |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 197

பாரதி மகராஜ்

இன்றைய "கல்வி" வேறு எதையும் சொல்லி கொடுப்பதில்லை



இன்றைய கல்வி மதிப்பெண்ணுக்காக மட்டுமே, மற்றவர்களை மதிப்பதற்கு அல்ல...!

அபிசேக் உமாகாந்தன்



தசா ஜெயா

நம்ம நாராயணசாமி கல்லூரியில் படிக்கும் போது ஒருமுறை பேராசிரியர் ஒரு கேள்வி கேட்டார்....

பேராசிரியர் :- தமிழில் முதலில் வெளிவந்த மௌன திரைப்படம் எது...?

நாராயணசாமி கொடுத்த பதிலில் இருந்து பேராசிரியர் கேள்வி கேட்பதையே நிறுத்தி விட்டாராம்... இதுதான் அவர் சொன்ன புதில்

**படம் மௌனம் என்று சொல்கிறீர்கள்... அப்புறம் உங்களுக்கு எப்படி தெரிந்தது அது தமிழ் படம் என்று..?**

ரத்தினசபாபதி பாலராஜா

பிறருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வது கொலை செய்வதற்கு சமம்...!

தற்பெருமை பேசுவது தற்கொலை செய்து கொள்வதற்கு சமம்...!

பிறோன்சன் பிறோன்சன்




சக்தி வேல்

**"காதலிக்கும் மனைவிக்கும் என்ன வித்தியாசம்...!"**



"காதலியை சொந்தமா பைக் வாங்கி கூட்டிட்டுப் போகணும். மனைவியை அவ அப்பா வாங்கித் தரும் பைக்கிளிலே அழைச்சிட்டுப் போகணும்"

**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள் - கிழக்குமாகாணம்


**விஞ்ஞானம்** **மூன்று மணித்தியாலம்**

## பகுதி II A
### அமைப்புக் கட்டுரை

01.



கடற்கரைச் சூழல் - I



கடற்கரைச் சூழல் - II

அ. 1. உரு II ல் உள்ள கடற்கரைச் சூழல் மாற்றத்திற்கான பிரதான பௌதீகச் செய்முறை எவ்வாறு அழைக்கப்படும்?

.................................................................

2. மேலே நீர் குறிப்பிட்ட செய்முறைக்கான படத்தில் காணப்படும் சான்று 1 தருக.

.................................................................

3. சூழல் II இல் கருங்கற் பாறைகள் இடப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன ?

.................................................................

4. மேலே உரு I ல் காணப்படும் தாவரங்கள் இரண்டைப் பெயரிடுக.

1).............................. 2)..............................

5. மேலே நீர் வினா 4 இல் குறிப்பிட்ட தாவரம் அச்சூழலில் வாழ்வதற்காக கொண்டுள்ள இசைவாக்கங்கள் 2 தருக.

1).................................................................
2).................................................................

ஆ. 1. கருங்கல் எவ்வகையான பாறையாகும்.

.................................................................

2. இப்பாறை வகையில் காணப்படக்கூடிய கனியங்கள் 2 ஐக் குறிப்பிடுக.

1).............................. 2)..............................

3. ஆரம்பத்தில் இடப்பட்ட கருங்கற்கல் ஒப்பமற்றதாக காணப்பட்ட போதும் தற்போது அவை ஓரளவு ஒப்பமாக காணப்பட்டது. இச் செயற்பாட்டிற்கு காரணமான நிகழ்வு எவ்வாறு அழைக்கப்படும்?

.................................................................

இ. 1. உரு II இல் நிழற்குடை ஒன்று காணப்படுகின்றது. பகல் வேளைகளில் நிழற்குடையினால் நிழல் உருவாவதற்கு ஒளியின் எவ்வியல்பு காரணமாகும்.

.................................................................

2. நிழற்குடையின் கீழ் இருந்த ஒருவர் சூரிய வெப்பத்தை உணர்கின்றார். வெப்பமாகிய குடையில் இருந்து அவரிற்கு வெப்பம் இடமாறும் முறையாது?

.................................................................


3. உருல் II இல் உள்ள இயந்திரப்படகு 5000 Kg திணிவு கொண்டதாயின் படகின் மீது நீரினால் பிரயோகிக்கப்படும் மேலுதைப்பு யாது? ($g = 10ms^{-2}$)

.................................................................

4. உரு I இல் உள்ள தோணி பயணிப்பதற்கு பயன்படும் பிரதான சக்திமுதல் எது?

.................................................................

**02. அங்கிகள் தனிக்கல அங்கிகளில் இருந்து பல்கல அங்கிகள் வரை காணப்படுகின்றன. பல்கல அங்கிகளில் கலங்கள் இழையங்களாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும். அங்கிகள் கொண்டுள்ள இழைய வகைகள் சில படத்தில் காட்டப்படுகின்றன.**



A B C D E

1. கலங்கள் இழையங்களாக ஒழுங்கமையும்போது இழையம் கொண்டுள்ள இரு விசேட இயல்புகளைக் குறிப்பிடுக.

1).............................. 2)..............................

2) தரப்பட்ட இழையவகைகளில் எது / எவை தாவரக்கலம் / கலங்கள் ஆகும்.

1).................................................................

3) மேலே வினா (2) இல் நீர் குறிப்பிட்ட இழையம் / இழையங்கள் தாவர இழையம் என இனங்காண நீர் இனங்கண்ட இரு இயல்புகளைத் தருக.

1).................................................................
2).................................................................

4. a) படம் E குறிக்கும் இழைய வகை யாது?

.................................................................

b) இழையம் E ஆனது இழையம் D யிலிருந்து வேறுபடும் ஓர் இயல்பைக் குறிப்பிடுக.

.................................................................

5. a) இழையம் C ஆனது இழையம் B யிலிருந்து வேறுபடும் கட்டமைப்பு வேறுபாடு ஒன்று தருக.

.................................................................

b) இழையம் C காணப்படும் இடம் ஒன்று தருக.

.................................................................

c) இழ்யைம் C இன் தொழில் ஒன்றை குறிப்பிடுக.

.................................................................

d) மேலே நீர் குறிப்பிட்ட தொழிலுக்காக அவ்விழையம் கொண்டுள்ள இசைவாக்கம்யாது?

.................................................................

6. இழையங்கள் விகாரமடைவதனால் உருவாகின்ற நோய் நிலைமை யாது?

.................................................................

7. அங்கிகளில் காணப்படும் ஒழுங்கமைப்பு மட்டங்கள் குற்றி வரிப்படம் மூலம் காட்டப்படுகின்றது.

கலம் → இழையம் → X → Y → அங்கி

X,Y ஆகியவற்றை இனங்காண்க

X.................................................................
Y.................................................................

**03. மூலகங்களின் ஆவர்த்தன இயல்புகளுக்கேற்ப தயாரிக்கப்பட்ட ஓர் அட்டவணையில் பல்வேறு மூலகங்களின் அமைவுகள் நியமமல்லாத குறியீடுகள் சிலவற்றினால் அருகில் காட்டப்பட்டுள்ளன. ஆவர்த்தன அட்டவணையில் அம் மூலகங்களின் அமைவுடன் தொடர்புபட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | | | | | | | |
| | | | B | | C | | |
| | | D | | E | | F | G |
| H | I | | | | | | |

1. ஒரே கூட்டத்திலும், ஒரே ஆர்வத்தனத்திலும் இடம்பெறும் மூலகங்களை, 2 மூலகங்கள் வீதம் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.

a) ஒரே கூட்டம் ..............................
b) ஒரே ஆவர்த்தனம் ..............................

2. குறியீடு I இனால் காட்டப்படும் மூலகத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றுக்கு விடை தருக.

a) I அணுவின் இலத்திரன் நிலையமைப்பு ..............................
b) I மூலகத்தின் வலுவளவு ..............................

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் உண்மையான நோக்கம் எதிரணியிடம் இல்லை

## மகிந்தவுக்கே ஆதரவு என்கிறார் அமைச்சர் திஸ்ஸ விதாரண



**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என எதிரணி கூறுகின்ற போதிலும் அவர்களிடம் அதற்கான உண்மையான நோக்கம் இல்லை எனவும் தற்போதைய அரசாங்கத்தில் சில குறைபாடுகள் இருந்தாலும் கூட எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கே முழுமையான ஆதரவை வழங்குவதற்கு லங்கா சமசமாஜ கட்சி தீர்மானித்துள்ளதர்க கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அமைச்ர் இதனைத் தெரிவித்தார் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு எமது கட்சி தீர்மானித்துள்ளது.

இந்த அரசாங்கத்தில் பல குறைபாடுகள் உள்ளன என்பதை ஏற்றுகொள்கின்றோம். எனினும் நாடடை முன்னேற்ற பாதையில் இந்த அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது.

எனவே ஜனாதிபதிக்கே எமது ஆதரவை வழங்குகின்றோம்.

நாட்டில் ஊழல் மோசடிகள் குறித்து பேசப்படுகின்றது. செலவந்த தரப்புக்களுடன் இணைந்து அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது ஊழல் மிகுந்த நிலைமை உருவாக சாத்தியம் உள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியாவிலும் இந்த நிலைமையை நாம் காணுகின்றோம்.

அதனால் தான் பழைமையான கட்சியான காங்கிரஸ் கட்சி கடந்த தேர்தலில் தூக்கியெறிப்பட்டது.

இந்நாட்டின் முற்போக்கு சக்திகளுடன் இணைந்து அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்தவினால் மாத்திரமே முடியும். எனவே அவரை மீண்டும் கொண்டுவர ஒத்துழைப்பு வழங்குவோம்.

எதிரணி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டும் என கூறுகின்றது. ஆனால் அவர்களிடம் அதற் கான உண்மையான நோக்கம் இருப்பதாக தெரியவில்லை.

அதனால் மக்கள் மத்தியில் பொது வேட்பாளர் தொடர்பில் நம்பிக்கையற்ற தன்மை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# “அதிஸ்டானய” நூல் ஜனாதிபதியிடம் கையளிப்பு



முன்னாள் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் வசந்த கரன்னாகொடவினால் எழுதப்பட்ட அதிஸ்டானய“ நூல் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

தாமரைத் தடாகம் மகிந்த ராஜபக்ஷ மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. மனிதாபிமான நடவடிக்கையின் போது அந்நடவடிக்கைகளை பொது மக்கள் தெரிந்துகொள்ள ஊடகம் பல் வேறு வகையில் பங்களிப்பு வழங்கியது. எனினும் அச்சந்தர்ப்பத்திற்கு கடற்படை எவ்வாறு முகம் கொடுத்தது என்பதை மக்களுக்கும் எதிர் கால சந்ததியினருக்கும் விசேட விதமாக மாணவ மாணவிகளுக் கும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இப்புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில்அமைச்சர்களான பந்துல குணவர்தன, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உட்பட முப்படைத் தளபதிகள், பாதுகாப்பு பிரிவுகளின் உயரதிகாரிகள் மற்றும் நூலாசிரியரின் குடும்பத்தினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-5)

# அரசிற்கு ஆதரவு வழங்கினால் மட்டுமே தீர்வையற்ற வாகனங்கள் வழங்கப்படும்

## வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு அமைச்சர் சுசில் கூறும் விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினால் மட்டுமே தீர்வையற்ற வாகனங்கள் வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் ஒழுங்கான முறையில் தொடர்புகளைப் பேணினால் மட்டுமே தீர்வையற்ற வாகனங்கள் வழங்கப்படும்.

வட மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படவேண்டிய தீர்வையற்ற வாகனங்களை அரசாங்கம் வழங்காத காரணத்தினால், இந்திய அரசாங்கம் எட்டு நவீன வாகனங்களை மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்க உள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தீர்வையற்ற வாகனங்கள் வழங்கபட வேண்டுமென அரசியல் அமைப்பில் எங்கும் குறிப்பிடப்பட வில்லை. திறைசேரியின் தீர்மானங்களுக்கு அமையவே காலம் தாழ்த்தியேனும் வாகனங்கள் வழங்கப்படும்.

மாகாணசபை உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்குவது அவர்களின் உரிமை அல்ல எனவும் அரசாங்கத்தின் தீர்மானம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவினால் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்குவது தொடர்பில் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது.

ஏற்கனவே இந்தியா பெருந்தோட்டப் பகுதிகளில் சிறிய ரக பேருந்துகளை வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு எட்டு வாகனங்களை வழங்குவது குறித்த நடவடிக்கைகளை இந்திய உயர்ஸ்தானிகராலயம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## இல்லத்தரசிகள்

ஒருவர் பெருமையாக சொன்னார், ‘‘என்னுடைய இல்வாழ்க்கையில் எனது மனைவியுடன் ஒரே ஒரு தடைவைதான் சண்டை வந்திருக்கிறது ” என்றார்.

‘‘எப்போது ’’ என்று கேட்டேன். ‘‘திருமணத்திற்கு மறுநாள் ”என்றார்.

“அதன் பின்னர் சண்டையே வரவில்லையா ” என்று கேட்டேன். “ இல்லை ” என்றார்.

‘‘அது எப்படி ’’ என்றேன்.‘‘ அப்போத ஆரம்பித்த முதல் சண்டையே முடியவில்லை ”என்றார்.

எனக்கு சிரிப்பு வந்துவிட்டது.

என்னை சிரிக்க வைப்பதற்காக அவர் அப்படி சொன்னாரே தவிர, அவர் உண்மையில் இல்வாழ்க்கையை மிகவும் சிறப்பாக நடத்திக் கொண்டு வரும் ஒருவர் தான்.

ஒரு குடும்பம் நன்றாக இருக்கிறது என்று சொன்னால், அதற்கு இல்லத்தரசிகள்தான் காரணம். இயற்கையாகவே பெண்களுக்கென்று சில சிறப்பான குணங்கள் உண்டு.

ஒரு தடவை பவேரிய நாட்டு ஜனாதிபதிக்கும் ஜேர்மன் சக்கரவர்த்திக்கும் தகராறு வந்தது. ஜேர்மன் சக்கரவர்த்தி என்ன செய்தார் என்றால், ஒரு படையைத் திரட்டிக்கொண்டு போய் பவேரியாவின் தலைநகரைச் சுற்றி வளைத்தார்.

ஆனாலும், அவருக்கு கோபம் அடங்கவில்லை. பவேரிய தலைநகரை தரைமட்டமாக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

அந்த வேளையில் அவர் மனதில் ஓர் ஓரமாக கொஞ்சம் இரக்கம் தலைகாட்டியது. உடனே ஓர் அறிவிப்புக் கொடுத்தார்.

“பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் விதிவிலக்கு அளிக்கின்றேன். அவரவர் சுமக்கக்கூடிய பொருட்களை எடுத்துக்கொண்டு வெளியேறலாம் ’’ என்று அறிவித்தார்.

அதன்பின்னர் அவருடைய படைத்தலைவர்களை அழைத்தார், “பெண்கள் பொருட்களுடன் ஊரைவிட்டு வெளியேறிய பின்னர் தலைநகரைக் கொளுத்தி விடுங்கள்” என்று உத்தரவிட்டார்.

சிறிது நேரத்தின் பின்னர் பவேரிய நாட்டுப் பெண்கள் ஒவ்வொருவராக தட்டுத்தடுமாறி வெளியே வந்து கொண்டிருந்தார்கள்.

சக்கரவர்த்தி பார்த்தார். அவருக்கு அதிர்ச்சி. என்ன நடந்தது தெரியுமா?

பவேரிய பெண்கள் சுமந்து வந்தது பொருட்களை அல்ல கணவன்மார்களை.

அவரவர் தமது கணவன்மார்களை முதுகிலே சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தார்கள்.

கடைசியாகப் பார்த்தால், பவேரிய மன்னனை அவருடைய ராணி சுமந்து கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார்.

ஜேர்மன் சக்கரவர்த்தி இதைப் பார்த்தார்; அவரது மனம் நெகிழ்ந்தது.

பவேரியவுக்கு மன்னிப்பு கொடுத்துவிட்டு தனது படைகளை அழைத்துக்கொண்டு திரும்பி வந்து விட்டார்.

மனைவியின் பெருமை என்பது இதுதான்.

இருந்தாலும் இந்தக் காலத்தில் எல்லாம் அந்த அளவுக்கு நடக்கும் என்பது சந்தேகம்தான்.

அது போல் இப்போது உங்களால் முடிந்த அளவுக்கு முதுகிலே சுமந்து கொண்டு போங்கள் என்று சொன்னால், பலர் தொலைக்காட்சிப் பெட்டியைத் தான் சுமந்து கொண்டு போவார்கள் என நான் நினைக்கிறேன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாடோடியின் இசை!



அவன் ஒரு நாடோடி. அவனுக்கு, ஒரு புல்லாங்குழலும் ஒரு குரங்கும் மட்டுமே சொந்தம்.

புல்லாங்குழலை ஊதிக்கொண்டே ஊர் ஊராகச் செல்வான்.

ஊரார் தரும் உணவைச் சாப்பிடுவான். கிடைத்த இடத்தில் உறங்குவான்.

ஒரு நாள், அந்த நாட்டின் அரண்மனையை ஒட்டிய சுவர் அருகில் சென்றபோது அவன் தோளில் இருந்த குரங்கு, சுவர் மீது தாவியது.

அரண்மனை நந்தவனத்தில் இருந்த மரத்திலிருந்து பழங்களைப் பறித்தது. அவனுக்கும் கொடுத்தது.

அதைப் பார்த்த காவலர்கள், "அரண்மனைப் பழங்களை எப்படித் திருடினாய்?" என்று கேடடார்கள்.

"இது, அரண்மனை என்று எனக்குத் தெரியாது.

எனது குரங்கு பழத்தைக் கொண்டு வந்தது" என்றான்.

"அதெல்லாம் தெரியாது. உன்னையும் குரங்கையும் சிறையில் அடைக்கிறோம்" என்றார்கள்.

அதற்கு அவன், "ஐயா, குரங்கையாவது விட்டுவிடுங்கள்.

கிளி, காகம், பறவைகள், அணில் போன்றவைகூட, நந்தவனத்தில் பழங்களைத தின்றிருக்கும் அதற்கும் தண்டனையா?" என்று கேட்டான்.

"இதையெல்லாம் விசாரணையில் பேசிக்கொள்" என்று சொல்லி, அவனைச் சிறையில் அடைத்தனர்.

இரவில் அவன தன் புல்லாங்குழலை எடுத்து ஊதினான். அந்த அற்புத இசை, அரண்மனை முழுவதும் தவழ்ந்தது. அரசி, அந்த இசையைக் கேட்டு வியந்தார், "யார் இவ்வளவு இனிமையாக இசைப்பது?" என்று கேட்டார்.

விஷயம் அறிந்து, சிறையில் அவனைச் சந்தித்து, நடந்ததை அறிந்தார் அரசி.

"கவலைப்படாதே, நாளை நான் உனக்காகப் பேசுகிறேன்" என்றார்.

மறுநாள்.

விசாரணை மண்டபத்துக்குச் செல்லும்முன்பு அரசனிடம், "அவனை உடனே விடுவியுங்கள். இது பாவம்" என்றார்.

அங்கே இருந்த மந்திரி, "அரசே, உடனே விட்டுவிட்டால், குற்றமற்றவர்களைச் சிறையில் அடைக்கிறார்கள்... அர்சரின் ஆட்சி லட்சணம் இதுதான் என்று உங்கள்மேல உள்ள மதிப்பு குறையும்.

அவனை விடுவிக்க ஒரு போட்டி வையுங்கள்" என்றார்.

அரசருக்கும் சரியென்றே தோன்றியது. விசாரணைக்கு அழைத்து வரப்பட்டவனிடம், "நீ நன்றாகப் புல்லாங்குழல் வாசிப்பதை அறிந்தேன். தொடர்ந்து 6 மணி நேரம் புல்லாங்குழல் வாசி. அதில் வெற்றி பெற்றால், இந்த அரண்மனையிலேயே இசைக் கலைஞனாகப் பணி புரியலாம்" என்றார்.

அவன் சம்மதித்தான். பழங்கள், வைரங்கள், தங்கக் காசுகள் அங்கே இருந்தன.

"நீ ஜெயித்துவிட்டால், இந்தப் பரிசும் உனக்கே" என்றார் அரசி.

அவன், தன் தோள் மீது இருந்த குரங்கிடம், "கொஞ்ச நேரம் எந்தத் தொந்தரவும் செய்யாதே.

பிறகு, நாம் வசதியாக வாழலாம்" என்று சொல்லிவிட்டு, புல்லாங்குழலை இசைக்க ஆரம்பித்தான்.

எல்லோரும் ரசிக்க ஆரம்பித்தனர். நேரம் ஆக ஆக குரங்கு பசியால் தவித்தது.

அப்போது, அரசர் இசையை ரசித்துக்கொண்டே வாழைப்பழத்தை உறித்துச் சாப்பிட்டார். அவ்வளவுதான்... குரங்கு, தாவிச்சென்று அரசனின் கையில் இருந்த பழத்தைப் பறித்தது.

கோபமான அரசர்

"சீ... இரண்டு பேரும் ஓடிப் போங்க" என்று கர்ஜித்தார்.

பிழைத்தோம், தப்பித்தோம் என அவர்கள் வெளியே ஓடி வந்தனர். சிறிது தூரம் வந்த பிறகு, அவன் அழுது கொண்டே புல்லாங்குழலில் சோகமாக இசைத்தான்.

வயலில் உழுதுகொண்டிருந்த ஒரு விவசாயி, "ஏன் சோகமாக இருக்கிறாய்?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "இந்தக் குரங்கை அன்பாக வளர்த்தேன்.

இதற்கு ஒரு துன்பம் என்றால், துடித்துப்போவேன். ஆனால் இந்த மடக் குரங்கு, எனக்குக் கிடைத்திருக்க வேண்டிய நல்ல வாய்ப்பைக் கெடுத்துவிட்டது" என்று நடந்ததைச் சொன்னான்.

புன்னகைத்த விவசாயி, "மன்னனுக்கும் சேவகனுக்கும் அதற்கு எப்படி வித்தியாசம் தெரியும்? அதற்குப் பசி. உன் குரங்கு உனக்கு நன்மையே செய்துள்ளது" என்றார்.

'எப்படி?' என்பது போல புரியாமல் பார்த்தான் நாடோடி.


"நீ அரண்மனையில் சொகுசான வாழ்க்கை வாழலாம்.

உயர்ந்த ஆடைகளை அணியலாம். ஆனால், அங்கே நீ இசைக்கும் புல்லாங்குழல் இசை, அரசனுக்கும் அந்த அரண்மனையில் இருப்பவர்களுக்கும் மட்டுமே கிடைக்கும். அங்கே, நீ ஓர் உயர்ந்த அடிமை.

ஆனால், இங்கே உன் இசைக்கு எல்லை இல்லை. சுதந்திரப் பறவையாக, நினைத்தபோதெல்லாம் இசைக்கலாம்" என்றார்.

அவன் முகம் மலர்ந்தது. உடனே குரங்கை கையில் எடுத்து முத்தமிட்டான்.

புல்லாங்குழலை இசைத்தவாறு அந்த நீண்ட பாதையில் நடக்க ஆரம்பித்தான்.



## 11.2014 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1493 - கொலம்பஸ்முதல் நாள்தான் கண்ட தீவின் கரையை அடைந்து அதற்கு சான் ஜுவான் பட்டீஸ்டா எனப் பெயர் சூட்டினார்.
- 1794 - அமெரிக்கப் புரட்சிப் போரின் பின்னர் எழுந்த சில பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1816 - வார்சா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1881 - உக்ரேனில் ஒடீசா நகரில் விண்கல் ஒன்று வீழ்ந்தது.
- 1942 - இரண்டாம் உலகப்போர்: ஸ்டாலின்கிராட் சண்டை -சோவியத் படையினர் ஸ்டாலின்கிராட் நகர் மீது மீள தாக்குதலை ஆரம்பித்தனர். இது பின்னர் அவர்களுக்கு வெற்றியை அளித்தது.
- 1946 - ஆப்கானிஸ்தான், ஐஸ்லாந்து, சுவீடன் ஆகியன ஐ.நாவில் இணைந்தன.
- 1969 - அப்போலோ 12 விண்கலத்தில் சென்ற சார்ள்ஸ் கொன்ராட், அலன் பீன் ஆகியோர் சந்திரனில் இறங்கி நடந்த மூன்றாவது, நான்காவது மனிதர்கள் என்ற பெயரினைப் பெற்றனர்.
- 1969 - பிரேசில் உதைப்பந்தாட்ட வீரர் பெலே தனது 1,000 ஆவது கோலைப் பெற்றார்.
- 1977 - எகிப்திய அதிபர் அன்வர் சதாத் அமைதிப் பேச்சுக்களுக்காக இஸ்ரேல் சென்றடைந்தார். இஸ்ரேல் சென்ற முதல் அரபுத் தலைவர் இவரே.
- 1985 - பனிப்போர்: அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரேகன், சோவியத் அதிபர் மிக்கைல் கொர்பச்சோவ் இருவரும ஜெனீவாவில் முதன் முறையாகச் சந்தித்தனர்.
- 1991 - தமிழீழ காவல்துறை நிறுவப்பட்டது.
- 1999 - மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது சென்ஷோ விண்கலத்தை ஏவியது.
- 2005 - மகிந்த ராஜபக்ச இலங்கையின் 5 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

### பிறப்புகள்

- 1831 - ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20 ஆவது குடியரசுத் தலைவர் (இ. 1881)
- 1835 - ராணி லட்சுமிபாய், இந்திய இராணி (இ. 1858)
- 1909 - பீட்டர் டிரக்கர் ஆஸரேலிய மேலாண்மை அறிவியலாளர் (இ. 2005)
- 1917 - இந்திரா காந்தி, இந்தியப் பிரதமர் (இ. 1984)
- 1925 - சலில் சௌதுரி, வங்காள இசையமைப்பாளர் (இ. 1995

### இறப்புகள்

- 1998 - [illegible] ஜப்பானிய வானிலை அறிஞர் (பி. 1920)
- 2008 - எம். என். நம்பியார், நடிகர் (பி. 1919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



129

**2011 உலகக் கோப்பை கோலாகல ஆரம்பம்**

2011 ஐசிசி உலக கிரிக்கெட் கோப்பைக்கான போட்டிகளை இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய மூன்று நாடுகள் இணைந்து நடத்தின. 19 பெப்ரவரி தொடங்கி 2 ஏப்ரல் வரை மூன்று நாடுகளிலும் ஒருநாள் போட்டிகள் நடைபெற்றன. ஏ பிரிவில் பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜிம்பாவே, கனடா மற்றும் கென்யா நாடுகள் பங்கேற்றன. பி பிரிவில் தென் ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், இந்தியா, இங்கிலாந்து, ஐயர்லாந்து, பங்களாதேஷ் மற்றும் நெதர்லாந்து நாடுகள் பங்கேற்றன. இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 14 நாடுகள் உலகக் கோப்பையை ஜெயிக்க களத்தில் இறங்கின.




உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகளின் தொடக்க விழா பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் கண்கவர் காட்சிகளுடன் கோலாகலமாகத் தொடங்கின. 2011 பெப்ரவரி 19 ஆம் திகதி பகர் இரவு ஒரு நாள் போட்டியாக இந்தியாவும் பங்களாதேஷும் மோதின. இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 370 ரன்கள் குவித்தது. வீரேந்திர சேவாக் 175 ரன்களும், கோலி 100 ரன்களும் எடுத்தனர். தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் அணி 283 ரன்களுக்கு சுருள இந்தியா 87 ரன்கள் வித்தியாசத்தில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது. சச்சின் 28 ரன்கள் எடுத்த போது சேவாக்கின் கவனக் குறைவால் ரன் அவுட் ஆனார். தனது அசட்டையால் சச்சின் அவுட் ஆனதற்கு அவரிடம் மன்னிப்புக் கேட்டார். சச்சின்பெருந்தன்மையுடன் அவரை சமாதானப்படுத்தியது தனிக்கதை.

பங்களாதேசத்தை வெற்றிகொண்ட மகிழ்ச்சியில் இங்கிலாந்துடன் மோத இந்தியா தயாரானது. 2011 பெப்ரவரி 27 ஆம் திகதி பெங்களூர் சின்னசாமி மைதானம் தலையா கடல் அலையா என்று வியக்கும் வண்ணம் நிரம்பி வழிந்தது. முதலில் களம் இறங்கிய இந்தியா 338 ரன்கள் எடுத்தது. சச்சின் மீண்டும் தனது அதிரடி ஆட்டத்தால 120 ரன்கள் குவித்து தனது 47 ஆவது ஒருநாள் சதத்தை எட்டினார். 339 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து அனைவரும் அதிசயிக்கும் வகையில் இந்தியா குவித்த அதே 338 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. இதன்

## 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!

மூலம் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் நடைபெற்ற ஆட்டம் யாருக்கும் வெற்றி தோல்வி இன்றி டிராவில் முடிந்தது.

2011 மார்ச் 6 ஆம் திகதி பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் இந்தியாவிற்கும் ஐயர்லாந்திற்கும் இடையேயான ஒருநாள் போட்டி ஆரம்பமரனது. முதலில் ஆடிய ஐயர்லாந்து அணி 207 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. களம் இறங்கிய இந்தியா அடுத்தடுத்து ஷேவாக் மற்றும் கௌதம் கம்பீர் விக்கெட்டுக்களை இழந்தது. சச்சின் பொறுமையாக ஆடி 38 ரன்கள் சேர்த்தபோது டாக்ரெல்லின் பந்தில் எல்.பி.டபிள்யூ அவுட் ஆனார். பின்னர் களம் யுவராஜ் சிங் தனது அதிரடி ஆட்டத்தால் 50 ரன் குவித்ததுடன் 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெறவும் வழி வகுத்தார்.

2011 மார்ச் 9 ஆம் திகதி டெல்லி ஃப்ரோஷா கோட்லா மைதானத்தில் இந்தியாவுடன் நெதர்லாந்து மோதியது. நெதர்லாந்து 189 ரன்கள் எடுக்க இந்தியா 191 ரன்களுடன் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 2011 மார்ச் இல் இந்தியா- தென் ஆப்பிரிக்க அணிகள் நாக்பூர் விதர்பாவில் மோதின.


**கே. ரமேஷ்** (தொடரும்)

- லட்சியம்:- உலகின் நம்.1 விளையாட்டு வீரன்
- பிடித்த மைதானம்:-ஆஸ்ரேலியாவின் சிட்னி
- பிடிக்காத மைதானம்:- பெங்களூர் மைதானம்
- வேறு விளையாட்டு:-டென்னிஸ்
- கனவு மங்கை:-எனது மனைவி அஞ்சலி
- வெறுப்பது:- வதந்தி
- பிடித்த உடை:-:ஜீன்ஸ், டீசர்ட்
- பிடித்த கடவுள்:- பிள்ளையார் சாய்பாபா மீதும் பக்தி உண்டு
- பிடித்த வாசகம்:-உனக்கு நீயே உண்மையாக இரு

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...இதை நீங்கள் செய்து வந்தாலே எதிர்மறையான வடிவ அமைப்புகள் உங்களுக்குள் படிய நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள். காலம் செல்லச் செல்ல உங்கள் மன அமைப்பும் அதை உருவாக்கும் செயல் திட்டமும் மாறியிருக்கும். அது இனியும் எதிர்மறையாக இருக்காது. நீங்கள் ஒரு சில கணங்கள்ளாவது உள் பாருங்கள்.. நீங்கள் கவலைப்படும் பொழுது ஏற்றுக் கொள்ளும் தன்மையுடனும் தெளிவுடனும் அதனுள் ஆழ்ந்து செல்லுங்கள். அதனுள் செல்வதற்கு அஞ்சாதீர்கள். கவனத்தில் கொள்ளுங்கள்... ஏற்றுக் கொள்ளுதல் என்பது ஒரு மிகச் சிறந்த தியானமுறை.

## கவலைகள் இன்றி வாழ்தல்!



நீங்கள் உங்கள் கவலைகளை ஏற்றுக் கொள்ளும்போது அதனுள் ஆழ்ந்து செல்லும்பொழுது அவையெல்லாம் வெறும் உங்கள் படைப்புகளோ என்கிற அற்புதமான புரிந்து கொள்ளுதல் ஏற்படும். உங்கள் மனம் எவ்வாறு விளையாடுகிறது? எவ்வாறு உங்களிடம் ஒரு மன இறுக்கத்தை ஏற்படுகிறது? ஏன்பதைக் காணமுடியும்.

நான் இதைச் சொல்லும் பொழுது உங்களால் புத்தி பூர்வமாக மட்டும் புரிந்து கொள்ள முடியும். அது உங்கள் அனுபவமாகிவிடும் பொழுது பேச்சைக் கடந்து சென்றால் உங்கள் விழிப்பும் உயிர்ப்பும் அதிகரிக்கும். கவலை என்பது உண்மையற்றது. தேவையற்றது. என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பிறகு மணிபூரக சக்கரத்தின் பொக்கிஷங்கள் இயல்பாகவே திறக்கப்பட்டுவிடும். சொல்லுங்கள்......

ஸ்வாமிஜி எண்ணங்கள் மனதின் ஒரு பகுதியா? அல்லது அவை மனதின் வெளிப்பாடா?

உங்கள் மனமும் எண்ணங்களும் ஒன்றே. மனதிற்கும் எண்ணங்களுக்குமிடையே எந்த விதமான வேறுபாடும் கிடையாது. மனமே எண்ணம். எண்ணமே மனம். மனம் என்பது எண்ணக் குவியல்களைத் தவிர வேறில்லை. அது தொடர் எண்ண ஓட்டமே. எண்ணங்கள் என்பது நீங்களே உங்களிடம் தொடர்ந்து பேசிக் கொள்ளும் வார்த்தைகளைத் தவிர வேறல்ல.

ஏற்றுக் கொள்ளுதல் மிகப்பெரும் சக்தியை வெளியிடுகிறது. உங்களுக்கு நல்ல தெளிவையும் விடுதலையையும் கொடுக்கிறது.

### ஆன்மீகம் 79

உங்களிடம் அந்தச் தெளிவு இருக்குமானால் நீங்கள் கவலைகளைக் கடந்து செல்லலாம். பிறகு மனச் சோர்வு உங்களைத் தொட முடியாது; நீங்கள் துயரங்களைக் கடந்து செல்வீர்கள்.

ஒரு சின்னக் கதை...

ஒரு சமயம் நான் கொல்காத்தாவில் தங்கி ஈஷாவாஸ்ய உபநிடத வகுப்புகள் எடுத்துக் கொண்டிருந்த போது ஒருவர் என்னைக் காணவந்தார்.

அவர் சொன்னார் ஸ்வாமிஜி எனக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. நான் இருக்கும் பகுதியில் நிறைய தெரு நாய்கள் இருப்பதால் என்னால் இரவில் தூங்க முடியவில்லை.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காமராசர் இல்லையேல் சோனியா ஏது?

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, தூக்குக்கயிற்றில் தொங்கியும், சிறைக்கொடுமைகளை அனுபவித்தும் எண்ணற்ற தியாகம் செய்த தலைமுறை காமராசரோடு முடிந்து விட்டது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக வாழ்ந்து வரும் சில முதிய தியாகிகள் நாட்டின் நிலைமையைப் பார்த்து, "இதற்காகவா போராடினோம், இதற்காகவா தியாகம் செய்தோம்" என மனம் வெதும்பி கிடக்கின்றனர்.

அவர்களைத் தேடுவாருமில்லை மதிப்பாருமில்லை. காங்கிரஸ் கட்சியின் இன்றைய தலைமை இதற்கு சரியானதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

காந்தியடிகள் முதல் காமராசர் வரை அலங்கரித்த தலைமை நாற்காலியில், சுதந்திரப் போராட்டம் குறித்து எதுவும் தெரியாதவரும், எண்ணற்ற தியாகம் செய்த தலைவர்களை மதிக்கத் தெரியாதவருமான ஒருவர் அமர்ந்திருக்கிறார்.



காமராசர் கட்டிய சத்தியமூர்த்தி பவனத்தில் அவர் உயிரோடு இருந்தவரை அவரின் சிலையை வைக்க அனுமதிக்கவில்லை. தமிழநாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த ஞானதேசிகன் காமராசர் சிலையை சத்தியமூர்த்தி பவனத்தில் முகப்பில் நிறுவி அதை திறந்துவைக்க சோனியா, ராகுல் ஆகியோரை அழைத்தபோது அலட்சியப்படுத்தி மறுத்துவிட்டனர்.

உறுப்பினர் சேர்ப்பது சம்பந்தமாக அனைத்து மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்களின் கூட்டம் தில்லியில் ராகுல் தலைமையில் நடைபெற்றது. புதிய உறுப்பினர் அட்டையில் சோனியா, ராகுல் ஆகியோரின் படங்களைத் தவிர வேறு யாரின் படமும் இடம் பெறக்கூடாது என அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தமிழகத்தில் காமராசர், சோனியா, ராகுல், மூப்பனார் ஆகியோர் படங்களை அச்சிட்ட உறுப்பினர் சீட்டுகள் வெளியிடப்பட்டிருப்பதை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சுட்டிக்காட்டிய போது, அதை அங்கீகரிப்பதற்கு ராகுல் மறுத்துவிட்டார்.

தமிழகப் பொறுப்பாளராக இருக்கும் முகுல் வாசுனிக் காமராசர் குறித்தே விமர்சனம் செய்திருக்கிறார். இதனால், தமிழ்நாடு காங்கிரஸின் தலைவராக இருந்த ஞானதேசிகன் பதவி விலகியிருக்கிறார்.

ராஜீவ் பிரதமராக இருந்தபோது, மும்பையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா மலரில் பட்டாபி சீதாராமையாவின் படத்தின் கீழ் காமராசர் என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு பட்டாபி சீதாராமையாவையும் தெரியவில்லை. காமராசரையும் தெரியவில்லை.

இப்போது சோனியாவின் காலததில் உறுப்பினர் அட்டையில் கூட, காமராசரின் படம் இடம்பெறக்கூடாது என தடைவிதிக்கப்படுகிறது.

1955 ஆம் ஆண்டில் காமராசர் முன்னின்று நடத்திய **ஆவடி காங்கிரஸ் மாநாடு**, காங்கிரஸ் வரலாற்றில் மிக முக்கியமானத் திருப்பத்தை ஏற்படுத்தியது. அந்த மாநாட்டில்தான், "சோசலிச மாதிரி சமுதாயத்தை அமைப்பதே காங்கிரசின் குறிக்கோள்" என்ற தீர்மானத்தை நேரு முன்மொழிய காமராசர் வழி மொழிந்தார்.

அம்மாநாட்டிற்குக் கூடிய பெரும் மக்கள் திரளைப் பார்த்தபோதுதான் காமராசர் மக்கள் தலைவர் என்பதை நேருவும் மற்ற தலைவர்களும் உணர்ந்து அவரிடம் பெருமதிப்பு கொண்டார்கள்.

நீண்ட காலமாக பலர் அமைச்சர்களாக இருந்ததால், அலட்சியப் போக்கும், ஊழலும் வளர்ந்து வருவதை கண்ட நேரு மிக வருந்தினார். எனவே, அது குறித்து காமராசரிடம் மட்டுமே கலந்தாலோசித்தார்.

அத்தகையவர்களைப் பொறுப்புகளிலிருந்து அகற்றுவதற்கு காமராசர் கூறிய யோசனை நேருவை கவர்ந்தது. மத்திய - மாநில அமைச்சர்கள் அனைவரும் கட்சிப் பணிக்கு திரும்பவேண்டும் என்பதற்காக அனைவரிடமிருந்து பதவி விலகல் கடிதங்களைப் பெறவேண்டும் என்று கூறிய காமராசர் அதற்கு முன்மாதிரியாக தானே விலக முன்வந்தார்.

ஊழலற்ற ஆட்சி நடத்தி மாபெரும் சாதனைகள் புரிந்த காமராசர் விலக முன்வந்ததைக் கண்டு பிரதமர் நேரு வியந்துபோனார்.

நாடு முழுவதும் இதை நடைமுறைப்படுத்த முடிவுசெய்து, அதற்கு "காமராசர் திட்டம்" என்று பெயரிட்டார். அதனுடைய விளைவுகள் காங்கிரஸ் வரலாற்றில் அழியாத முத்திரைகளைப் பதித்தன.

இந்தச் சூழ்நிலையில், காங்கிரஸ் கட்சிக்குப் புதிய தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவர் காமராசரே என நேரு கருதினார். மற்ற மேலிடத் தலைவர்களும் அதை ஆமோதித்தனர். இதன் விளைவாக, காமராசர் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராகுலின் முப்பட்டானார் நேருவுக்கே தலைவராக விளங்கியவர் காமராசர். நேருவின் மறைவிற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி பதவிச் சண்டையால் சிதறி விடும். இந்தியாவின் எதிர்காலமும் பாதிக்கப்படும் என்றெல்லாம் உலக நாடுகள் எண்ணிக்கொண்டிருந்த வேளையில் நேருவிற்குப் பிறகு லால் பகதூரை ஜனநாயக முறைப்படி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்க வழிசெய்த பெருமை காமராசருக்கு உண்டு.

லால்பகதூரின் மறைவிற்குப் பிறகு, பிரதமர் பதவிக்குப் போட்டியிட முனைந்த பலரும், குறிப்பாக, மொரார்ஜி தேசாய் உள்பட பலரும் காமராசர் பிரதமர் பொறுப்பை ஏற்றால் தாங்கள் போட்டியிடமாட்டோம் என அறிவித்தார்கள்.

தனது காலடியில் வைக்கப்பட்ட மகுடத்தை சூட்டிக்கொள்ள காமராசர் மறுத்தார். தன்னைத் தேடிவந்த பிரதமர் பதவியை உதறித்தள்ளியவர் காமராசர் ஒருவரே. அதுமட்டுமல்ல, காங்கிரஸில் தொடர்ந்து இருமுறை தலைமைப் பதவியை வகித்தவர் அவர் ஒருவரே. அவர் விரும்பியிருந்தால் மூன்றாம் முறையும் தலைவராகத் தொடர்ந்திருக்க முடியும். அவர் அதை விரும்பவில்லை.

நிஜலிங்கப்பாவை தலைவராக்கி விட்டு விலகிக்கொண்டார்.

ராகுலின் பாட்டி இந்திரா காந்தியை பிரதமராக்க காமராசர் செய்த முயற்சிகளை நாடறியும். இந்திராவை எதிர்த்து மொரார்ஜி போட்டியிட்டபோது, பணத் திமிங்கலங்கள் அத்தேர்தலில் தலையிட வரிந்து கட்டியபோது, அவர்களுக்கு காமராசர் விடுத்த கடும் எச்சரிக்கை வேலை செய்தது. இல்லையென்றால், இந்தியாவின் பிரதமர் தேர்தலில் பணம் வேலை செய்தது என்பது உலக அரங்கில் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியிருக்கும்.

மாநில முதலமைச்சர்கள், மாநிலங்களின் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள் உட்பட அனைவரையும் காமராசர் இந்திராவுக்கு ஆதரவாகத் திரட்டியதால் இந்திரா வெற்றிபெற்றார் என்பது சோனியாவுக்கும் ராகுலுக்கும் தெரியாமல் இருக்கலாம்.

ஆனால், வரலாற்று உண்மை இது. அன்றைக்கு காமராசர் உதவியோடு இந்திரா பிரதமராகாமல் இருந்திருந்தால் பிற்காலத்தில் ராஜீவ் பிரதமராகி இருக்க முடியாது.

சோனியாவும் காங்கிரஸ் தலைமை பதவிக்கு வந்திருக்க முடியாது. இன்றைக்கு ராகுலின் நாட்டாண்மைக்கும் வழி இருந்திருக்காது.

1965ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் போர் மூண்டபோது அமெரிக்கா தலையிட்டு இந்தியாவை எச்சரித்தது. உடனடியாகப் போரை நிறுத்தாவிட்டால் இந்தியாவிற்கு செய்துவரும் உணவு தானிய உதவியை நிறுத்தப்போவதாக மிரட்டியது. தலைவர் காமராசர் பின்வரும் பதிலடியைக் கொடுத்தார்

"அமெரிக்காவின் மிரட்டலுக்குப் பணிய மாட்டோம். உணவு தானிய உற்பத்தியை பெருக்கி, மானத்தோடு வாழ்வோமே தவிர யாருக்கும் அடிபணிய மாட்டோம்" என உறுதிபட கூறினார்.

ஆனால், உலகமயமாக்கல் கொள்கை, அமெரிக்காவோடு செய்து கொள்ளப்பட்ட அணு உலை உடன்பாடு ஆகியவை காங்கிரசின சோசலிச கொள்கைக்கு எதிரானது என்பதை உணர்ந்திருந்த போதிலும் மன் மோகன் சிங் அரசு அதை ஏற்றுக்கொண்டது. ஏற்க வைத்தவர் காங்கிரஸ் தலைவர் சோனியா. பிரதமர் பதவியை ஏற்க முடியாத நிலையில், பிரதமராக ஒரு வரை உட்கார வைத்துவிட்டு பிரத மருக்கு மேலான பிரதமராக அனைவரையும் ஆட்டிப் படைத்தார். இந்த பத்தாண்டு காலத்தில்தான் நாட்டின் மிகப் பெரிய ஊழல்கள் நடந்தேறின.

ஊழலில் ஈடுபட்ட தனது அமைச்சர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாமல் பிரதமர் மன்மோகன் சிங் தவித்தார். உச்ச நீதிமன்றத்தின் கண்டனத்திற்கும் ஆளானார். அவருடைய கையைக் கட்டிப்போட்டவை யாருடைய கரங்கள்? எதற்காகக் கட்டிப் போட்டன?

ஈழத் தமிழர் பிரச்சினையில் ராஜீவ் கையாண்ட தவறான கொள்கையைத் தொடர்ந்து கையாண்டதின் விளைவாக ஈழத் தமிழர் மிகப்பெரிய அழிவைச் சந்தித்தனர். அதை சோனியா தடுத்து நிறுத்த முன்வராததோடு, அழிவிற்குக் காரணமான சிங்கள அரசுக்குத் துணை நின்றார்.

அதன் விளைவாக, தமிழ்நாட்டில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. போட்டியிட்ட 39 இடங்களில் 38 இடங்களில் காங்கிரஸ் வேட்பாளர்கள் தங்கள் பொறுப்புத் தொகைகளை (டெபாசிட்) பறிகொடுத்ததன் மூலம் என்றும் அழியாத அவமானத்தை காங்கிரஸ் தேடிக்கொண்டது.

இந்திய அரசியலில் ஒரு தமிழன் எட்டாத உயரத்தை. தன்னுடைய தொண்டினாலும், தியாகத்தினாலும் எட்டிய தியாகத் தலைவர் காமராசரை புறந்தள்ளத் துணிந்தவர்களை, தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

காங்கிரஸ் கட்சி சோனியாவின் காலத்தில் மிகப்பெரிய சரிவைச் சந்தித்திருக்கிறது. நாடாளுமன்றத்தில் எதிர்கட்சியாகக்கூட வரமுடியாத நிலையை அடைந்திருக்கிறது. இது ஏன் என்பதைச் சிந்திக்க வேண்டியவர்கள் சிந்திக்க வேண்டும்.

1885 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சியை ஐரோப்பியரான ஹியூம் என்பவர் தொடங்கினார். மற்றொரு ஐரோப்பிய பெண்மணியான சோனியாவின் காலத்தில் காங்கிரசுக்கு மூடுவிழா நடத்துவதற்கான முயற்சிகளில் ஒன்றுதான் காமராசர் புறக்கணிக்கப்பட்டிருப்பது.

-பழ. நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவினத்தையும் சரிநிகராக கருதும் ஒருவருக்கே ஆதரவளிக்க முடியும்



நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுவதுடன் , சிங்கள பௌத்தத்தை மட்டும் மையப்படுத்தியுள்ள அரசியலமைப்பு மாற்றப்படுவது அவசியமாகும் என வலியுறுத்தியுள்ள சிவில் சமூகத்தின் தலைவரும் மன்னார் ஆயருமான இராயப்பு ஜோசப், ஜனநாயக ரீதியில் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, மூவினத்தையும் சரிநிகராகக் கருத்தில் கொள்ளும் ஒருவரையே ஆட்சிப்பீடத்தில் அமர்வதற்கு ஆதரவளிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழர் தரப்பு தொடர்ந்தும் ஆட்சியில் உள்ள அரசாங்கங்களில் ஒட்டுண்ணித் தாவரங்கள் போன்றே இருக்க வேண்டும் என்ற கருதுநிலையை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற அரசியல் யதார்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் எவ்விதமான முடிவுகளையும் எடுக்காத நிலையில் ஆளும் எதிர்த்தரப்புக்கள் பல்வேறு முனைபுக்களில் கடும் பிரயத்தனத்துடன் காய்நகர்த்தல்களைச் செய்து வருகின்றமை தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்த சூழலில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசாங்கம் தோல்விகண்டுள்ளது. இந்நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு என்பன மீளவும் கட்டியெழுப்பப்படாது அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகப்பட்டுள்ளது. அத்துடன் அரசியல ரீதியான எதிர்காலமும் ஐயப்பாடான சூழ்நிலையிலேயே காணப்படுகின்றது.

இவ்வாறான நிலைமையில் தான் ஜனாதிபதி தேர்தலொன்று நடத்தப்படுவதற்குரிய முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இங்குள்ள அரசியலமைப்பின் பிரகாரம் ஆட்சியாளர்கள் சிங்களத்திற்கும் பௌத்தத்தற்கும் மட்டுமே முக்கியத்துவத்தை அளிக்கின்றார்கள். ஏனைய இனங்களையோ அல்லது மதத்தவர்களையோ கருத்திலெடுப்பது கிடையாது. அவர்களுக்குரிய மரியாதைகளையும் வழங்குவதும் கிடையாது. ஆகவே சிங்களத்தையும் பௌத்தத்தையும் முதன்மைப்படுத்தியுள்ள அரசியலமைப்பு மாற்றப்பட்டு ஜனநாயக அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலம் இந்த நாட்டிலுள்ள மூவினங்களும், மதங்களும் சரிநிகராக மதிக்கப்படும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஊவா மாகாண முதல்வரின் பாதுகாப்பு வாகனம் விபத்து 3 பேர் பலி!

ஊவா மாகாண முதலமைச்சர் சசிந்திர ராஜபக்சவின் பாதுகாப்பு வாகனம் விபத்துக்குள்ளானதில் 3 பேர் பலியாகியுள்ளனர்.


பாதுகாப்பு வழங்கும் நோக்கில் பயணித்த டிபெண்டர் ரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

புத்தளம் மஹாகொடயாய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. முதலமைச்சரின் வாகனத்திற்கு முன்னால் சென்ற வாகனமே விபத்துக்குள்ளானது.


இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மூன்று பேர் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-5)







யாழ்.கல்வியங்காடு டச்சு வீதியில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் நடத்தப்படும் மும்மொழிக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் சிங்களக் கற்கைப் பயிலரங்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைத்தார். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கோழியவரை

Botanical Name: Canavalia ensiformis
Family- Fabaceae
Engl-Sword bean

பல்லாண்டு அல்லது ஈராண்டு காலம் வளரக்கூடிய ஓர் ஏறு கொடித் தாவரமாகும். தண்டு அழுத்தமான கிளைகளைக் கொண்டது. இலைகள் முக்கூட்டு வடிவானது. முட்டை வடிவானது. இலைகளில் மென்மையான சுனைகள் காணப்படும். பூக்கள் ஊதா நிறம். விதைகள் 6-8 காணப்படும். விதைகள் சிவப்பு கலந்த மண்நிறம். சிறிய அவரை வடிவக்காய்களைக் கொண்டவை. வீடுகளில் பயிரிடக் கூடிய மூலிகையாகும். அகலமான பாத்திகளில் விதைகள் மூலம் விருத்தி செய்யலாம். 7.5 cm ஆழமும் 30 cm அகலமும் உள்ள குழிகளில் விதைகளைப் புதைத்து வளர்க்கலாம். பயிர்ச்செய்கையை சித்திரை மாத மத்தியிலிருந்து ஆனி மாதம் வரை மேற்கொள்ளலாம். அவரை இனத்தை சேர்ந்தமையால் வேர் முடிச்சுக்கள் காணப்படும். எனவே தாமாகவே வளிமண்டல நைதரசனைப் பாதிக்குமாற்றலால் பசளை இடத்தேவையில்லை. நீர்ப்பற்றான இடமில்லாதிருப்பின் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதுமானது.

பயிர்ப்பெருக்கம் மழை காலத்திலும் பனிக்காலத்திலும் கூடுதலாகக் காணப்படும். பயிரிட்டு நான்கு மாதங்களின் பின் அறுவடை செய்யலாம்.



கோழியவரை எனும் மூலிகையானது யாழ்ப்பாண சித்த மருத்துவ நூல்களான இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், செகராஜ சேகரம் ஆகியவற்றில் எல்லா வகைக் கரப்பான் எனும் தோல் வியாதிகளில் இம் மூலிகையின் சாறு பயன்படுத்துவதைப் பற்றிக் கூறப் பட்டுள்ளது.

இந்திய சித்தமருத்துவநூல்களை விட யாழ்ப்பாண சித்த வைத்திய நூல்களில் கோழியவரையின் பயன்பாடுகள் அதிகளவில் எடுத் தியம்பப்பட்டுள்ளது. இதன் மூலம் இம் மூலிகையானது யாழ்ப்பாணத்திற்கு உரியது என்பதைக் கூறலாம். யாழ்ப்பாணத்தில் மட்டுவில், வட்டுக் கோட்டை, ஐயாரங்காடு, கொடிகாமம், மீசாலை, நாவற்குழி, சரசாலை ஆகிய பிரதேசங்களில் இம்மூலிகையை ஏராளமாக அவதானிக்கலாம். இன்றும் பல பரம்பரை வைத்தியர்களால் கோழியவரைச் சாற்றெண்ணெய் தயாரித்து பல வகையான கரப்பான், தோல் வியாதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு நற்பலன் அமைவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. எந்த சீதோஷ்ண நிலையில் மனிதன் பிறந்து வளர்கின்றானோ அவனுக்கு பிரதேச மூலிகை மருந்துகளைப் பயன்படுத்தினால் இலகுவில் உடலால் ஏற்றுக்கொள்ளப்படும் பக்கவிளைவுகள் இராது.

### மருத்துவபயன்கள்

கோழியவரையின் உலர்ந்த விதைகள் கலங்களின் பெருக்கத்தை குறைக்கும் தன்மையுடையவை. இதனால் ஈரல் நோய்களிலிருந்து ஏற்படும் கலப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இது பயன்படுகின்றது.

இதன் இலைச்சாற்றைநல்லெண்ணெயுடன் சேர்த்து காய்ச்சி வடித்து கரப்பான், சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு மேற்பூச்சாகப் பயன்படுத்தலாம்.

கோழியவரையின் காய்களை மற்றைய அவரை இனங்களுடன் சேர்த்து கறியாக சமைத்து சாப்பிடுவதால், பித்த கபத்தால் உண்டாகும் நோய்கள் தீரும், உடல் உரமாகும். விதை முதிர்ந்த கோழியவரைக் காயை சமைத்துண்ண சுவையின்மை தீரும். உடலில் புரதச் சத்து சேர்ந்து வளர்ச்சியை சீராக்கும்.

கோழியவரையிலைச் சாற்றுடன் கொஞ்சம் சுண்ணாம்பை சிற்றாமணக்கெண்ணெய் விட்டுக் குழைத்து புண்ணின் மேல் பூச புண் ஆறும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டத்தில் கடும் மோதல்
# கார் கண்ணாடி உடைப்பு, வாசன் ஆதரவாளர் கைது

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டம் கானாத்தூரில் உள்ள காமராஜர் அரங்கத்தில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மாவட்ட பொறுப்பாளர் வி. ஆர்.சிவராமனும், முன்னாள் மாவட்ட தலைவர் சக்கரபாணி ரெட்டியாரும் ஒரு காரில் வந்தனர்.

மண்டபத்தின் முன்பு கார் வந்ததும் பட்டாசுகள் வெடிக்கப்பட்டன. அந்தவேளை ஒரு இளைஞர் உருட்டு கட்டையுடன் புகுந்து காரை அடித்து நொறுக்கினார். இதில் காரின் கண்ணாடிகள் நொறுங்கியது.


அதை பார்த்ததும் தொண்டர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனே அந்த இளைஞனை பிடித்து பொலிசில் ஒப்படைத்தனர்.

பொலிஸ் விசாரணையில் அந்த இளைஞனின் பெயர் ஏசுதாஸ். முட்டுக்காட்டை சேர்ந்தவர் என்பதும் ஜி.கே.வாசன் ஆதரவாளர் என்பதும் தெரிய வந்தது.

பொலிசார் அவரை கைது செய்தனர். ஆனால் இதற்கு பின்னணியில் செயற்பட்ட முட்டுக்காடு கிருஷ்ணன் என்பவரையும் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி காங்கிரஸ் தொண்டர்கள் கிழக்கு கடற்கரை வீதியில் மறியலில் ஈடுபட்டனர். இரவு 7 மணி வரை மறியல் நடந்தது. பொலிசார் அவர்களிடம் சமரசம் பேசி மறியலை கைவிட வைத்தனர்.

இதற்கிடையில் இந்த சம்பவத்தை கேள்விப்பட்டு வாசன் ஆதரவாளர்களும் திரள தொடங்கினார்கள். இந்த சம்பவம் காரணமாக அந்த பகுதியில் பொலிசார் குவிக்கப்பட்டனர்.

பதற்றமான சூழ்நிலை நிலவியதால் காங்கிரஸ் ஊழியர் கூட்டம் இரத்து செய்யப்பட்டது. (இ-5)




# சீனாவின் கட்டுமான பணியை இந்தியப்படை தகர்த்தெறியும்

## ராஜ்நாத் எச்சரிக்கை

**இருநாட்டு எல்லையில் இந்திய பகுதியில் சீனா வீதி அமைத்தால் அதைத் தகர்த்து எறிவோம் என மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஜார்க்கண்ட் மாநிலம் கன்ஹா சட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ராஜ்நாத் சிங் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.**

சீனாவுடன் தொடர்ந்து சுமுகமான உறவை பேண இந்தியா விரும்புகிறது. இந்த உணர்வுக்கு சீனா மதிப்பு அளிக்க வேண்டும். குறிப்பாக, இந்திய பகுதிக்குள் ஊடுருவுவதையும் வீதி அமைக்கும் திட்டத்தையும் சீன இராணுவம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அதையும் மீறி இந்திய பகுதிக்குள் வீதிக் கட்டுமானப் பணியை மேற்கொண்டால் அதை தகர்த்து எறிவதைத் தவிர வேறு வழியில்லை என அவர் தெரிவித்தார்.

சமீப காலமாக இந்திய பகுதிக்குள் சீன இராணுவம் தொடர்ந்து அத்துமீறி நுழைந்து வருவதால் இரு நாட்டு எல்லையில் பதற்றம் நிலவுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட சீன ஜனாதிப்தி ஜி ஜின்பிங், பிரதமர் மோடியை சந்தித்துப் பேசிக் கொணடிருந்தபோதும் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றது. மேலும் இந்திய பகுதியில் வீதி அமைக்கும் பணியிலும் சீனா ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், பாஜக தலைமையிலான அரசு மத்தியில் பொறுப்பேற்ற பிறகு இந்தியாவின் பலம் அதிகரித்து வருவதை உணர்த்தும் வகையில் இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ரஜவுரி பகுதியில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு எதிரே பாகிஸ்தான் இராணுவ வீரர்களுக்கு ஆயுதங்களைக் கையாளும் தொழில்நுட்பம் குறித்து சீன இராணுவம் பயிற்சி அளிப்பதாக பிஎஸ்எப் உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய உள் துறை இணை அமைச்சர் ரிஜிஜு டில்லியில் செய்தியாளர்களிடம் கூறும் போது,

"இந்தியாவுக்கு எதிரான இந்த செயலை ஆதரிக்கக் கூடாது என சீன அரசை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், இந்தியா-சீனா எல்லையில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது. இப்பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்காக 20 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

### சீனா மறுப்பு

இது தொடர்பாக சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹாங் லீ கூறும் போது, "இந்திய பாகிஸ்தான். எல்லையில் பாகிஸ்தான் வீரர் களுக்கு சீன இராணுவம் பயிற்சி அளிப்பதாக வெளியான தகவல் உண்மையானது அல்ல.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் சீன இராணுவம் முகாமிட்டுள்ளதாக கடந்த பல ஆண்டுகளாக இந்தியா கவலை தெரிவித்து வருகிறது.

சமீப காலத்தில் இந்திய-பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் சீன இராணுவம் முகாமிட்டிருப்பதாக இந்தியா கூறியிருப்பது இதுவே முதன்முறை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தருமபுரி அரச வைத்தியசாலையில் மேலும் 5 குழந்தைகள் உயிரிழப்பு

## 4 நாட்களில் இறப்பு எண்ணிக்கை 11 ஆக அதிகரிப்பு


தருமபுரி அரசு மருத்துவக் கலலூரி வைத்தியசாலையில் மீணடும் 5 பச்சிளங் குழந்தைகள் இறந்ததால் பதற்றமான சூழல் நிலவுகிறது. கடந்த நான்கு நாட்களில் மட்டும் 11 குழந்தைகள் இறந்துள்ளன.

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையின் பச்சிளங் குழந்தைகள் பிரிவில் கடந்த 14ஆம் திகதி மாலை முதல் 15ஆம் திகதி மாலை வரை 6 குழந்தைகள் இறந்தன. குறைந்த எடை, குறை பிரசவம், நுரையீரல் பாதிப்புக்குள்ளான குழந்தைகளை சிறப்பு சிகிச்சைப் பிரிவில் வைத்து கண்காணித்த நிலையிலும் உடல் நிலை காரணமாக அந்த குழந்தைகள் இறந்ததாக வைத்தியசாலை நிர்வாகம் கூறியது.

மேலும், இந்த இறப்புகளின் பின்னணியில் மருத்துவ குறைபாடு உள்ளிட்ட காரணம் எதுவும் இல்லை என்றும் விளக்கம் தரப்பட்டது. இருப்பினும் பொதுமக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு ஏற்பட்டிருந்தது. இது தணியும் முன்பாகவே 16ஆம் திகதி மாலை 6 மணி முதல் நேற்றுமுன்தினம் மதியம் வரை மீண்டும் 5 குழந்தைகள் இறந்துள்ளன. நான்கு நாட்களில் 11 குழந்தைகள் அடுத்தடுத்து இறந்து விட பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது. (இ-5)




# ஜான்சி ராணியின் ஆங்கிலேயருக்கு எதிரான மனுவை டோனி அப்போட்டிற்கு பரிசாக வழங்கியுள்ளார் மோடி



(சென்னை)


பிரதமர் நரேந்திர மோடி, கிழக்கு இந்திய கம்பனிக்கு எதிராக, ஜான்சி ராணி லட்சுமிபாயின் சார்பாக 1854ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய சட்டத்தரணி ஜான் லோங் தாக்கல் செய்த மனுவை அவுஸ்திரேலியா பிரதமர் டோனி அப்போட்டிற்கு பரிசாக வழங்கினார்.

இந்தியா அவுஸ்திரேலியா இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு முன்னதாக பிரதமர் நரேந்திர மோடி தனது பரிசை டோனி அப்போட்டிற்கு வழங்கினார்.

பிரதமர் நரேந் திர மோடி, அவுஸ்திரேலியா பிரத மர் டோனி அப்போர்ட்டிற்கு, அவுஸ்திரேலிய சட்டத்தரணி ஜான் லாங் நினைவாக, கிழக்கு இந்திய கம்பனிக்கு எதிராக, ஜான்சி ராணி லட்சுமி பாயின் சார்பாக 1854ஆம் ஆண்டு வழக்கறிஞர் ஜான் லோங் தாக்கல் செய்த மனுவைப் பரிசாக வழங்கினார் என்று வெளியுறவுத் துறை செய்தித் தொடரபாளர் சையத் அக்பருதீன் தனது டுவிட்டரில் தகவல் தெரிவித்துள்ளார்.

கிழக்கு இந்திய கம்பனிக்கு எதிராக ஜான்சி ராணியின் சார்பாக 1854 ஆண்டு ஜான் லாங் தாக்கல் செய்த அசல் மனு, என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-5).

# மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றக்கோரி உண்ணாவிரதம்



கர்நாடகத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தை உடனடியாக நிறைவேற்றக்கோரி 300இற்கும் மேற்பட்ட இந்து மத குருமார்கள் பெங்களூரில் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கர்நாடகத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தை அமுல்படுத்த போவதாக அம்மாநில அரசு கடந்த ஆண்டு சட்டப்பேரவையில் அறிவித்தது. இதனைக் கண்டித்து பாஜக, ஆர்எஸ்எஸ், விஷ்வ இந்து பரிஷத், சிவசேனா, ராம சேனா உள்ளிட்ட இந்துத்துவா அமைப்புகள் போராட்டத்தில் குதித்தன. எனவே, அந்த சட்டத்தை கர்நாடக அரசு கிடப்பில் போட்டது.

இந்நிலையில் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த 300இற்கும் மேற்பட்ட இந்து மத குருமார்கள் மூட நம்பிக்கை ஒழிப்பு சட்டம், பெண்கள் பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட 13 கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி பெங்களூரில் நேற்று முன்தினம் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### சமூக நீதிக்கான போராட்டம்

இந்த போராட்டத்தை தொடங்கி வைத்து நீடிமாமுடி சென்னமலா மடாதிபதி வீரபத்ரா சுவாமி கூறுகையில், நம் நாட்டில் நடக்கும் சரிபாதி குற்றச்செயல்களுக்கு ஏதோ ஒரு வகையில் மதம் காரணமாக இருக்கிறது. எதற்காக மதங்கள் ஏற்படுத்தப்பட்டனவோ, அந்த அற நெறியில் இருந்து விலகி மத குருமார்கள் பயணித்து கொண்டிருக்கின்றனர். இதுவே மதத்தின் பெயரால் நடக்கும் அத்தனை பாவங்களுக்கும் முக்கிய காரணம்.

மதத்தின் பெயரால் நடக்கின்ற மூடநம்பிக்கைகள், மிருகத்தனமான சடங்குகள் அப்பாவிகளையும் ஏழைகளையும் குறிப்பாக தலித்துகளை அதிக அளவில் வதைக்கின்றன. கோயில்களில் நடைபெறும் மூடநம்பிக்கை சடங்குகள் அரசியலமைப்பு சட்டத்துக்கு முற்றிலும் எதிரானவை.

சமீபகாலமாக கர்நாடகத்தில் மதத்தின் பெயரால் நடைபெறும் மூடநம்பிக்கைகள் அதிகரித்து வருகின்றன. மடங்களில் தொடரும் குற்றங்களால் மக்கள் இந்து மதத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்து வருகின்றனர். இழந்த நம்பிக்கையை மீட்டெடுக்க மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்த விவசாயிகளுக்கான நட்டஈட்டு கொடுப்பனவு வழங்கும் செயற்பாடு ஆரம்பம்

(கிளிநொச்சி)

காலபோக நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்த விவசாயிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்குவதற்கு அண்மைய வரவு செல்வுத் திட்டத்தில் ஜனாதிபதியினால் முன்மொழிவு வழங்கப்பட்டது.

இதன்படி 2014-2015 ஆம் ஆண்டுகளில் நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்த விவசாயிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கல் கடந்த 16 ஆம் திகதி அனைத்து கமநல சேவை நிலையங்களிலும் நடத்தப்பட வேண்டுமென சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் குறித்த சுற்றுநிருபம் கிளிநொச்சி கமநல திணைக்களத்திற்கு காலதாமதமாக கிடைக்க பெற்றது.

இதனையடுத்து காலபோக நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்த விவசாயிகளின் பெயர் பட்டியல் சேகரிக்கப்பட்டு கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கையை கிளிநொச்சி கமநல சேவை திணைக்களத்தினால் துரிதகதியில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதி கிளிநொச்சி அரச அதிபர் மூலம் கிளிநொச்சி கமநல சேவை திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நட்டஈட்டுக் கொடுப்பனவு தொகை சிறு விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு ஏக்கருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அல்லது நெல்லாக வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

குறித்த சுற்றுநிருபத்தின்படி விவசாயிகளுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்கும் போது ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களிலும் விழா நடத்தப்பட்டு அதில் அரசியலாளர்கள், கமக்கார அமைப்பினர் பங்கேற்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (2-254)




# வடமாகாணசபை உறுப்பினர்களின் நிதியிலிருந்து வாழ்வாதார உதவிகள்



(முல்லைத்தீவு)

வழங்கப்படும் வாய்ப்புக்களை பயனுள்ளதாக்கி மெல்ல மெல்ல நீங்கள் மீண்டுவர வேண்டும். உங்கள் முயற்சிகள் வெற்றி பெற வேண்டும். அவ் வெற்றிதான் எதிர்வரும் காலங்களில் இன்னும் பலருக்கு வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கி அவர்களையும் மேம்படுத்துவதற்கான உந்து சக்தியாக அமையும் என முல்லைத்தீவு மாவட்ட வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், மேரிகலா குணசீலன், கனகசுந்தரசுவாமி ஆகியோர் தெரிவித்தனர்.

26 குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் புதுக்குடியிருப்பு பிரதேச கால்நடை வைத்தியசாலையில் கால்நடை வைத்திய அதிகாரி சி.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேற்படி கருத்தினை அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வடமாகாண சபை உறுப்பினர்கள், கணவரை இழந்த குடும்பங்கள், காணாமற் போனோர் குடும்பங்கள், வறுமையில் வாடும் குடும்பங்கள் என 26 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழி வளர்ப்பிற்கான ஏனைய பொருள் உதவிகளும் வழங்கப்பட்டன.

இன்று வழங்கப்பட்ட இந்த 26 குடும்பங்களின் வாழ்வாதார வெற்றிதான் இனிவரும் காலங்களில் இன்னும் பலருக்கு வாழ்வாதார உதவித் திட்டங்களை வழங்கி அவர்களையும் மேம்படுத்துவதற்கான உந்து சக்தியாக அமையும்.

உங்கள் முயற்சிகளுக்கு துணையாக கால்நடை வளர்ப்போர் சங்கம், கால்நடை வைத்தியர் அலுவலகம் மற்றும் மக்களின் பிரதிநிதிகளாக நாமும் உள்ளோம்.

உங்கள் வெற்றிகளை உறுதி செய்யுங்கள் என்ற தொனியில் வடமாகாணசபை உறுப்பினர்கள் தமது கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர்.

2014 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் மேற்படி வடமாகாண சபை உறுப்பினர்களின் நிதியொதுக்கீட்டின் கீழ் இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# காடுகளில் சட்டவிரோதமாக தறிக்கப்பட்ட மரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் பொது மக்களால் சட்டவிரோதமாக தறிக்கப்பட்ட பெருமளவான மரங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பல்வேறு தேவைகளுக்காகவும் விற்பனை நோக்குடனும் வவுனியா மாவட்டக் காடுகளில் பொது மக்கள் சட்டவிரோதமாக மரங்களை தறிப்பதாக வனவளத்துறை அதிகாரிகள் பொலிஸாரிடம் முறையிட்டு வந்தனர். இதனையடுத்து வவுனியா பொலிஸார் நடத்திய தேடுதல் வேட்டையில் பெறுமதிமிக்க பெருமளவான மரங்கள் கைபற்றப்பட்டுள்ளன.

மரங்களை வெட்டி உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்லும்போதே இவை கைப்பற்றப்பட்டதாகவும், இவ்வாறு கைப்பற்றப்பட்ட மரங்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியானவையெனவும் வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விறகுப் பாவனைக்கென கூறி பொதுமக்கள் அதிகளவான மரங்களை வேறு தேவைகளுக்காக வெட்டிச் செல்வதாக வனத்துறை அதிகாரிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடு தொடர்ந்து செல்லுமானால் சம்பந்தப்பட்டவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)




வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்கள் கலந்து கொண்ட விழா அண்மையில் நடைபெற்ற போது...

## துணுக்காயில் நடமாடும் வைத்தியசிகிச்சை முகாம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் பொது மக்களின் நலன் கருதி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நடமாடும் வைத்திய சிகிச்சை முகாம் மல்லாவி பிரதேச வைத்தியசாலையில் நடைபெறும் என துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் அறிவித்துள்ளார்.

இந்த வைத்திய சிகிச்சை முகாமில் விசேட வைத்திய குழுவினர்கள் பங்கேற்று சிறுநீரக நோய் சிகிச்சை, பல் சிகிச்சை, கண்சிகிச்சை, இயல்மருத்துவம், தொற்றாநோய் சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை உட்பட பொது மருத்துவம் தொடர்பான சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன. எனவே இப் பிரதேச மக்கள் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பயனடையுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# முல்லை.வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் கலந்துரையாடலும் புதிய உறுப்பினர் தெரிவும்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்றியத்தின் கலந்துரையாடலும் புதிய உறுப்பினர் தெரிவும் கடந்த 16 ஆம் திகதி முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நூறிற்கு மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டுதமது கருத்துக்களை வழங்கினர்.

புதிய உறுப்பினர் தெரிவின் போது, தலைவராக கனகசுந்தரசுவாமி ஜனமேஜயந், செயலாளராக பாலசுப்பிரமணியம் திருக்குமார், பொருளாளராக சிவலிங்கம் றமணி ஆகியோர் தெரிவாகினர்.

இணைப்பாளர்களாக செல்லத்துரை சிவகுமார், ஆனந்தராசா ரஞ்சிதா, தியாகராசா ராகவன், மகாலிங்கம் உசாந்தினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் ஒன்றியம் அமைக்கப்பட்டமைக்கான நோக்கம், அதன் எதிர்கால செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் கடந்த காலங்களில் பட்டதாரி நியமனங்களுக்காக தனித்தனியாக ஒவ்வொருவரும் பல முயற்சிகள் மேற்கொண்ட போதும் அவை எதுவும் பயனளிக்கவில்லையெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு ஏனைய மாவட்டங்களில் உள்ளது போன்று இவ் ஒன்றியத்தின் அவசியம் உணர்த்தப்பட்டதோடு கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.


எதிர்வரும் காலங்களில் அரசாங்க அதிபருடன் இது தொடர்பாக கலந்துரையாடியதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்கத் தவறிய வேலையற்ற பட்டதாரிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை தமது பிரதேசத்துக்கான இணைப்பாளருடாக மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டது. (2-300)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் புதிய பட்டுப்பாதை

## அனைத்துலக வல்லாதிக்கத்திற்கான சவால்



இந்திய மாக்கடல் பிராந்தியத்திலுள்ள சிறிய நாடுகளான பூட்டான், இலங்கை மற்றும் நேபாளம் போன்றவற்றில் சீனாவின் செல்வாக்கு கையோங்குவதன் மூலம் இப்பிராந்தியத்தில் சீனா வலுமிக்கதாக மாறிவிடுமோ என இந்தியா அச்சப்படுகின்றது.

கிழக்கு ஆசியாவை ஐரோப்பாவுடன் இணைப்பதற்கான மிகப் பாரிய வர்த்தக மற்றும் கட்டுமான வலைப்பின்னல் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக 2013 இல் சீன அதிபர் ஜி ஜின்பிங் தகவல் வெளியிட்டார். புதிய பட்டுப்பாதை (NEW Silk Road) மற்றும் கடல்வழிப் பட்டுப்பாதை (Maritime Silk Road) ஆகியவையே இவ்விரு திட்டங்களாகும்.

சீன அதிபர் இத்திட்டங்கள் தொடர்பான தகவலை வெளியிட்டு ஓர் ஆண்டிற்குள் இவற்றை அமுல்ப்படுத்துவதில் சீன அரசாங்கம் முனைப்பும் ஆர்வமும் காண்பித்தது. தனது அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டிய இடத்தில் தனது நிதியைச் செலவிடுதல் அவசியமானது என்பதை சீனாவின் இந்த நகர்வு உறுதிப்படுத்தியது.

திட்டமிடப்பட்ட பட்டுப் பாதை பொருளாதார அபிவிருத்தியின் ஒரு பகுதியாக சீன மாகாணங்களில் தொடரூந்துப் பாதைகள், வீதிகள் மற்றும் நீர்க் குழாய்கள் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் 16.3 பில்லியன் டொலர்களை ஒதுக்குவதென சீனா தீர்மானித்துள்ளதாக சீன அரசாங்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி Bloomberg ஊடகம் செய்தி வெளியிட்டது. இந்தச் செய்தியை சீன அரசின் சீன டெய்லி தனது ஊடகத்தில் வெளியிட்டுள்ளது. சீனாவால் மிகப் பெரியளவில் முதலீடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்படும் இவ் அபிவிருத்தித் திட்டமானது சீனாவின் பின்தங்கிய பிரதேசங்களை முன்னேற்றுவதை நோக்ககாகக் கொண்டாலும் புதிய பட்டுப் பாதைத் திட்டத்தை முழுமைப்படுத்துவதே இதன் பிரதான நோக்காகும்.

இதேவேளையில் இத்திட்டத்திற்குள் உள்ளடங்கும் நாடுகளுக்கு சீன வங்கிகள் கடனாக நிதியை வழங்குவதற்கான உந்துதலை அளிப்பதென்பதுவும் சீனாவின் கோட்பாடாகும். பட்டுப் பாதைத் திட்டத்தில் சீனாவின் பங்காளி நாடுகளுக்கு ஏற்கனவே நிதி வழங்கப்படும் என சீனாவால் உறுதியளிக்கப்பட்டது. இந்த வகையில், இலங்கையின் துறைமுக அபிவிருத்திக்காக 1.4 பில்லியன் டொலர்களும் மத்திய ஆசியாவின் கட்டுமான மற்றும் சக்தி அபிவிருத்திக்காக 50 பில்லியன் டொலர்களும் ஆப்கானிஸ்தானுக்கு பொது உதவியாக 327 மில்லியன் டொலர்களும் வழங்குவதாக சீன அறிவித்திருந்தது என சீன டெய்லி ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது. இதுதவிர சீனாவின் புதிய ஆசிய கட்டுமான முதலீட்டு வங்கியானது ஆசிய நாடுகளின் அபிவிருத்தி மேம்பாட்டுக்காக மேலும் நிதி வழங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. சீனாவின் பட்டுப் பாதைத் திட்டமானது முழுமையாக நிறைவடையும் போது 21.1 றில்லியன் டொலர்கள் செலவாகும் என வோன்ற் சீன ரைம்ஸ் கணிப்பிடுகிறது.

சீனா ஆரம்பத்தில் தனது பட்டுப்பாதைத் திட்டத்தில் குறிப்பிடாத சில இடங்களை கடந்த ஆறுமாத காலத்தில் இணைத்துள்ளதாக சீன ஊடகம் குறிப்பிட்டுள்ளது. அதாவது மொஸ்கோ, ரஸ்யா: ருசன்பே, ரஜிகிஸ்ரான்: ஜகற்றா, இந்தோனேசியா: கொழும்பு, இலங்கை போன்றனவே சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்திற்குள் உள்வாங்கப்படும் இடங்களாகும். இதற்கப்பால் சீனா தற்போதும் தனது முக்கிய பங்காளி நாடுகளை விரிவுபடுத்தி வருகிறது. அண்மையில் ஆப்கான் அதிபர் அஸ்ராப் கானி சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டமையும் பட்டுப்பாதைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

பட்டுப்பாதைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள பெரும்பாலான பிராந்திய நாடுகள் தமது மக்களின் முன்னேற்றத்திற்காக சீனாவின் நிதியுதவியைப் பெறுவதில் ஆர்வங்காட்டுகின்றன. ஒரு நாடு செல்வந்த நாடாக மாறுவதற்கு முன்னர் அதன் வீதிகள் சிறப்புற செப்பனிடப்பட்டிருக்க வேண்டும் என சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஹொங் லீ அண்மையில் ஊடக மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

உலகின் முன்னணி நாடுகளின் சீனா மட்டுமே அனைத்துலக உதவி வழங்குவதற்குத் தயாராகவுள்ள நாடாக இருக்கலாம். சீனாவின் இப்போக்கானது மத்திய ஆசிய நாடுகள், இந்திய மாக்கடல் நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றில் உள்ள அதிகாரவலுமிக்க நாடுகள் சீனாவுடன் ஏலப்போரை மேற்கொள்வதற்கான வழியை உருவாக்கலாம். இந்த நாடுகள் சீனாவின் நிதியுதவியானது இராஜதந்திர நோக்கைக் கொண்டதேயன்றி வேறொன்றுமல்ல எனக் கூறலாம். எடுத்துக்காட்டாக, இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் உள்ள சிறிய நாடுகளான பூட்டான், இலங்கை மற்றும் நேபாளம் போன்றவற்றில் சீனாவின் செல்வாக்கு கையோங்குவதன் மூலம் இப்பிராந்தியத்தில் சீனா வலுமிக்கதாக மாறிவிடுமோ என இந்தியா அச்சப்படுகின்றது என்பதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

சீனாவைப் பொறுத்தளவில் புதிய பட்டுப்பாதை மற்றும் கடல் சார் பட்டுப் பாதை போன்றன சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கும் தனது மென்மையான பக்கத்தைக் காண்பிப்பதற்குமான வாய்ப்பாகவே காணப்படுகின்றன. சீனா பெருந்தொகையான் நிதியை பிராந்திய நாடுகளுக்கு வழங்குவதன் மூலம் அந்த நாடுக்கள் சீனா தமக்கு எவ்விதத்திலும் அச்சுறுத்தலாக இருக்கவில்லை. மென்போக்கையே கடைப்பிடிக்கின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதன்மூலம் சீனாவானது மென்போக்காக நடக்கும் அதேவேளையில் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் தனது செல்வாக்கையும் அதிகரிப்பதற்கான ஏதுநிலைகள் தோன்றுகின்றன.

சீனாவின் பொருளாதார வலு தற்போது மேலும் அதி கரித்து வருகிறது. சீனாவா னது தனக்கான நல்வாய்ப்பாகக் காணப்படும் தனது நிதிவளத்தைப் பயன்படுத்தி வெளியுறவுச் செல்வாக்கை வலுப்படுத்துவதை தனது நல்வாய்ப்பாகக் கருதுவது இயற்கையானதாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவால் அமுல்படுத்தப்பட்ட மார்சல் திட்டத்துடன் சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தை சிலர் ஒப்பீடு செய்கின்றனர். இவ்விரு வாய்ப்புக்களின்போதும் அதிகரித்து வரும் பிராந்திய அதிகார சக்தியானது தனது பொருளாதாரப் பலத்தைப் பயன்படுத்தி தனது வெளியுறவு இலக்குகளை அடைய விரும்புகின்றன. தனது நாட்டின் பொருளாதாரத்தையும் இதன்மூலம் வலுப்படுத்துவதே இதன் அடிப்படை நோக்காகும். அமெரிக்காவின் மார்சல் திட்டமானது அனைத்துலக அரங்கில் அமெரிக்கா ஒரு வல்லரசாகத் திகழ்வதற்கு உதவியது. இதேபோன்று சீனாவும் தனது இரண்டு பட்டுப் பாதைத் திட்டங்களின் மூலம் அனைத்துலக வல்லாதிக்க சக்தியாக வருவதற்கான சவாலை விடுத்துள்ளது.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் சமூக நலப்பணிகளுக்கென வழங்கப்பட்ட 43 இலட்சம் ரூபா பணம் செலவீடு செய்யப்படவில்லை

## பொது மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் குற்றச்சாட்டு

**த.தேசகூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட துணுக்காய் பிரதேசசபைக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றினால் மக்கள் நலன் சார்ந்த பணிகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்ட 43 இலட்சம் ரூபா பணம் இரு மாதங்கள் கடந்த நிலையிலும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லையென இப் பிரதேச வாழ் மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் குற்றம் சாட்டுகின்றனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது, துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொது மக்கள் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுகின்ற போது அவர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்ட குற்றப்பணத்திலிருந்து ஒரு தொகுதிப்பணம் அப் பிரதேச மக்களின் பொது நலப் பணிகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால் துணுக்காய் பிரதேசசபையிடம் வழங்கப்படுகிறது.

இதன் பிரகாரம் கடந்த மாதம் 43 இலட்சம் ரூபா பணம் துணுக்காய் பிரதேச மக்களுடைய கிராமப்புற வீதிகள் புனரமைப்பதற்காகவும் மற்றும் மல்லாவி நகரப் பகுதி, துணுக்காய் நகரப்பகுதி என்பவை உள்ளடங்கலான மக்கள் கூடும் பொது இடங்களில் இரவு நேர மின் விளக்குகள் ஊடாக மின்னொளி வழங்குவது உட்பட பொது நூலகங்கள் எனப்பலதரப்பட்ட மக்கள் சமூக நலப் பணிகளைமேற்கொள்வதற்காகமுல்லை. நீதிமன்றினால் வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் பிரதேச சபை இப்பணத்தினை பொது மக்களின் நலன்களுக்காக செலவீடு செய்யாது தமது கையிருப்பில் வைத்துள்ளதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்தோடு தமது பிரதேசத்துக்குட்பட்ட கிராம வீதிகள் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் இருக்கின்ற போது துணுக்காய் பிரதேச சபையின் வளாகத்தினுள் குளிரூட்டியகூரைத்தகடுகள் பொருத்திய வாகனத்தரிப்பிடம் ஒன்றை நீதிமன்றினால் வழங்கிய பணத்தில் இருந்து அமைப்பதற்கு தவிசாளர் முயற்சித்ததாகவும் பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டுகின் றனர்.

எனவே உரிய தரப்பினர் இவ்விடயத்தில் கவனமெடுத்து ஏற்கனவே இப்பிரதேச சபையினுடைய ஒரு கோடியே 64 இலட்சம் ரூபா பணம் வங்கியில் நிரந்தர வைப்பில் வைக்கப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றினால் வழங்கப்பட்ட 43 இலட்சம் ரூபா நிதியையும் மக்கள் நலன் பணிகளுக்காக செலவிடாது இருப்பதைக் கருத்தில் கொண்டும் பிரதேச சபையினுடைய ஆயுள்காலம் எதிர்வரும் ஆண்டு ஜூலை மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக இப் பணத்தினை மக்கள் நலன் பணிகளுக்கு செலவீடு செய்யுமாறு அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)




# சிற்றூழியர்களுக்கான நியமனம் தொடர்பில் கரைச்சி பிரதேசசபையில் ஆராயப்படுகின்றது

## தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் தற்காலிகமாக கடமையாற்றிய 41 பணியாளர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் சபை தவிசாளர் நா.வை.குகராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் இதுவரை காலமும் கரைச்சி பிரதேச சபையில் ஒப்பந்த அடிப்படையில் நூலக பணியாளர்கள், வீதி சுகாதாரப் பணியாளர்கள், சுகாதார சுத்திகரிப்பாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர், வாகன சாரதிகள், சந்தை வரி அறவீட்டாளர்கள், அலுவலகப்பணியாளர்கள் எனக் கடமையாற்றிய 41 பணியாளர்களுக்கே நிரந்தர பணியாளர் நியமனம் வழங்கப்பட்டது.

அத்தோடு வரவு செலவு திட்ட அண்மைய சுற்று நிருபத்திற்கு அமைய 180 நாட்கள் தொடர்ந்து பணியாற்றிய சிற்றூழியர்களுக்கான நியமனம் சபையினால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தெரிவிக்கையில்,

நீண்ட காலமாக கரைச்சி பிரதேச சபையில் பணியாளர்கள் பற்றாக்குறை காணப்பட்டது.

மேற்படி வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட போதிலும் வருமான பரிசோதகர்கள் 4 பேரும் உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர்கள் 5 பேரும் மேலதிகமாகத் தேவையாகவுள்ளது.

அத்துடன் கரைச்சி பிரதேச சபைக்கு செயலாளர் இதுவரை நியமிக்கப்படாமையால் அவரது கடமையினை பதில் செய லாளரே நிறைவேற்றி வருகின்றார் என அவர் தெரிவித்தார். (2-271)

# பள்ளங்களில் நீர்தேங்கி நிற்பதால் மக்கள் பயணிக்க முடியாதுள்ளது

## கரைச்சி பிரதேசசபை கவனத்தில் எடுக்குமா? பயணிப்போர் கேள்வி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி புகையிரத பாதைக்கும் பொதுச்சந்தைக்கும் இடைப்பட்ட மீன் சந்தைக்குச் செல்லும் பிரதான நுழைவாயில் வீதியானது நீண்ட காலமாகபுனரமைப்புப்பணிகள் எதுவும் இடம்பெறாத நிலையில் அவ்வீதி பள்ளங்கள் நிறைந்து நீர் தேங்கி நிற்பதால் பயணிப்பதற்கு இடையூறாக உள்ளதாக பயணிப்போரால் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பெய்துவரும் பருவமழையை அடுத்து இவ்வீதியில் காணப்படும் பெரிய பள்ளங்களில் நீர் தேங்கி நிற்கின்றது. இந்நிலையில் இவ்வீதியை செப் பனிடுவதற்கு இதுவரை எவரும் முன்வரவில்லை யென பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பாதையூடாக இரவு நேரங்களில் பயணிக்கும் போது இப்பள்ளங்களில் பயணிகள் விழுந்தெழும்பும் சம்பவம் அடிக்கடி இடம் பெற்று வருகிறது. அத்துடன் விபத்துக்களும் இடம்பெற்று வருகிறன.

இப்பகுதி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்டதாகும். கரைச்சி பிரதேச சபையினிடம் செப்பனிடுவதற்கான வாகனங்கள், மண் அகழ்வதற்கான இயந்திரங்கள் போன்றன உள்ள போதிலும் இப் பள்ளங்களுக்கு கிரவல் மண் இடப்பட்டு மேவப்படாது இருப்பது ஏன் என பயணிப்போர் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆகவே கரைச்சி பிரதேச சபை தவிசாளர் இவ் வீதியை நேரில் சென்று பார்வையிட்டு விரைந்து சீர்ப்படுத்தி தருமாறு பயணிகளும் பொதுமக்களும்கோரிக்கை விடுக்கின்றனர்.(2-271)

# காடுகளை அழித்து குடியிருப்புக்களாக மாற்றுவதற்கு சட்டத்தில் இடம் இல்லை

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

காலநிலை மாற்றம் காரணமாக நாம் நினைத்த மாதிரி காடுகளை அழித்து குடியிருப்புக்களாக மாற்றுவதற்கு சட்டம் இடம்கொடுக்காது. அந்தளவுக்கு சட்டத்தில் இறுக்கம் காணப்படுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பளை பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அண்மையில் வனவளத்திணைக்கள காணிகளிலும் எல்ஆர்சி காணிகளிலும் வாழ்ந்து வந்த 75 குடும்பங்களுக்கு சொந்தமாக காணிகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


சட்ட இறுக்கங்களை கடந்து எமது மக்களின் பல வருட அவலத்தை தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக தொடர்ச்சியாக மேற்கொண்ட கடுமையான முயற்சிகள் ஊடாக இந்த விடயம் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது.

வனவளத்திணைக்கள அதிகாரிகள் காணிகளை மக்களுக்கு குடியிருப்புக்களுக்காக சொந்தமாக வழங்குவதற்கு மறுத்துவிட்டார்கள். இது மீள் உருவாக்கப்பட்ட வனவளம் எனக் கூறி தடுத்துவிட்டனர். இருந்த போதும் நாம் தொடர்ச்சியாக பல அழுத்தங்களை மேற்கொண்டு வெற்றிகொண்டுள்ளோம்.

இவ்வாறே கரைச்சி பிரதேசத்தில் வட்டக்கச்சி மற்றும் யூனியன் குளம் பிரதேசத்திலும் காணியற்ற மக்களுக்கு காணிகளை சொந்தமாக வழங்கியுள்ளோம்.

மக்கள் தங்களுக்கு என்று சொந்தமாக ஒரு துண்டு காணியில்லையென்றால் அது அவர்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு ஒரு தடையாகவே இருக்கும். அந்த தடை தகர்க்கப்பட்டுள்ளது. இனி வரும் காலங்களில் இன்று காணிகளை பெறும் மக்கள் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். இதனை தவிர ஏனைய உட்கட்டுமான வசதிகளையும் நாம் விரைவில் ஏற்படுத்தி தருவோம் என்றார். (2)







பாதுகாப்புப்படை பிரிவினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதற்குமாக கடந்த 16, 17,ஆம் திகதிகளில் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சாசக நிகழ்வின்போது..

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊழல்களுக்கு எதிராகவும், பிரதமரை பதவி விலகக்கோரியும் நேற்று முன்தினம் ஹங்கேரியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

# பயங்கரவாதத்தினை தடுத்து நிறுத்த முடியும்

## ஆஸியில் பிரதமர் மோடி நம்பிக்கை

பயங்கரவாதிகளுக்கு இணைய வசதி ஏதுவாக அமைந்துவிட்டதைச் சுட்டிக்காட்டிய பிரதமர் நரேந்திர மோடி, நம் நாடுகளுக்குள் துறைமுகம் வாயிலாக நுழைய முற்படும் பயங்கரவாதத்தை நம்மால் தடுத்து நிறுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஜி20 மாநாட்டில் பங்கேற்க அவுஸ்திரேலியா சென்றுள்ள பிரதமர் மோடி, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார். அதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே முக்கிய 5 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

கான்பெராவில் உள்ள அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றினார்.

இதன்போது, அவுஸ்திரேலியாவுக்கு இந்திய பிரதமர் வருவதற்கு 28 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலை கூடிய விரைவில் மாறும். அவுஸ்திரேலியா மீது இந்தியா எப்போதும் மிகுந்த மரியாதை கொண்டுள்ளது. இந்த நாட்டின் மீதான எங்களது பார்வை எல்லைக்கு உட்பட்டதல்ல.


இரு நாடுகளுக்கு பயங்கரவாதம் மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறது. இந்தியா தொடர்ந்து 30 ஆண்டுகளாக பயங்கரவாதத்துக்கு எதிராக போராடி வருகிறது. பயங்கரவாதத்தின் மீது சரியான புரிதலை நாங்கள் கொண்டுள்ளோம். பயங்கரவாதிகள் தற்போது தங்களது எல்லையை விரிவாக்கம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இதற்கு இணைய வசதி அவர்களுக்கு ஏதுவாகிவிட்டது.

வன்முறையை தொழில்நுட்பத்தின் மூலம் இணைத்து அவர்கள் சாதிக்க நினைக்கின்றனர். பண மோசடி, போதை மருந்து கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தல் ஆகியவை இணையத்தின் வழியாகவே நடத்தப்படுகின்றன. உலகளாவிய பிரச்சினையாகிவிட்ட இவற்றை நாம் ஒன்றாக எதிர்க்க வேண்டும். உலகளாவிய பிரச்சினைகளுக்கு உலகளாவிய தீர்வு காணப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# ஜேர்மன்-செக் குடியரசின் ஜனாதிபதிகள் மீது முட்டை வீச்சு

(பெர்லின்)

செக் குடியரசில் வெல்வட் புரட்சியின் 25 வருடப் பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வில் அந்நாட்டின் ஜனாதிபதி மீது முட்டை வீசித்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



ரஷ்யாவுக்கு ஆதரவாக செக்குடியரசின் ஜனாதிபதி மிலோஸ் ஸேமன் செயற்படுவதன் காரணமாக அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்றுள்ளன.

செக் குடியரசில் கம்பியூனிஸ்ட் ஆட்சி நிறைவுக்கு வந்ததை நினைவு கூறும் விதமாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஜேர்மன் ஜனாதிபதி மீதும் முட்டை வீச்சு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# தீவிரவாதத்தால் பலியாவோரின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் பலமடங்கு அதிகரிப்பு

## 2013இல் மட்டும் 18 ஆயிரம் பேர் பலி

அவுஸ்திரேலியாவை மையமாக கொண்டு இயங்கும் பொருளாதாரம் மற்றும் அமைதி கல்வி நிறுவனம் ஒன்று தீவிரவாத பாதிப்புகள் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உலக அளவில் 2013 இல் தீவிரவாத தாக்குதல்களில் அதிகமான பேர் கொல்லப்பட்டு உள்ளனர். 2014இல் இது இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டை விட 2013 இல் 60 சதவீதம் தீவரவாதத்தால் கொலலப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

இதில் ஆப்கானிஸ்தான், ஈராக், பாகிஸ்தான், நைஜீரியா, சிரியா ஆகிய நாடுகளில் 80 சதவீத இறப்பு ஏற்பட்டு உள்ளது. இதில் ஈராக் மிகவும் மோசமாக உள்ளது. அங்கு 2013 இல் தீவிரவாதத்திற்கு 6300 பேர் பலியாகி உள்ளனர்.

அல் கொய்தா, தலிபான், போகோ ஹராம், ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கம் ஆகியவை இந்த தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டு உள்ளன. இதில் 66 சதவீத தீவிரவாத தாக்குதல்களுக்கு இந்த இயக்கங்கள் பொறுப்பு ஏற்று உள்ளன.

2013 ல் சுமார் 18 ஆயிரம் பேர் தீவிரவாதத்தால் பலியாகி உள்ளனர். 2012 இல் 11 ஆயிரம் பேர் தீவிரவாதத்தால் பலியாகி உள்ளனர்.

2000 ஆண்டு வரை 50 ஆயிரம் தீவிரவாத தாக்குதல்களில் ஒரு இலட்சம் மக்கள் பலியாகி உள்ளனர். 2000 ஆண்டில் தீவிரவாதத்திற்கு 3400 பேர் பலியாகி இருந்தனர். அது 2013 இல் 5 மடங்காக உயர்ந்து உள்ளது இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது. அமெரிக்கா வெளியிட்டு உள்ள உலக தீவிரவாத இறப்பு அறிக்கையில் இருந்து இத்தகவல் பெறப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



# வழிபாட்டுத் தலத்தின் மீது தாக்குதல்; அமெரிக்கா-இஸ்ரேல் கடும்கண்டனம்

(இஸ்ரேல்)

கிழக்கு ஜெருசலேம் நகரை, இஸ்ரேல் கடந்த 1967ஆம் ஆண்டு முதல் தனது ஆக்கிரமிப்பின் கீழ் வைத்துள்ளது. ஆனால் பாலஸ்தீனர்கள் இந்த நகரை தங்களது எதிர்கால தலைநகர் ஆக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். இதற்கிடையே அங்கு ஒரு வழிபாட்டுத்தலத்தின் மீது இரு தரப்பினரும் சொந்தம் கொண்டாடுகின்றனர். இது தொடர்பாக இரு தரப்பினரும் அடிக்கடி தாக்குதல்கள் நடத்துவதும், தாக்குதல்களுக்கு ஒருவர் மற்றவரை குறை கூறுவதும் தொடர்ந்து வருகிறது.

கிழக்கு ஜெருசலேமில் ஹார் நாப என்ற இடத்தில் யூத வழிபாட்டு தலம் ஒன்று உள்ளது. அங்கு யூத மதத்தினர் நேற்று காலை வழிபாடு நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு கத்திகள், கைத் துப்பாக்கிகள், கோடரிகளுடன் 2 பேர் திடீரென நுழைந்தனர்.

அவர்கள் வழிபாடு நடத்திக் கொண்டிருந்த மக்கள் மீது கொடூரமான தாக்குதல்கள் நடத்தினர். இதில் 2 பேர் பலியானார்கள். வழிபாட்டுத்தலத்தின் அருகே இருந்த பாதுகாப்பு படை அதிகாரிகள் தாக்குதல் நடத்திய மர்ம ஆசாமிகள் 2 பேரையும் அவர்கள் சுட்டுக்கொன்றனர்.

அவர்களையும் சேர்த்து இந்த சம்பவத்தில் மொத்தம் 4 பேர் பலியாகினர். 13 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரத்மர் பெஞ்சமின் நேட்டன்யாஹு கடும் கண்டனம் தெரிவித்தார். அவர் தனது டுவிட்டர் இணைய தளத்தில் வெளியிட்டு உள்ள தகவலில் இந்த கொடூர தாக்குதல் நடத்த காரணமானவர்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம். என கூறியுள்ளார்.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஜான் கெர்ரி கூறும் போது இது தூய பயங்கரவாத, அர்த்தமற்ற மிருகத்தனம்மற்றும்வன்முறை செயல்" என கூறியுள்ளார்.

இந்த தாக்குதலை ஹமாஸ் இயக்கத்தினரும், ஒரு தீவிரவாத அமைப்பினரும் பாராட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தற்கொலைப்படைத் தாக்குதலில் ஆப்கானிஸ்தானில் நால்வர் பலி!

ஆப்கானிஸ்தானில் தற்கொலைப்படை தாக்குதலில் 4 பேர் பலியாகினர் என்று அரசு தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வரும் தலீபான் தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் நேட்டோ சர்வதேச படை வீரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இருப்பினும் தீவிரவாதிகள் அதிரடி தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். இந்தநிலையில் தலைநகர் காபூலில் தற்கொலைப் படை தீவிரவாதி நடத்திய தாக்குதலில் 4 பேர் பலியானார்கள். காபூலின் கிழக்கு புறநகர் பகுதியில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களின் குடியிருப்பு வளாகம் உள்ளது. லொறியில் வெடிபொருட்களை ஏற்றி வந்த தற்கொலைப்படை தீவிரவாதி, குடியிருப்பு வளாகத்தின் நுழைவு வாயில் முன்பு மோதி வெடிக்கச் செய்தான்.

இதில் அங்கு பணியாற்றிய 2 காவலாளிகள் பலியாகினர். மேலும் அப்பகுதியில் இரண்டு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தாக்குதல் நடத்தியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பு நடத்துவதற்கு முன்னதாக துப்பாக்கி சூடும் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று உடனடியாக தெரியவில்லை.

தாக்குதல் நடந்த இடம் நேட்டோ படை வீரர்கள் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களின் குடியிருப்பு நிறைந்த பகுதியாகும். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு கடக்கும் மட்டும்தான்
அண்ணனும் தம்பியும்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாவீரர்களைப் பிடிக்கும் போராளிகளைப் பிடிக்காது

இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது, அவரின் மரணச் சடங்கிற்கு முதலில் வந்தவர் அப்போதைய பாகிஸ்தான் பிரதமர்.

இந்திரா காந்தி அவர்கள் பிரதமராகப் பதவியில் இருந்த காலம் வரை ஏதோவொரு வகையில் பாகிஸ்தான் அவருக்கு உபத்திரம் கொடுத்துக் கொண்டே இருந்தது. இந்திரா காந்தி இறந்தவுடன் அவரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்ததுடன் அவரின் இறுதிக் சடங்கில் வந்து கலந்து கொள்வதிலும் பாகிஸ்தான் முண்டியடித்தது.

இத்தகைய நிலைமை எங்கள் அரசியல்வாதிகளிடமும் இருப்பதைக் காண முடிகிறது. பொதுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி என்பது விடுதலைப் புலிகளை மையப்படுத்தியதாகும்.

விடுதலைப் புலிகளின் கைகளால் ஞானஸ்தானம் பெற்றுக் கொண்டவர்கள் என்ற ஒரே காரணத்தினால் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்தனர்.

எனினும் விடுதலைப் புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டு அந்த அமைப்பின் இயங்கு நிலை முடிவுறுத்தப்பட்ட போது, புலிகளைப் பற்றிப் பேசுவது மெல்ல மெல்லக் குறைந்து போனது மட்டுமன்றி சில இடங்களில் புலிகளைத் தாக்கிப் பேசுகின்ற நிலைமைகளும் காணப்பட்டன.

இதை நாம் கூறும்போது, விடுதலைப் புலிகளைத் தாக்கிப் பேசக் கூடாதா? அவர்கள் விட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டி விமர்சனம் செய்யக் கூடாதா? என்று நீங்கள் கேள்வி கேட்டால் அதில் நிறையவே நியாயம் இருக்கும். எனினும் விடுதலைப்புலிகள் இருக்கும் வரை ஆமாம் போட்டு விட்டு, அவர்கள் இல்லாத காலத்தில் அவர்கள் பற்றி விமர்சனம் செய்வது எங்களிடம் இருக்கக் கூடிய நேர்மையீனத்தைக் காட்டுவதாகும்.

அதேநேரம் 2009 ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரின் பின்னர் போராளிகள் பலர் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

"புனர்வாழ்வு" என்பதற்குப் பின்னர் முன்னாள் போராளிகளின் வாழ்க்கை எவ்வாறு உள்ளது என்று ஒரு கணமேனும் நம் அரசியல்வாதிகள் சிந்தித்ததுண்டா? தமக்குத் தேவைப்படும் போதெல்லாம் விடுதலைப் புலிகளை உச்சரிக்கும் தமிழ் அரசியல்வாதிகள், தேர்தல் காலங்களிலும் அரசியல் இலாப நோக்கிலும் மாவீரர்களை முன்னிறுத்த ஒரு போதும் தவறியதில்லை.

எனினும் முன்னாள் போராளிகளின் யதார்த்த நிலைமை எவ்வாறு உள்ளது என்றோ? அவர்களுக்கான சமூக அந்தஸ்து, வேலைவாய்ப்பு, அவர்களின் குடும்ப சூழ்நிலை எத்தன்மையது என்பது பற்றியோ நாம் யாரேனும் கவனம் எடுத்தோமா?

மாவீரர்களை விரும்பும் நம் அரசியல்வாதிகளுக்கு போராளிகளைப் பிடிக்காமல் போனது ஏன்?

மண்மீட்புக்காகப் புறப்பட்டு மிகப் பெரும் சூறாவளியில் சிக்கியவர்கள் இன்று ஒதுங்கி வாழ்கிறார்கள். அவர்கள் பற்றிப் பேசிக் கொள்வதை நம் அரசியல்வாதிகள் முற்றுமுழுதாகத் தவிர்த்துக் கொள்கின்றனர். அவர்களின் பாதுகாப்பிற்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை.

மன்னாரில் முன்னாள் போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னணி கூட, முன்னாள் போராளிகளின் பாதுகாப்பிற்கு இருக்கக் கூடிய ஆபத்தைக் காட்டுகிறதல்லவா? இதுவே நிலைமை என்றாகும் போது முன்னாள் போராளிகளின் பாதுகாப்பு அவர்களின் ஜீவனோபாயத்துக்கான உத்தரவாதம் பற்றி நாம் சிந்திக்கவேண்டுமல்லவா?

மண்மீட்புப் போரில் தம்மை அர்ப்பணித்தவர்கள் அச்சுறுத்தலின் மத்தியில் வாழ்வைத் தொலைத்து மூலைக்குள் ஒதுங்கிக் கொள்ள, போராட்டத்தின் போது ஒதுங்கியிருந்தவர்கள் இப்போது மாவீரர் புகழ்பாடி பதவிக்கு வந்துள்ளனர்.

என்ன செய்வது? எங்கள் அரசியல்வாதிகளுக்கு மாவீரர்களைப் பிடிக்கும். ஆனால் போராளிகளைப் பிடிக்காது.

# ரணில்- கருவுடன் மனோ சந்திப்பு

ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், எதிர்க்கட்சியின் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க மற்றும் ஐ.தே.க தலைமைத்துவ சபை தலைவர் கரு ஜயசூரிய ஆகியோரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனித் தனியாக சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்புகள் கரு ஜயசூரியவின் இல்லத்திலும், எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்திலும் இடம்பெற்றன.

இந்த சந்திப்புகள் தொடர்பில் மனோ கணேசன் கூறுகையில்,

பொது எதிரணி மற்றும் பொது வேட்பாளர் தொடர்பான முன்னெடுப்புகள இறுதி கட்டத்தை அடைந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் ஏற்பட்டுள்ள சிற்சில முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறேன்.

பொது வேட்பாளர் தொடர்பான முடிவை ஐக்கிய தேசிய கட்சி எடுத்து அறிவிக்க வேண்டும். பிரதான கட்சி என்ற முறையில் இந்த உரிமை அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

அதேவேளை, பொது வேட்பாளர் மற்றும் பொது எதிரணி என்பவைகளை அடையாளப்படுத்த பொது சின்னத்தில் பொது வேட்பாளர் களமிறங்க வேண்டும் என்ற எமது கட்சி நிலைப்பாட்டை நான் இருவருக்கும் தெரியபடுத்தினேன்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சோபித தேரர் தலைமையிலான சமூக நீதிக்கான இயக்க கூட்டத்தில் கலந்துகொண்ட எமது கட்சி பிரதிநிதிகள் சண்.குகவரதன், பிரியானி குணரத்ன ஆகியோரும் இதையே தெரிவித்துள்ளனர்.

தனது கட்சியும், எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் விரும்பும் பட்சத்தில், தான் ஐ.தே.க உறுப்புரிமையிலிருந்து விலகி, எந்த ஒரு கட்சி அங்கத்துவமும் அற்ற அனைவரினதும் பொது வேட்பாளராக போட்டியிட தயார் என கரு ஜயசூரிய என்னிடம் கூறினார்.

180 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அகற்றும் இடைக்கால ஜனாதிபதியாக மாத்திரம் தான் பணியாற்ற விரும்புவதாக அவர் மேலும் கூறினார்.

அதேவேளை பொது வேட்பாளர் தொடர்பான பிரதான எதிரணி கட்சிகளின் நிலைப்பாடுகளை தாம் இப்போது கலந்து பேசி அறிந்துகொண்டு வருவதாகவும், இந்த அரசியல் கட்சிகளது பொதுவான பெருவாரி நிலைப்பாடுகளின் அடிப்படையிலேயே பொது வேட்பாளர் தொடர்பாக ஐ.தே.க. முடிவு எடுக்கும் எனவும், அந்த முடிவு 19ஆம் திகதிக்கு பிறகு ஏனைய எதிரணி கட்சிகளுக்கு அறிவிக்கப்பட்டு ஆதரவு கோரப்படும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். எவரும் இது தொடர்பாக கருத்துகளை கூறலாம். ஆனால், அரசியல் கட்சிகளே அரசியல் முடிவு களை எடுக்க வேண்டும் என்றும் ரணில விக்கிரம சிங்க கூறியதாக மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டார். (இ)

# இலாப நோக்கம் கொண்ட அரசியல் அழிவையே தரும்

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தற்காலிகமான இலாப நோக்கத்துடன் அரசியல் தீர்மானங்களை எடுத்தால் நாடு அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அழிவினை நோக்கிப் பயணிக்கும் என பிரதமர் தி.மு. ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் வஜிர இருகல் பண்டாரவின் வழிகாட்டலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு திஸ்ஸ மஹாராம சந்தகிரி விஹாரையில் இடம்பெற்ற சமூக வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கருத்தைத் தெரிவித்தார்

இங்கு பிரதமர் மேலும் உரையாற்றுகையில்- ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான சட்ட அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், அவரது உதவியினால் பாராளுமன்றத்திற்குப் பிரவேசித்துள்ள சிலர், ஜனாதிபதி அவர்களுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். இது கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

தமக்கு எதிரான கருத்தைக் கொணடவர்களுக்குக்கூட ஜனாதிபதி எந்தவித இடையூறுகளையும் மேற்கொள்ளவில்லை. சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் சமமாக மதித்த அவர் மீது குற்றஞ்சுமத்துவது நியாய மற்ற செயலாகும். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை என்றால் என்பது பற்றிய தெளிவில்லாமல் சிலர் அவருக்கெதிராகக் குற்றஞ் சுமத்துகின்றனர்.

தற்போதைய பாராளுமன்றத்தில் இருக்கும் ஆறு பேர் மட்டுமே அவருக்கெதிராகக் கருத்துத் தெரிவிக்கின்றனர். அந்த ஆறு பேரைச் சுற்றியுள்ளவர்களும் எந்தவிதத் தெளிவுமின்றி ஜனாதிபதியை விமர்சிப்பதனைக் காணலாம். வெளிநாட்டு டொலர் மற்றும் பவுண்களுக்கு அடிமையாகி செயற்படுவதன் காரணமாக நாடு அழிவினை நோக்கியே பயணிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே".

-மகாத்மா காந்தி (இந்திய தேசபிதா)

# நெடுந்தீவுப் பயணம் தடைப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடும் மழை, கடல் கொந்தளிப்புக் காரணமாக நெடுந்தீவுக்கான போக்குவரத்து நேற்று தடைப்பட்டது. இதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர். நேற்று முன்தினம் நெடுந்தீவு பயண சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு இயந்திரக் கோளாறு காரணமாக சேவையில் ஈடுபடவில்லை. தனியார் படகுகளே சேவையில் ஈடுபட்டன.

இந்நிலையில் நேற்று கடும் மழையும் கடற்கொந்தளிப்பும் காணப்பட்டதால் தனியார் படகுகள் சேவையில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை குமுதினி படகு இயந்திரக் கோளாறால் பயணசேவையில் ஈடுபட முடியாத நிலையில் தனியார் படகுகளும் மேல்கூரை இல்லாமையால் மழை பெய்யும்போது பயணத்தில் ஈடுபட முடியாத நிலையில் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் உண்டு



✦ பலவருடங்களாக பூட்டிக் கிடக்கும் அறை இருண்டு கிடக்கும். ஆனால், அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளி பரவும். அதுபோல, இறைவனின் கருணைப் பார்வை பட்டவுடனேயே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.

✦ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக் கொண்டுதான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரை சேரலாம்.

✦ இறைவனின் திருப்புகழைப் பாடும் போது, கைகளை அசைத்துக் கொண்டும், இசைத்துக் கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும்.

✦ சேற்றில் புரள்வதுதான் குழந்தையின் இயல்பு. ஆனால், தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத்தேற்றும் வழிமுறைகளை அருள்செய்கிறார்.

✦ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கை தான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப்பாதையில் கொண்டு சென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை சர்வதேச கிரிக்கெட்டை சீரழிக்கின்றது

## அர்ஜுன ரணதுங்க குற்றச்சாட்டு



இலங்கை உட்பட பல நாடுகளின் கிரிக்கெட் நிறுவனங்களுக்கு கிடைக்கும் நிதியிலிருந்து ஒரு பகுதியை அபகரித்து வருகின்ற இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையானது சர்வதேச கிரிக்கெட்டை சீரழித்துக் கொண்டிருப்பதாக ஜனநாயக தேசியக் கூட்டணியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுபினர் அர்ஜுன ரணதுங்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் விளையாட்டுத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தினார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை அணியானது திட்டமிடல்கள் இல்லாது இந்தியாவுக்கு சென்றிருக்கக் கூடாது. 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டியின் போது போட்டிகள் இடம்பெறுவதற்கு முன்பதாக இலங்கை கிரிக்கெட் சபையினருடன் சந்திப்பை ஏற்படுத்தி அதிக போட்டிகளை ஏற்பாடு செய்து வீரர்களை உளரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ வீழ்ச்சியடையச் செய்து விட வேண்டாம் என்று வலியுறுத்தியிருநதேன்.

இந்தியாவில் இலங்கை அணி ஐந்து போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. இந்தத் தோல்விக்கு தேர்வுக் குழுவே பொறுப்பு என்று கூற முடியாது. மாறாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை திருப்திப்படுத்தும் நோக்கில் செயற்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆகிய தரப்புக்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானங்களை மேற்கொள் கின்ற சந்தர்ப்பங்களில் விளை யாட்டுத் துறை அமைச்சர் கைப்பொம்மையாக இருந்துள்ளார்.

யுத்த காலத்தின் போது இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டதுடன் இலங்கையில் கிரிக்கெட் விளையாடுவதற்கான பாதுகாப்புச் சூழல் இருப்பதாக உலகுக்கு எடுத்துக் கூறிய தாக பிரதி அமைச்சர் சனத்ஜயசூரிய இங்கு குறிப்பிட்டார்.

இந்தியாவின் உதவிகளை நாம் மறக்கவில்லை. ஆனாலும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையானது சர்வதேச கிரிக்கெட்டை சீரழித்துள்ளது. இலங்கை உட்பட பல நாடுகளினது கிரிக்கெட் சபைகளுக்கு கிடைக்கும் நிதியின் ஒரு பகுதியை அபகரித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக பதவி வகிப்பதற்கு சீனிவாசனுக்கு அந்நாட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இருப்பினும் தற்போதும் அவர் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவராக இருக்கிறார். இவருக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் எதனையும் கூறவில்லை.

இலங்கை அணியானது சிறந்த அணியாகும். இதன் மூலம் விளம்பரங்களை சேகரித்து வருமானம் ஈட்டிக்கொள்ளும் நோக்கிலேயே இந்திய கிரிக்கெட் சபை இலங்கை அணிக்கு எதிராக அழைப்பு விடுக்கப்படுகிறது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தாளத்துக்கு ஆடும் நிலை இலங்கை கிரிக்கெட் சபைக்கு உருவாகியுள்ளது.

இதேவேளை, இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியுடன் தொடர்புபட்டிருப்பதான பாலியல் இலஞ்சம் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

## பாகிஸ்தான் - இந்தியா

## கிரிக்கெட் தொடர் விரைவில் ஆரம்பம்




மும்பையில் 2008 ஆம் ஆண்டு தீவிரவாதிகளின் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தானுடனான நேரடி கிரிக்கெட் போட்டி தொடரை இந்தியா இரத்து செய்தது.

கடந்த 6 ஆண்டாக இரு நாடுகள் இடையே டெஸ்ட் தொடர் நடைபெற்றது இல்லை.

இந்த நிலையில் இந்தியா-பாகிஸ்தான் இடையேயான கிரிக்கெட் போட்டி தொடர் அடுத்த ஆண்டு முதல் நடைபெறும் என்று இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

இந்தியா-பாகிஸ்தான் இடையே 2022 ஆம் ஆணடு வரை 6 கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கி விட்டது.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய சேர்மன் 2 வாரங்களுக்கு இந்தியா சென்று வந்தார். அடுத்த ஆண்டு முதல் தொடர் நடைபெறும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் இரு நாடுகள் இடையே முதல தொடர் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## இந்திய அணிக்கெதிரான தொடர் இலங்கையின் மோசமான கதை

### ஜெயசூரியா தெரிவிப்பு



இந்திய அணியுடனான இந்த தோல்வி இலங்கையின் மோசமான கனவு என இலங்கையின் முன்னாள் அணித் தலைவர் சனத ஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

இந்திய சுற்றுப்பயணம் செய்த இலங்கை அணியை 5-0 என்ற கணக்கில் வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா. இதனால் இலங்கைக்கு இந்த தொடர் மோசமான தோல்வியாக அமைந்து விட்டது.

இந்திய தொடர் மோசமான கனவாக முடிந்து விட்டாலும், நவம்பர் 26ஆம் திகதி தொடங்கவுள்ள இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடரில் இலங்கை மீண்டும் பழைய நிலைக்கு வரும் என தெரிவுக் குழு தலைவர் சனத் ஜெயசூரிய நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த மோசமான தொடர் பற்றி அவர் கூறுகையில், இலங்கை அணி இந்தியாவில அதிசயங்கள்நிகழ்த்தும் எனநான எதிர்பார்க்க வில்லை. சிறந்த மற்றும் ஒரு சவாலான ஆட்டத்தை வெளிப்படுத்தும் என கண்டிப்பாக எதிர்ப்பார்த்தேன. ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

சிறந்த 4 துடுப்பாட்டக்காரர்களில் ஒருவராவது 50 ஓவர் வரை நிலைத்து நிற்க வேண்டும் அதையும்இலங்கை அணி செய்ய தவறிவிட்டது. பந்து வீச்சில் ஒரு சிறந்த நிலை கிடையாது. பஎர்காயத்தால் அவதிப்படும் நிலையில் பந்து வீச்சும் மோசமாகவே இருந்தது.

ரசிகர்கள் இலங்கை அணியை விமர்சனப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். அதே சமயம் இந்த படு தோல்வி இலங்கை அணிக்கு நல்ல அனுபவமாக அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார். (க)

## சர்வதேச தரப்படுத்தலில் அஞ்சலோ மத்யூஸ் முதலிடம்



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அஞ்சலோ மத்யூஸ், சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளின் சகல துறை ஆட்டக்காரர்களுக் கான தரப்படுத்தலில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

மத்யூஸ் 420 புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த தரப்படுத்தலில் பாகிஸ்தான் அணியின் மொஹமட் ஹசிப் இரண்டாம் இடத்திலும், பங்களாதேஷ் அணியன் ஷகிப் ஹல் ஹசன் மூன்றாம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளார். இலங்கை அணியின் [illegible] ஐந்தாம் இடத்தில் தரப்படுத்தப் பட்டுள்ளார். (க)

## ATP டெனிஸ் தொடர் ஜோர்கோவிச் சம்பியன்



ATP டெனிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் இருந்து சுவிட்ஸர்லாந்தின் முனணி வீரர் ரோஜர் பெடரர் விலகியுள்ளார்.

இதன்மூலம் இந்த தொடரின் சம்பியன் பட்டத்தை சேர்பியாவின் நோவெக் ஜோகோவிச் வெற்றிகொண்டுள்ளார்.

உபாதை காரணமாக இறுதிப் போட்டியில் விளையாட முடியாத நிலைமை ஏற்பட்டதாக கூறியுள்ள பெடரர், ரசிகர்களிடமும் மன்னிப்பு கோரியுள்ளார்.


நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில [illegible]லெஸ் வவ்ரிங்காவை 2-1 என்ற செட் கணக்கில் ரோஜர் பெடரர் வெற்றிகொண்டிருந்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் நியூசிலாந்து சிறப்பான ஆட்டம்

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் நியூசிலாந்து சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான்- நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான 2-வது டெஸ்ட் டுபாயில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல்நாள் ஆட்ட முடிவில் நியூசிலாந்து 3 விக்கெட் இழப்பிற்கு 243 ரன் எடுத்திருந்தது. லாதம் 137 ரன்னுடனும், அண்டர்சன் 7 ரன்னுடனும் களத்தில இருந்தனர்.





நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. முதல் நாள் ஆட்டத்தில் எடுத்த 137 ரன்னுடன் லாதம் வெளியேறினார். அண்டர்சன் மேலும் இரண்டு ரன்கள் எடுத்த நிலையில் 9 ரன்னில் ஆட்டம் இழந்தார். அதன்பின் வந்த வோட்லிங் 39 ரன்னும், கிரேக் 43 ரன்னும் அடிக்க நியூசிலாந்து 403 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தது. பாகிஸ்தான் தரப்பில் ஷுல்பிகார் பாபர் 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் பாகிஸ்தான் முதல் இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர் சான் மசூத் 13 ரன்னிலும், தௌபிக் உமர் 16 ரன்னிலும் ஆட்டம் இழந்தனர். 3-வது விக்கெட்டுக்கு அசார் அலியும் யூனிஸ்கானும் ஜோடி சேர்ந்தனர். இந்த ஜோடி 2-வது நாள் ஆட்டம் முடியும் வரை விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது.



பாகிஸ்தான் இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 34 ரன்கள் எடுத்துள்ளது. அசார் அலி 6 ரன்னுடனும், யூனிஸ்கான் 1 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.(க)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது 69 ஆவது பிறந்த தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடினார். இதனை முன்னிட்டு அலரி மாளிகையில் ஜனாதிபதி குடும்பத்துடன் கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

## உலக செஸ் போட்டி

# விஸ்வநாதன் ஆனந்த்-கார்ல்சன் மோதிய 7 ஆவது சுற்று சமநிலை

நடப்பு சம்பியன் மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே)- விஸ்வநாதன் ஆனந்த் (இந்தியா) இடையிலான உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டி ரஷ்யாவின் சோச்சி நகரில் நடந்து வருகிறது. 12 சுற்றுகள் கொண்ட இந்த போட்டியில யார் முதலில் 6.5 புள்ளியை எட்டுகிறார்களோ அவர்களுக்கு சம்பியன் பட்டம் கிடைக்கும்.

இதில் முதலாவது, 4-வது, 5-வது சுற்றுகள் டிராவில் முடிந்தன. 3-வது சுற்றில் ஆனநதும், 2-வது மற்றும் 6-வது சுற்றில் கார்ல்சனும் வெற்றி பெற்றனர். 6 ஆட்டங்கள் முடிவில் கார்ல்சன் 3.5-2.5 என்ற புள்ளி கணக்கில் முன்னிலை வகித்தார். இந்த நிலையில் 7-வது சுற்று ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.

வெள்ளை நிற காயுடன் ஆடிய கார்ல்சன் தனது ராஜாவுக்கு முன் இருந்த சிப்பாயை இரண்டு கட்டம் நகர்த்தி ஆட்டத்தை ஆரம்பித்தார். கறுப்பு நிற காயுடன் விளையாடிய ஆனந்த் தன்னுடைய ராஜாவுக்கு முன் இருந்த சிப்பாயை 2 கட்டம் நகர்த்தி ஆட்டத்தை தொடங்கினார். கார்ல்சன் ரய்லோபஸ் முறையில் ஆட்டத்தை நகர்த்தினார்.


இந்த முறையில் தான் கார்ல்சன் 2-வது சுற்றில் வெற்றி பெற்று இருந்தார். ஆனால் ஆனந்த் மாற்றி ரய்லோபஸ் பெர்லின் முறையில் தாக்குதல் தொடுத்தார். இருவரும் மின்னல் வேக ஆட்டத்தை கடைப்பிடித்தனர். 8 நகர்த்தலுக்குள் ராணிகள் வெட்டுப்பட்டன. 32 நிமிடங்களில் இருவரும் 22 நகர்த் தலை மேற்கொண்டனர்.

இதனால் ஆட்டம் மிக விரைவில் முடிந்து சாதனை படைக்குமோ என்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் அதன் பிறகு ஆனந்த் தனது பாணிக்கு மாறாக நிதானத்தை கையில் எடுத்தார். திடீரென யாரும் எதிர்பாராத வகையில் ஆனந்த் தனது பிஷப்பை பலி கொடுத்து கார்ல்சனின் இரண்டு சிப்பாய்களை கபளீகரம் செய்தார்.

இது ஆட்டத்தில் திருப்பு முனையாக இருந்ததுடன், ஆனந்துக்கு பின்னடைவாகவும் அமைந்தது. ஒரு கட்டத்தில் ஆனந்துக்கு 4 சிப்பாய்களும், ஒரு யானை மற்றும் ராஜா இருந்தது. கார்ல்சனுக்கு இரண்டு சிப்பாய், ஒரு யானை, ராஜா ஆகியவற்றுடன் கூடுதலாக ஒரு குதிரை இருந்தது.

இதனால் யானைக்கு, யானை வெட்டுப் பட்டாலும் டிரா ஏற்படும் சூழ்நிலை நிலவியது. யானைக்கு, யானை வெட்டலாம் என்ற நிலை 29-வது காய்நகர்த்தலில் வந்த போது காரல்சன் சாமர்த்தியமாக தனது யானையை வைத்து ஆடி ஆனந்தின் சிப்பாயை காவு கொண்டார். ஆனந்துக்கு வெற்றி வாய்ப்பு இல்லை என்றாலும், கார்ல்சனுக்கும் வெற்றி திரிசங்கு நிலையாக தான் இருந்தது.

121-வது காய் நகர்த்தலில் ஆனந்த், யானைக்கு, யானையை வாங்கினார். அத்துடன் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இந்த ஆட்டம் 6 மணி 26 நிமிடம் நீடித்தது. (க)



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 69 ஆவது பிறந்தநாள் மற்றும் பதவியேற்ற தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் வாழ்வு சுபீட்சம் பெறவும் பணிகள் சிறக்கவும் நேற்றைய தினம் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் 14 ஆலயங்களில் பூஜை வழிபாடுகளும் அன்ன தானமும் மற்றும் பல நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதனைப் படங்களில் காணலாம்.

# பதுளையில் நேற்று மாணிக்கக்கல் மழை

(கொழும்பு)

பதுளை லுணுகல பிரதேசத்தில் மாணிக்கக்கல் மழை பெய்ததாக மக்கள் மத்தியில் வதந்தி பரப்பப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்றுக் காலை லுணுகல பிரதேசத்தில் கடுமையான மழை பெய்துள்ளது. மழையுடன் மாணிக்கக் கற்கள் விழுந்ததாக நினைத்து மக்கள் சில பொருட்களை பொறுக்கியுள்ளனர்.

லுணுகல நகரிலிருந்து வெல்லவாய பிரதேசம் நோக்கிச் செல்லும் நான்கு கிலோ மீற்றர் தூர பாதையில் இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மாணிக்கக் கற்களை பொறுக்கி எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் பயணம் செய்த லொறியொன்றிலிருந்து விழுந்த பாசான் வகைகளையே மக்கள் இவ்வாறு மாணிக்கக்கல் என நினைத்துள்ளனர்.

கோமேத மற்றும் ரபாஸ் என்னும் இரண்டு வகை பாசான் வகைகளே மக்களினால் இவ்வாறு பொறுக்கப்பட்டுள்ளது.

மாணிக்கக்கல் என எண்ணி வீதியை இடைமறித்த மக்களை பொலிஸார் விரட்டியடித்துள்ளனர். (எ-11)

# பயிலுநர்களாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் கிராம உத்தியோகத்தராக நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் அவர்களை இன்று யாழ்.மாவட்டச் செயலகத்தின் தாபனக் கிளைக்கு காலை 8.30 மணிக்கு சமுகம் தருமாறு யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு, ஜே.தவமலர் (895083470V), பி.அரவிந்தன் (910061801V), பி.ஜேம்ஸ் பொப்லர் (823192240V), ரி.பத்மலதா (878410955V) (ஏ)

# மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவின் பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் [illegible] தலைமையில் கல்லூரி [illegible] மண்டபத்தில் இந்நிகழ்வுகள் இடம்பெறும். (ஏ)




38 வருட மக்கள் சேவையில் இருந்த
மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்
உயர்திரு.சின்னத்துரை பாலசுந்தரம்
(கிராம அலுவலர்)

கிராம அலுவலராக 38 ஆண்டுகளில் 32 வருடம் பச்சிலைப்பள்ளி பளை பிரதேச செயலகத்திலும், 6 வருடம் வலி. கிழக்கு பிரதேச செயலகத்தில், கோப்பாய் மத்தி, கோப்பாய் தெற்கு பிரிவுகளிலும் கடமையாற்றி இன்று 19.11.2014 ஆம் திகதி மணிவிழா காணும் அப்பாவை அம்பாள் அருள் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:–
மனைவி: பவளராணி,
பிள்ளைகள்: கோகிலநாத் (அவுஸ்திரேலியா) துஜா, மேகலநாத், மருமகன்: சுகந்தன் (லண்டன்), சகோதரர்கள், மைத்துனர்கள்.

"பவளபதி"
159, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5143 (8363)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 வருடங்களி...

வில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே பொலிஸாரும், மருத்துவர் சங்கமும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

நாடளாவிய ரீதியில் வாகன விபத்துக்களி னால் உயிரிழந்தோரில் முதலிடத்தில் ஆயி ரத்து 448 பாதசாரிகளும், மோட்டார் சைக்கி ளில் சென்றோரில் ஆயிரத்து 350 பேரும் உயிரிழந்துள்ளனர்.

சாரதிகளில் 399 பேரும் பயணிகளில் 791 பேரும் விபத்துக்களில் கடந்த இரு வருட ங்களில் உயிரிழந்துள்ளனர். வடக்கிலுள்ள வாகன சாரதிகள் பொறுப்பற்ற முறையில் தாம் மட்டுமே வீதியில் செல்வதாக நினைத்து ஏனை யவர்களை கவனத்தில் எடுக்காது வாகனங்களை செலுத்துவதால்தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பாதசாரிகளும் சிறுதவறுகள் தானே என நினைத்து வீதி ஒழுங்குகளை மீறுவதனால் தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வடக்கு மாகாணத்தினை பொறுத்தவரை யில் இளம் வயதினரே வீதி விபத்துக்களில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக மோட்டார் சைக்கிளில் செல்கின்ற இளைஞர் களே விபத்துக்களில் சிக்கிக் கொள்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறுகின்ற விபத் துக்களில் 50 தொடக்கம் 60 வீதமானோர் 30 வயதுக்குட்பட்டவர்களாகவே காணப்படு கின்றனர்.

இதனால் இள வயதிலேயே பெரும்பாலா னோர் நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப் படுவதோடு நரம்பு சம்பந்தமான பிரச்சினை களுக்கும் ஆளாகின்றனர்.

ஆகையால் விபத்து நடைபெற முன் காப் பதே சிறந்ததாகும். வீதியில் செல்கின்ற ஒவ் வொருவரும் தன்னையும் பிறரையும் பாது காக்கும் வகையில் நடந்து கொள்ள வேண் டும்.

சாரதிகள் கவனயீனங்களால் அப்பாவி உயிர்களே காவு கொள்ளப்படுகின்றன.

ஆகையால் ஏனையோரை பாதுகாக்கும் வகையில் சாரதிகள் வாகனங்களை செலுத்த வேண்டும் என்றனர்.

இச்சந்திப்பில் யாழ்.மருத்துவர் சங்கத் தலைவர் வைத்தியர் முரளி வல்லிபுரநாதன், சிரேஷ்ட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் ஆர்.ரவிராஜ், என்புமுறிவு மருத்துவ சிகி ச்சை நிபுணர் வைத்தியர் கோபிசங்கர், சத்திர சிகிச்சை நிபுணரும் விரிவுரையாளருமான வைத்தியர் தயாளன், வைத்தியர் மயூரன், வைத்தியர் சுரேந்திரகுமார் மற்றும் பொலிஸார் உட்பட பலர் கலந்து கொண் டனர். (எ-4)

## இலங்கை அக...

கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும், தங்களை வேறு முகாமிற்கு மாற்றக் கோரி, கடந்த 4 நாட்க ளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்நிலையில், தமிழக அரசுடன் நடந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் விரக்தி அடைந்து 20 பேர் தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளனர்.

இதனையடுத்து இவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். (எ-11)

## மனித உரிமை...

பேரவையின் யுத்தக் குற்றச் செயல் விசார ணைகளுக்கு இலங்கை ஆதரவளிக்காத காரணத்தினால் அழுத்தம் பிரயோகிக்கப் பட்ட போதிலும், ஏனைய ஒத்துழைப்பு வழங் காத நாடுகள் மீது இவ்வாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதில்லை என அவர் தெரி வித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காத ஏனைய நாடுகள் மீது அழுத்த ங்கள் பிரயோகிக்கப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் அல் ஹுசெய்னின் இரட்டை நிலைப்பாடு அம்பலமாகியுள்ளது என அவர் தெரிவித்து ள்ளார்.

மனித உரிமைப் பேரவை போலியான முறையில் ஆதாரங்களை திரட்டுவதில் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவித்துள் ளார்.

இதன் காரணமாகவே சாட்சியமளிக்கும் கால அவகாசம் பூர்த்தியானதன் பின்னரும் சாட்சியங்கள் திரட்டப்படுவதாகக் குறிப்பிட்டு ள்ளார்.

இந்தக் கால அவகாசம் நீடிக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜாதிக ஹெல உறுமய வின் அமைச்சர்கள் பதவி விலகியதன் மூலம ஜனாதிபதியின் பலத்திற்கு எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது என வெளிவிவகார அமை ச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அனைவருடனும் சேர்ந்து ஒன்றிணை ந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நோக் கம் என்றும அதன்படி ஹெல உறுமயவின் யோசனை களை பரிசீலித்துக் கொண்டிருக் கையில் திடீரென அவர்கள் அரசாங்கத்தை விட்டுச் சென்றுள்ளதாக அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

ஹெல உறுமயவின் 35 யோசனைகளில முக்கியமானவை உள்ளதாகவும் அது குறி த்து திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளதாக வும் அமைச்சர் கூறினார்.

எனினும் ஜனநாயக நாட்டில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு உண்டு என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (எ-11)

## மேன்முறையீ...

உயர் நீதிமன்று மரணதண்டனை தீர்ப்பு வழங்கியது. இதனை எதிர்த்து மீனவர்கள் ஐவரும் தாக்கல் செய்திருந்த மேன்முறையீ ட்டை நேற்று செவ்வாய்க்கிழமை அவர்கள் வாபஸ் பெற்றுள்ளனர்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தொலை பேசியில் கலந்துரையாடியவேளை, மீனவர் களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை, ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் ஆயுள் தண்டனை யாக மாற்றப்பட வாய்ப்புள்ளதாகவும் அரசா ங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## அரசாங்கத்...

கட்சி நாடாளுமன்றத்திற்கு சட்ட மூலமொ ன்றை சமர்ப்பித்துள்ள போதிலும் அதனை நடைமுறைபடுத்த முடியாதென அரசாங்கம் அறிவித்துள்ளது என்றார்.

நீதிமன்ற சுதந்திரத்தை பலப்படுத்துவது மற்றும் ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு தேவையான சட்டத் திருத்தங்களை மேற் கொள்ளுமாறு தனது கட்சி வேண்டுகோள் விடுத்ததாகக் கூறிய சம்பிக்க ரணவக்க இதனை அமுல்படுத்துவதை தவிர்த்து திடீரென ஜனா திபதி தேர்தலொன்றை நடத்த அரசாங்கம் தீர்மானித்ததாகக் குற்றம் சாட்டினார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு சம்பந்தப் பட்ட சட்ட திருத்தங்களை மேற்கொள்ளுமாறு நாம் வேண்டுகோள் விடுத்தபோதிலும் அர சாங்கம் எமது வேண்டுகோளை நிராகரித் துள்ளதாகவும் இந்த நிலையில் எமக்கு மேலும் அரசாங்கத்திற்கு ஆதரவை வழங்க முடியாது.இதன் காரணமாகவே நாம் அமை ச்சு பதவிகளை இராஜினாமா செய்வதற்கு தீர் மானித்தோம் என்று கூறினார் சம்பிக்க ரண வக்க.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதி செயலாளரும் மேல மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில, அரசாங்கம் மேற்கொண்டு வரும் தவறுகளை அரசாங்கத்துக்குள் இரு ந்து கொண்டேதிருத்துவதற்கு தனது கட்சி முயற்சிகளை மேற்கொண்டதாகவும், ஆயி னும்அந்த முயற்சிகள் தோல்வியடைந்தாக வும் தெரிவித்தார்.

ஜனநாயகத்தைக் கட்டி எழுப்புவதற்கு தேவையான சட்ட திருத்தங்களை மேற் கொள்வதற்காக, ஆளும் கட்சியில் இருக்கும் குழுக்கள் உட்பட எதிர்க் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்களுடன் ஒன்றுபட்டு செயல்பட, தனது கட்சி தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## யாழ்ப்பாண...

இந்த நாணயக் குற்றிகள் இலங்கை யின் 25 நிர்வாக மாவட்டங்களையும் பிரதிபலிக் கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த நாணயக குற்றிகள் மத்திய வங் கியிலிருந்து விநியோ கிக்கப்பட்டதன் பின் னர் வணிக வங்கிகள மற்றும் மத்திய வங்கி யின் பிராந்திய அலு வலகங்கள் ஊடாக அவை புழக்கத்திற்கு விடப்படடுள்ளன.

புதிய 10 ரூபா நாணயக் குற்றிகளின முதலாவதுதொகுதியை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட கப்ரால் நேற்று முன் தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவி டம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக் கான குற்றியில் நல் லூர் ஆலயபடம் பொறிக்கப் பட்டுள் ளது. (எ-11)

## இலங்கையில்...

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் அங்கோலா, பங்களா தேஷ், புருண்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, ஐவரி கோஸ்ட், எதியோப்பியா, ஈரான், இஸ் ரேல், மாலி, மெக்சிகோ, மியான்மார், உக ண்டா மற்றும் இலங்கை உள்ளிட்ட 13 நாடு களில் தீவிரவாத நடவடிக்கைகள் தலையெ டுக்கும் அபாயம் காணப்படும் நாடுகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

இந்த நாடுகளில் தீவிரவாதம் மீண்டும் இடம்பெறுவதற்கான காரணிகளாக பல் வேறு அரசியல் செயற்பாடுகள், வன்முறை மற்றும் குழுஉறவு நிலைக் காரணிகள் இரு ப்பதாக இந்த அறிக்கையில் சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது. (எ-11)

## ரேடர் வலைய...

அமைக்கப்பட்டுள்ள 40க்கும் மேற்பட்ட இந் திய ரேடர்கள் மற்றும் செய்ம்மதிகளும் ஒருங கிணைக்கப்பட்டு, இந்தியாவைச் சுற்றியுள்ள கடற்பிராந்தியத்தில் உள்ள நடமாட்டங்கள் குறித்து முழுமையான தகவல்கள் சேகரிக் கப்படவுள்ளன.

2008ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இரு ந்து கடல்வழியாக இழுவைப்படகு ஒன்றில் சென்றடைந்த 10 தீவிரவாதிகள் மும்பையில் தாக்குதல் நடத்திய பின்னரே இந்தக் கண் காணிப்பு வலையமைப்பின் அவசியம் உண ரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை மீதான சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தவும் இவ் ரேடர் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)


### தவறிவிட்டது

சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட குலசேகரம் குகதாஸ் என்பவருடைய 88307 3916V எனும் அடையாள அட்டையுடன் கூடிய பேர்ஸ் ஸ்ரான்லி வீதிக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 0776110733

-ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். பிரெஞ் ஆசிரியரிடம் சரியான உச்சரிப்போடு படிக்க, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

af WORLD MOVIES – JAFFNA

Alliance Française de Jaffna

cordially invites you to the screening of

THE LAST STATION

The story of Leo Tolstoy's last days.

(2009, 112 min.)

on

Thursday 20 Novembre 2014 at 4:00 p.m.

at

Alliance Française de Jaffna

61, Kachcheri-Nallur Road, Jaffna.

Phone: 021 222 8093

English language. Free entrance.

(8358)

உலகத்திலேயே தரமான நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை விற்பதில் பெருமைப்படுகின்றோம்.

உங்களினதும் உங்கள் குழந்தைகளினதும் ஆரோக்கியமான வாழ்வுக்கு நிரந்தர தீர்வு




- உங்கள் வீட்டு கிணற்றுத் தண்ணீரையே நல்ல தண்ணீராக மாற்றித்தரும்.
- தண்ணீரில் உள்ள கல்சியம், உப்பு, கிருமிகள் மற்றும் அனைத்து தாதுக்களையும் நீக்கி சுத்தமான தண்ணீராக மாற்றித்தரும்.
- வீட்டுக்கு மட்டுமல்ல தேநீர் விடுதிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும் மற்றும் ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்களுக்கும் எல்லா விதமான RO இயந்திரங்களும் உண்டு.
- இலவசமாக தண்ணீர் பரிசோதனை செய்து தரப்படும்.

(TDS) Total dissolved Solids 100% தூய்மையான குடிநீர்




1.யாழ்ப்பாணம் : (0212217744, 0773554749) 2.முல்லைத்தீவு : (0775634008) 3.வவுனியா : (0779912399) 4.கொழும்பு : (0771987616)

வீனஸ் எண்டப்பிறைசஸ்

இல.477, 2/1 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

விற்பனைக்கு பிந்தியசேவை

venusroslk@gmail.com www.venusaquaro.lk

VENUS AQUA RO SYSTEMS (8359)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.